கல்கி



ஈறு உபாதைகள் மற்றும் பற்சிதைவு போர்ஹான்ஸ் பற்பசையினால் வெற்றிகரமாக முறியடிக்கப்படுகின்றன

தாமாகவே விரும்பி எழுதப்பட்ட கடிதங்கள் * இவற்றை நிரூபிக்கின்றன.

* இந் நற்சாட்சிக் கடிதங்களை ஜாப்ரே மானேர்ஸ் & கோ. லிட். கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.



தங்களுடைய போர்ஹான்ஸ் பற்பசையை நான் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக உபயோகித்து வருவதால், எனக்கு இன்று 65 வயதும் 5 மாதங்கள் ஆகியும் என்னுடைய 32 பற்களும் இன்னமும் வலுவுடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கின்றன. நானது தேதிவரை நான் எவ்விதமான பற்கோளாறினாலும் அவதிப்பட்டதில்லை.

டி. என். ஆ.
அஸ்ஸாம்

எனக்குபோர்ஹான்ஸினால் ஏற்பட்ட நல்ல பலனைக் கண்டபின் இப்போது என் குடும்பத்தில் எல்லோரும் போர்ஹான்ஸையே உபயோகிக்கிறார்கள். அதற்கு முன்னால், நான் எப்பொழுதும் பல்வலி மற்றும் ஈறு உபாதையால் அவதிப்பட்டு வந்தேன். இப்போது போர்ஹான்ஸின் பயனாக, என் பற்கள் வெண்மையாகவும், உறுதியாகவும் ஈறுகள் வலுவாகவும் இருக்கின்றன. பலவருடங்களாகவே எனக்கு ஈறுகளில் புண் ஏற்படவில்லை. அப்பப்பா! நான் வேறெந்தப் பற்பசையை உபயோகிப்பதாகக் கனவுகூடக் காணமாட்டேன்.

ஜி. என். டில்லி.

என்னுடைய பற்களின் வெண்மைக்கும், ஒளிக்கும் நான் ரொம்ப நாட்களாகவே உபயோகித்து வரும் போர்ஹான்ஸ் பற்பசைக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளேன். நான் 27 வயதுள்ள இளைஞன். வெற்றிலை பாக்கு மற்றும் புகையிலை உபயோகிக்கிறேன். புகையிலைபோடுவதால் பற்களில் கறையும், பழுப்பும் ஏற்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் போர்ஹான்ஸ் பற்பசை மந்திரஜாலம்போல, என் பற்களிலுள்ள கறையைப்போக்கி, அவற்றை வெண்மையாகவும், ஒளிவீசும்படியும் இருக்கச் செய்கிறது.

பி. பி பங்களூர்.

போர்ஹான்ஸ்


ஒரு பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை.



இதற்கு உகந்த, சிறந்த சேர்க்கைக்கு.

போர்ஹான்ஸ் *டபிள்-ஆக்ஷன்* டூத் பிரஷ் உபயோகியுங்கள்.

- இந்த டூத் பிரஷ் மட்டுமே உங்கள் பற்களைச் சுத்தம் செய்வதோடு, ஈறுகளையும்
- இதமாகத் தடவிக்கொடுக்கிறது.



T 32 A. TAM


டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்



துள்ளி
விளையாடும்
பொழுதோ.
ஓய்வு பெறும்
பொழுதோ...!
அவர்கள்
எப்பொழுதும்
வளர்ந்து
கொண்டே
இருக்கிறுர்
கள்!
கல்ஸாளு-டி
வைட்டமின் தீவிரச் சேர்க்கையுடைய கால்சியம்

கல்கி



படவிளக்கம் 24ம் பக்கம் பார்க்க

பொருளடக்கம்


சோபகிருது, ஆவணி 9–ஆகஸ்டு, 25உ 1963

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

புகைபிடிக்கும் இங்கிதம்

பெண் மனம் புண்படா வண்ணம்...

மாதர்களோடு புழங்குகையில், இன்றியமையாதபோது மட்டுமே புகைபிடியுங்கள்—அதுவும் பெண் மனம் நோகாத வண்ணம் புகை பிடிக்கையிலே பெண்மணிகளை எதிர்ப்பட்டால், முகமன் கூறுவதற்கு முன் சிகரெட்டை அகற்றிக்கொள்வதே நலம் அவர்களைக் கடந்து சென்ற பிறகே தொடர்ந்து புகை பிடிப்பது நாகுக்கு.



உயரிய பண்போடு உபயோகிப்பதற்கும் உதவுவதற்கும் உகந்தது

பனாமா




இழுக்க இழுக்க இன்பம்– இறுதிவரை

விசேஷக் கலவை செய்வோர்,
கோல்டன் டுபாக்கோ கம்., ப்ரைவேட் லிட்.,
பம்பாய்–56.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT. 617. TAM. Greens' Advtg.



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 4

‘பிராவ்தா’வின் கண்டனம்

ருஷ்ய அரசாங்கத்தின் குரலாகக் கருதப்படும் ‘பிராவ்தா’ பத்திரிகையில் பாரத நாட்டில் ஆளும் கட்சிக்கு எதிராக உருவாகிவரும் எதிர்ப்பினைப் பற்றிக் கவலையும் கண்டனமும் தெரிவிக்கும் வகையில் ஒரு கட்டுரை வெளியாகி யிருக்கிறது. ராஜாஜி, ஆசாரிய கிருபளானி, ஜயப்பிரகாஷ் நாராயண், கோல்வால்கர், ஜெனரல் கரியப்பா போன்ற பெரும் தேசபக்தர்களைப் பிற்போக்காளர்கள் என்று அது குறைகூறுகிறது.

முன்னொரு சமயத்தில் தலைவர் ராஜாஜி, ‘கம்யூனிஸ்ட்டுகள் என்னைக் கண்டிப் பதே நான் செய்வது சரி என்பதற்குச் சான்றாகும்’ என்று கூறியது இப்போது நினைவுக்கு வருகிறது.

நேருஜியின் தலைமையில் இந்தியா அடைந்துள்ள ‘மகத்தான முன்னேற்ற’த் தைப் பாராட்டும் ‘பிராவ்தா’ பத்திரிகை இந்தியாவில் கம்யூனிஸ்ட்டுகளால் அரசியல் — பொருளாதார சுதந்திரங்கள் நிலைபெற்றிருப்பதாகவும் இதனை எதிர்க் கட்சிகள் குலைப்பதாகவும் குற்றம் சாட்டுகிறது. எதிர்க்கட்சிகளைச் சாடியதோடு நில்லாமல் காங்கிரஸுக்குள்ளேயே ‘கம்யூனிஸ எதிர்ப்பு’ மனப்பான்மைக்கு இடமேற்பட்டு வருவதால் பாரதநாட்டில் ஜனநாயகம் வலுக்குன்றி வருகிறது என்றும் கூசாமல் எழுதி யிருக்கிறது. அதாவது இந்நாள் வரை காங்கிரஸும் கம்யூனிஸ்ட்டு கட்சியும் வித்தியாசமில்லாமல் இணைந்திருந்ததையும், தற்போது எஸ். கே. பாட்டீல் போன்றவர்கள் சற்றே எழுச்சி பெற்றிருப்பது அந்த இணைப்புக்குப் பலவீனமென்பதையும் கூறாமல் கூறியிருக்கிறது.

ஜனநாயக நாடுகளில் பத்திரிகைகள் தனி நபர்களால் நடத்தப்படுகின்றன. அங்குள்ள பத்திரிகைகளுக்கு அந்தந்த அரசாங்கங்கள் பூரண சுதந்திரமும் அளித் திருக்கின்றன; அல்லது அளித்திருப்பதாகச் சொல்லிக் கொள்கின்றன. அந் நாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகும் கருத்துக்கள் அரசாங்கத்தின் கருத்துக்கள் என்று யாருமே எடுத்துக் கொள்வதில்லை. ஆனால் கம்யூனிஸ ஆட்சியில் பத்திரிகைகள் யாவும் சர்க்கார் உடைமைகளே. அதிலும் ‘பிராவ்தா’ போன்ற பத்திரிகையில் வெளி வரும் கருத்து முழுக்க முழுக்கச் சர்க்காரின் கருத்து என்றே உலகம் கருதி வருகின்றது.

ஒரு நாட்டு அரசாங்கம் மற்றொரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவது கூடாது என்பது சம்பிரதாயம். இப்பொழுது அதற்கு முற்றும் மாறுபட்ட வகையில் ‘பிராவ்தா’ பத்திரிகை எழுதியுள்ளது. இது எவ்வாறாயினும், ‘பிராவ்தா’ பத்திரிகை யின் கோபம் எதிர்க்கட்சியினர்களுக்கு, முக்கியமாக ராஜாஜி அவர்களுக்குப் பெரும் பாராட்டென்றே வைத்துக்கொள்ள வேண்டும்.

வானப் பாதுகாப்பு, அமெரிக்க வானொலி இவ் விஷயங்களில் நாம் மேல் நாடுகளின் உதவியைப் பெறாமல் திண்டாட வேண்டும் என்பதே ‘பிராவ்தா’வின் நோக்கம். இந்தியாவின் எதிர்க் கட்சியினரையும் மேல்நாட்டு ஏகாதிபத்தியவாதி களையும் ஒன்றுசேர்த்து இந்திய சர்க்காரைக் குழப்பப் பார்க்கிறது. இதை நமது சர்க்கார் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

என்ன சேதி?

ஏமாற்று நாடகம்

தில்லிக்குச் சென்றுவிட்டு வந்தவர்கள் காமராஜ் திட்டம் வெறும் ஏமாற்று நாடகமாகத்தான் அரங்கேற்றப்படுகிறது என்று கூறுகிறார்கள். காங்கிரஸ் மந்திரிகள் எப்படித் 'தியாக புத்தி'யுடன் பதவியைத் துறக்கிறார்கள் என்று நடித்துக் காட்ட இது ஓர் அசட்டு உபாயம். ஆனால் உண்மையில் இவ்வாறு பதவியிலிருந்து விலகுவதென்பது அந்தந்த மந்திரிகளைச் சாராமல் பிரதமரின் பொறுப்பில் விடப்பட்டிருப்பது 'தியாக சீலத்தின்' பொய்ம்மையைத் தெற்றெனக் காட்டுகிறது. 'நீங்கள் விலகினால் தான் நான் விலகுவேன்' என்பதுபோல் காங்கிரஸ் தலைவர்களுக்குள் போட்டி எழுந்ததன் காரணமாகவே இவ்விஷயத்தைப் பிரதமரின் ஆக்ஞைக்குப் பூரணமாக விட்டிருக்கிறார்கள். தியாக யக்ஞம் என்பது சுயநல முன்னேற்றம் என்கிற புகைமூட்டமாகிவிட்டது.

காமராஜ் திட்டத்தை அமுல் செய்யும் ஆர்வத்தில் இன்னொரு உண்மையும் அம்பலமாகிறது. நெருக்கடி நிலைமை நீடிப்பது எவ்வளவு யுக்தமற்றது என்பதே அது. ஆட்சி மொழி, அரசியல் சாஸனத் திருத்தம் போன்ற சர்ச்சைக்குரிய பிரச்னைகளைக் கிளறிவிட்டதாலும் கைது செய்யப்பட்ட கம்யூனிஸ்டுகளை விடுதலை செய்ததாலும் நெருக்கடி ஒரு மாயை என்பது வெளியாயிற்று. இப்போது காமராஜ் யோசனைப்படி நாட்டு அரசாங்கங்களில் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்துவது இந்த உண்மையையே மேலும் பளிச்சென்று விளக்குகிறது.

மணமான பெண் எப்படிப் பிறந்தகத்திடம் அன்பு இருந்தாலும் புகுந்த வீட்டுக்கே தன் முழு முதற் கடமையைச் செய்கிறாளோ அதே போல் ஆட்சியாளர்கள் நிர்வாகப் பொறுப்பை முதன்மையாகவும் கட்சி வேலையை இரண்டாம் பட்சமாகவும் கருதுவது தான் கிரமம்.


முன்னாள் காங்கிரஸ் அக்ராசனர் ஸ்ரீ யு. என். தேபர், காமராஜ் திட்டம் தீர ஆலோசித்துச் செய்யப்பட்ட முடிவல்ல; அவசரப்பட்டு இதை அமுல் நடத்தப் பார்த்தால் வெறும் கேலிக் கூத்தாக முடிந்துவிடும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார். காற்று எப்படி வீசத் தொடங்கியிருக்கிறது என்பதை இதிலிருந்தே புரிந்துகொள்ளலாம்.

சேலம் மகாநாடு

சேலம் சுதந்திரக் கட்சிக் குழுவினர் நல்ல முறையில் மாநாடு நடத்தி நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு விட்டனர். ஸ்ரீமான்கள் வி. பி. மேனன், லோபோ பிரபு, ஜி. கே. சுந்தரம், சா. கணேசன், எஸ். எஸ். மாரிசாமி முதலியோர் பங்கெடுத்துக் கொண்டு இன்றைய ஆட்சி

நாச வேலை






ல் உள்ள ஊழல்களையும், தவறான
காள்கைகளையும் எடுத்துரைத்தார்கள்.
ஸ்ரீ வி. பி. மேனன் அவர்கள் 17வது
ருத்தப் பிரேரணை கேரள ராஜ்யத்
ல் மட்டும் 30 லட்சம் விவசாயிகளைப்
ரதேசிகளாக்கிவிடும் என்று கூறினார்.

ஏழைகள் குடித்துக் கெட்டுப் போகி
ர்களே என்று திப்பு கல்தான் ஈச்ச
ரங்களை யெல்லாம் வெட்டிவிடும்படி
சான்னான். (மைசூர் ராஜ்யத்தில்
ந்நாட்களில் ஈச்ச மரத்திலிருந்துதான்
ர் இறக்கப்பட்டு வந்ததாம்). இப்பு
க்குப் பின் வந்த ஒரு மூட அரசன்
ச மரம் மட்டும் என்ன? 'மரம்'
ன்றால் தென்னை மரம், மாமரம் எல்
ாமும்தான் அடங்கும், என்று தென்
ந் தோப்புக்களையும், மாந்தோப்புக்
ளையும் அழிக்க உத்தரவிட்டிருந்தால்
ப்படி இருக்கும்? இந்த மாதிரிதான்
ருக்கிறது 'எஸ்டேட்' என்ற சொல்
க்குள் ரயத்துவாரி நிலங்களும் அடங்
ம் என்று 17வது திருத்தப் பிரேரணை
காண்டு வருவது என்றார் ராஜாஜி.
ாநாட்டுக்குப் பின் சேலம் போஸ்
மைதானத்தில் ஹிந்தித் திணிப்பை
எதிர்த்து ஒரு மாபெரும் கூட்டம் நடை
பெற்றது. தென்னகம் ஹிந்தித்
திணிப்பை எப்படி எதிர்க்கிறது என்ப
தற்கு அந்தக் கூட்டத்தில் கூடிய ஜனத்
தொகை சான்றாக விளங்கியது. ஒரு
லட்சம் பேர் கூடியிருந்தனர்.

அமுதுக்கு அபிஷேகம்

தஞ்சை மாவட்டத்தில் நன்னிலத்
துக்கு அருகேயுள்ள திருக்கண்ணபுரம்
ஸ்ரீ வைஷ்ணவ திவ்விய க்ஷேத்திரங்
களில் புகழ் பெற்ற ஒன்று. இங்கு
கோயில் கொண்டுள்ள ஸ்ரீ சௌரிராஜப்
பெருமானை ஐந்து ஆழ்வார்கள் துதித்
திருக்கிறார்கள். 'கண்ணபுரத்தமுது'
என்று போற்றப்படும் பெருமானுடைய
திருக்கோயிலில் செப்டம்பர் 6ந் தேதி
வெள்ளிக் கிழமையன்று காலை மகா
கும்பாபிஷேகம் நடக்கவிருக்கிறது. திர
விய கைங்கரியமும், திவ்விய தரிசனமும்
செய்து அன்பர்கள் சௌரிராஜப் பெரு
மானுடைய அருளை அடைய வேணும்.

பிரபல திருமணம்



சத்ய குமார் — ஸ்வர்ண குமாரி

டாக்டர் ஸ்ரீ C. சத்யநாராயணு அவர்கள் குமாரர் சிரஞ்சீவி **சத்ய குமார்** M.B.B.S., அவர்களுக்கும் ஸ்ரீ R. V. V. S. பிரசாத் அவர்கள் குமாரி சௌபாக்கியவதி **ஸ்வர்ண குமாரி**, M.B.B.S., க்கும் சமீபத்தில் திருச்சானூரில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள்!

கல்கி

வெள்ளி விழா பரிசுத் திட்டம்

'கல்கி' பத்திரிகைக்கு இன்னும் இரண்டே ஆண்டுகளில் இருபத்தைந்தாவது ஆண்டு பிறக்கப் போகிறது. வெள்ளி விழாவைச் சிறந்த முறையில் கொண்டாட இருபத்தையாயிரம் ரூபாய் பரிசு அளித்து எழுத்தார்வத்தை வளர்க்கத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த அறிவிப்பைக் 'கல்கி'யில் கண்டதுமே எழுத்தாள அன்பர்களும் எழுத்தார்வம் மிக்க நண்பர்களும் மிகுந்த சிரத்தை காட்டிக் கடிதத்துக்குமேல் கடிதங்களாக எழுதி வருகிறார்கள்.

'இலங்கை எழுத்தாளர்கள் பங்கு கொள்ளலாமா?' என்று ஒரு கடிதம். 'ஒருவர் எத்தனை கதைகள், நாவல்கள் எழுதலாம்?' என்று மற்றொரு கடிதம். 'நாவல்கள் எத்தனை பக்கங்கள் இருக்க வேண்டும்?' என்று வேறு ஒரு கடிதம். இப்படியாகப் பல கடிதங்கள் வருவதிலிருந்து எழுத்தார்வம் வளர்ந்துள்ள இந்த நாட்களில் சிறந்த கதைகளும் நவீனங்களும் 'கல்கி' போட்டிக்கு வரும்; ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக்கொண்டு நன்றாயமைந்து எந்தக் கதைக்கு அல்லது நாவலுக்குப் பரிசு கொடுக்கலாம் என்று பஞ்சாயத்தார்களுக்குப் பெரும் பிரச்னையை உண்டுபண்ணி விடலாம் என்று தோன்றுகிறதல்லவா?

உலகத்தின் எந்தப் பகுதியிலிருந்தாலும், தமிழ் மொழியில் எழுதத் தெரிந்த யாரும் 'கல்கி'யின் வெள்ளி விழாப் பரிசுத் திட்டத்தில் தாராளமாகக் கலந்து கொள்ளலாம்.

சிறு கதைகள் 'கல்கி'யில் சுமார் எட்டுப் பக்கங்கள் வரக்கூடிய அளவுக்கு இருக்கலாம். ஒருவரே எத்தனை கதைகள் வேண்டுமானாலும் எழுதலாம்.

எட்டு மாதம் முதற் கொண்டு ஓர் ஆண்டு வரை 'கல்கி'யில் தொடர்ந்து வரும் அளவுக்குத் தொடர்கதைகள் எழுதலாம். இதழுக்கு எட்டுப் பக்கங்கள் என்று கணக்குப் போட்டுக் கொண்டு எழுதுங்கள். ஒருவர் எத்தனை நாவல்கள் வேண்டுமானாலும் எழுதலாம்.

எழுத்தாளர்களின் படைப்புகளை முதன் முதல் வெளியிடும் உரிமையைத் தவிர மற்ற உரிமைகளையெல்லாம் 'கல்கி' அவர்களுக்கே விட்டு விடுகிறது.

பரிசுத் திட்டம் சம்பந்தமான எந்த விஷயத்துக்கும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

புகழ்பெற்ற பஞ்சாயத்தார்கள் கதை, நாவல்களைத் தேர்வு செய்யும் பொறுப்பை ஏற்பார்கள்.

முடிவுத் தேதி தெரியும் அல்லவா? 30-9-1964. ஆற அமர யோசித்து எழுதுங்கள்.

பரிசு விவரத்தை மீண்டும் நினைவூட்டுகிறோம்.

○●○

நாவல்களுக்கு மூன்று பரிசுகள்

முதற் பரிசு	... ...	ரூ. 10,000
இரண்டாவது பரிசு	... ...	ரூ. 7,500
மூன்றாவது பரிசு	... ...	ரூ. 5,000

சிறுகதைகளுக்கும் மூன்று பரிசுகளே


முதற் பரிசு	... ...	ரூ. 1,000
இரண்டாவது பரிசு	... ...	ரூ. 500
மூன்றாவது பரிசு (கதை ஒன்றுக்கு ரூ. 100 வீதம் 10 கதைகளுக்கு)	...	ரூ.1,000

○●○



புதியது

ப்ரோடெக்ஸ் ஒரு சர்வ-காரிய டால்க். அது குடும்பத்தினர் அனைவருக்கும் மிகச்சிறந்தது.




ப்ரோடெக்ஸ் ஒரு உயர்ந்த ரக, மனோரம்மிய நறுமணமுடைய, சர்வ-காரிய டால்க். எல்லாக் குடும்பத்தினருக்கும், குளித்தபிறகும், கோடைக்காலத்தில் குளிர்ச்சிக்கும் மிகச் சிறந்தது. ப்ரோடெக்ஸ் வாங்குங்கள்—மிக மிகப்பெரிய டப்பா—மிகமிகக் குறைந்த விலை.



ப்ரோடெக்ஸ்

ஆல்-பர்ப்பஸ் டால்கம் பௌடர்

PTP-6-7-TAM.



கண்ணும் கமலம்
கமலமே கைத்தலமும்
மண்ணளந்த பாதமும்
மற்றவையே—எண்ணில்
கருமா முகில்வண்ணன்
கார்க்கடல்நீர் வண்ணன்
திருமா மணிவண்ணன்
தேசு !

ன்று தாமரை மலரை உபமான
ாகச் சொல்லி வர்ணிக்கிறார்.

முதலில் கண்களையும், கைத்தலத்
தயும் பாடுகிறார் :

கண்ணும் கமலம்
கமலமே கைத்தலமும்

[கைத்தலம் - உள்ளங் கை]

திருமாலின் கண்கள் தாமரை
லர்கள் போன்றவை. உள்ளங்கையும்
ாமரை மலர் போன்று இருக்கிறது.

மண்ணளந்த பாதமும்
மற்றவையே —

[மண்ணளந்த பாதமும் - பூமியை அளந்த
ப்பாதங்களும். மற்றவையே - அவ்வாறே
மரை மலர்கள்தாம்.]

அவனுடைய திருவடிகளும் தாமரை மலர்களே.

— எண்ணில்
கருமா முகில்வண்ணன்
கார்க்கடல்நீர் வண்ணன்
திருமா மணிவண்ணன்
தேசு.

[கருமா முகில்வண்ணன் - சியாமள மேக வண்ணன். கார்க்கடல் நீர் வண்ணன் - கரிய கடல் நீரின் நிறத்தை உடையவன். திருமா மணிவண்ணன் தேசு - அழகிய நீலமணி போன்ற ஒளி வீசும் கடரழகை. எண்ணில் - தியானித்தால்; திருமாலின் மூர்த்தி சொரூபம் தோன்றும் என்கிறார்.]

திருமாலின் மேனி நிறம் மேக வர்ணம். அவனுடைய செவ்வரி படர்ந்த கண்களும், உள்ளங்கையும், உள்ளங்காலும் எல்லாம் தாமரைச் செந்நிறம் !

கண்ணும் கமலம்
கமலமே கைத்தலமும்
மண்ணளந்த பாதமும்
மற்றவையே — எண்ணில்
கருமா முகில்வண்ணன்
கார்க்கடல்நீர் வண்ணன்
திருமா மணிவண்ணன்
தேசு !



ஒரு குதூகலக் காட்சி: ஸ்ரீ சதாசிவம், ஸ்ரீமதி எம். எஸ்., சரோஜினி தேவி, நேருஜி

இன்னிசைக்கு




'உடன்பிறந்தவர் பெருமையைப் பிறந்தகத்தில் எடுத்துச் சொல்வது' என்று ஒரு பழமொழி உண்டு. ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் அருமை பெருமைகளைப் பற்றிக் 'கல்கி' வாசகர்களுக்கு எழுதும்போது இந்தப் பழமொழிதான் நினைவில் வருகிறது. ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் 'பிறந்தகம்' ரொம்ப ரொம்பப் பெரியது. அது 'கல்கி' வாசகர்களோடு நின்று விடவில்லை. தமிழ் தெரிந்த வீடுகளெல்லாம், தமிழ் தெரியாவிட்டாலும் சங்கீத சாஸ்திரம் தெரிந்த வீடுகள் எல்லாம், தமிழும் இசை நுட்பமும் தெரியா விட்டாலும் இன்னிசையைக் கேட்டு வசப்படத் தெரிந்த வீடுகளெல்லாம் எம். எஸ்.ஸின் பிறந்தகம் தான். இன்று அவர் மேல்நாடு செல்கிறார் என்றறியும்போது அகில பாரதத்திலும் எண்ணிறந்த இல்லங்களில் தங்கள் சகோதரி ஒருவர் சீமை செல்வது போல் இதைப் பற்றி உவகையுடன் பேசுகிறார்கள். இந்திய இசை உலகில் எம். எஸ். அடைந்துள்ள பெருமையை வேறு யாராவது பெற்றிருப்பார்களா என்பது சந்தேகமே. ஆனால் அப்படிக் கொஞ்ச நஞ்சம் சந்தேகிக்கக் கூட இடமில்லாத இன்னொர் உண்மை உண்டு. எம். எஸ். இந்நாட்டு மக்களைத் தமது இசையால் மகிழ்க்கச் செய்து அவர்களின் பாராட்டுதலை மட்டும் பெறவில்லை; தமது சமூக சேவையினாலும் வேறெந்தக் கலைஞரும் பெறாத அளவுக்கு மக்களின் அன்பையும் பெற்றிருக்கிறார் என்பதுதான் அது.


தெய்விகத்தின் மதுரமும் தமிழின் மதுரமும் இசையின் மதுரமும் ஒன்றாக இசைந்த மதுரை மாநகரத்தில் நாத தீபத்துக்குப் பல தலைமுறையாகத் தைலம் இட்டுவரும் இசைக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர் மதுரகான வாணியான எம். எஸ். சுப்புலக்ஷ்மி. அவரது பாட்டி அக்கம்மாள் வயலின் வாத்தியத்தில் சிறந்து விளங்கியவர். அன்னை ஷண்முக வடிவு அம்மாள் வீணைகான விதுஷி. வாத்தியங்களின் மூலம் கர்நாடக சங்கீதத்தை வாரி அளித்த குடும்பத்தில் அந்த வாத்தியங்களுக்கும் எட்டாத நுட்பதிட்பங்களைச் சாரீரத்தில் பெற்ற சுப்புலக்ஷ்மி 1916ம் ஆண்டு செப்டம்பர் 16ந் தேதி பிறந்தார். 'குஞ்சம்மாள்' என்று செல்லமாக அழைக்கப்பட்ட சுப்புலக்ஷ்மி நாத அலைகளிலேயே ஊர்ந்த பால ஹம்ஸமாக வளர்ந்தார். தாம் விரல் வழியே வீணையில் எழுப்பிய இசையை, ஏன் எழுப்ப முடியாத இசையைக் கூட, குழந்தை குஞ்சு தனது குரல் வழியே எழுப்புவாள் என்று எண்ணி அகமகிழ்ந்தார் ஷண்முகவடிவு.

நாத வித்தையைத் தொடங்கினாள் குஞ்சு. மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்க வேண்டுமா? இசை தானே அவளிடம் ஊறிற்று; அவள் இசையில் ஊறினாள். பத்து வயதுக்குள்ளேயே அன்னையுடன் மேடையில் அமர்ந்து அவர் வீணை வாசிக்கத் தானும் உடன் பாடினாள். அன்னைக்கு அநுகூலமாகப் பாடுவதுதான் அவள் உத்தேசம். ஆனால் இதனால் ஒரு பிரதிகூலம் ஏற்பட்டது. ஸ்ரீமதி ஷண்முகவடிவுடைய வீணையின் இனிமையை ரசிப்பதா, குஞ்சுவின் பிஞ்சுக் குரல் இனிமையை ரசிப்பதா என்று புரியாமல் ரசிகர்கள் திண்டாடினர். அந்த நாளில் அன்னையும் மகளும் சேர்ந்து செய்த கச்சேரிகளை இன்றும் நினைத்து அதிசயப்படுகிறவர்கள் இருக்கிறார்கள்.

ராஜன்பாபுவிடமிருந்து ராஷ்டிரபதி பரிசைப் பெறுகிறார் ஸ்ரீமதி எம். எஸ்.



ஸ்ரீ எம். எஸ்.



ஹார்வுட் பிரபு தம்பதியுடன் சதாசிவம் தம்பதியினர். ஸ்ரீ செம்மங்குடியும் உடன் இருக்கிறார்.

சுப்புலக்ஷ்மிக்குப் பத்து வயதானபோது ஸ்ரீமதி ஷண்முகவடிவு இசைத் தட்டில் வீணை கானத்தைப் பதிவு செய்யச் சென்னைக்கு வந்தார். அருமை மகளையும் அழைத்து வந்தார். தாம் வீணை வாசித்து அது இசைத்தட்டில் பதிவானபின் 'குழந்தையின் பாட்டையும் ரிகார்டு செய்ய வேண்டும்' என்ற தமது ஆசையைத் தெரிவித்தார். சிறுமி சுப்புலக்ஷ்மி கொடுக்கப் போகும் அந்த இசைத்தட்டு எவ்வளவு பிராபல்யமடையப் போகிறது என்பதைக் கிராமபோன் கம்பெனியார் எப்படி முன் கூட்டி அறிந்திருக்க முடியும்? எனவே ஷண்முகவடிவின் திருப்திக்காகவே சுப்புலக்ஷ்மியின் பாட்டை 'ரிகார்ட்' செய்யக் கம்பெனியார் ஒப்புக்கொண்டனர்.

அன்றே தொடங்கி விட்டது எம்.எஸ்ஸின் ஈடு இணையற்ற புகழ் வாழ்வு. ஆறுகட்டை சுருதியில் பாலகி சுப்புலக்ஷ்மி பாடிப் பதிவான 'மரகத வடிவம்' என்ற பாடல் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் எதிரொலிக்கலாயிற்று. 'மதுரையைச் சேர்ந்த குழந்தையாம். மரகத வடிவான மதுரை மீனாட்சியின் அருளைப் பெற்றிருக்கிறது. இல்லாவிட்டால் இப்படிப் பாட வருமா?' என்று பெரியோர்கள் வியந்தார்கள்.

அன்னையும் குருவுமான ஸ்ரீமதி மதுரை ஷண்முகவடிவு அம்மாள்



அதன் பின் மகளின் சங்கீத வாழ்க்கைக்கு வழி வகுப்பதே ஷண்முகவடிவு அம்மாளின் லட்சியமாயிற்று. தாம் சிறிது சிறிதாக மேடையிலிருந்து விலகிப் புதல்வியை மட்டும் வாய்ப்பாட்டுக் கச்சேரி செய்ய வைத்தார். தமது செல்வக்குமாரி சீரும் சிறப்பும் பெற்று விளங்குவதைக் கண்டு இதயம் நிரம்பிய ஷண்முகவடிவு அம்மாள் சென்ற ஆண்டுதான் இறைவனடி சேர்ந்தார்.

சங்கீதத் தேனை மலர்க் குரலில் ஏந்தி ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி வழங்கத் தொடங்கியவுடன் கானத்திலே உயர் தமிழ் நாடு அவருக்குரிய மதிப்பைத் தயங்காமல் அளிக்கத் தொடங்கிற்று. ஸ்ரீமதி எம். எஸ். தமது பதினேழாவது பிராயத்திலேயே மியூஸிக் அகாடமி போன்ற கௌரவம் வாய்ந்த சபைகளில் கச்சேரிகள் செய்யத் தொடங்கினர்.

நினைத்ததை யெல்லாம் பேசும் அற்புதமான சாரீரத்தால் ஸ்ரீமதி எம்.எஸ்ஸின் இசை மக்களை ஆகர்ஷித்தது. 'நினைத்ததை யெல்லாம் தமது சாரீரம் பேச





'சாவித்திரி'யில் நாரதராக

கிறது' என்பதால் மனம் போனபடி நினைக்காததே ஸ்ரீமதி எம். எஸ்ஸின் தனிப்பெருமை. சாஸ்திரத்துக்கு அடங்கியே சுதந்திர வாழ்வு வாழ்வதுதான் பாரதப் பண்பு. அதுவே நம் தர்மம். மனோதர்மம் என்று கலையில் சொல்வதும் இதுவே. இந்தத் தர்மத்தை எம். எஸ். என்றும் மீறுவதில்லை. வளமான சாரீரத்தை வரப்பிரசாதமாகக் கருதுகிறோம். ஆனால் அந்த வளம் காரணமாகவே சிந்தனைசக்தியை மனம் போனபடி செலுத்தத் தோன்றுவது இயற்கை. அப்படிச் செய்யாமல் கடலானது தானாகவே கரைக்கு அடங்கி அலை அடிப்பது போல் ஸ்ரீமதி எம். எஸ். தமது சாரீர சம்பத்தையும் சிந்தனை சக்தியையும் சாஸ்திரக் கரைக்கு உட்படுத்தியே இசையலை எழுப்புகிறார். ஜன ரஞ்சகமாகப் பாடிக் கோடானு கோடி மக்களை ஈர்க்கும் அதே சமயத்தில் மரபுக்குப் பிறழாமல் கலையைப் போற்றி, அதன் மூலம் சங்கீத சாஸ்திர வித்பன்னர்களின் பாராட்டையும் பெறும் தனிப்பெருமை பொருந்தியவர் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி. இருபது வயசுக்குள்ளேயே பாமரர் பண்டிதர் யாவரும் சிலாகித்த முதல் தர வித்வாம்ஸினியானார் எம். எஸ்ஸின் அமிருதக் குரலைப் புகழ்வதிலும், கச்சிதம் செய்த பாணியைப் புகழ்வதிலும், அர்த்த பாவம், ஞான பாவம், பக்தி பாவம் இவற்றின் செறிவைப் புகழ்வதிலும் ரசிகர்கள் போட்டியிட்டார்கள். இன்னிசைக்கு ஓர் எம். எஸ். என ஏத்தினார்கள். சிகரத்தில் ஏற்றிய தீபமானார் எம். எஸ். சுப்புலக்ஷ்மி.

வித்து நல்லதாக இருந்து, வெப்ப தட்பமும் வாய்ப்பாக இருந்து விட்டால் புஷ்பச் செடி எங்கிருந்தாலும் தான் பூத்துக் குலுங்கும். என்றாலும் ரசிகர் ஒருவர் அதனைத் தொட்டியில் இட்டுப் பூங்காவில் வைத்தால் அதன் அழகை மக்கள் பூரணமாக உணர முடிகிறது. தானாகவே மலர்ந்த எம்.எஸ்ஸின் கலை அதன் மணத்தாலேயே மக்களை ஆகர்ஷிக்கத்தான் செய்தது. அந்த ஆகர்ஷணத்தைப் பூரணமாக்குவதற்கு ஒரு முதல்தர ரசிகரும் கிடைத்தார். ஸ்ரீ சதாசிவம் அவர்கள் தாம் அந்த ரசிகர். 1940-ல் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் ஸ்ரீமதி எம். எஸ்ஸை மணந்து கொண்டார். அன்றிலிருந்து எம். எஸ்ஸின் வாழ்க்கை மகோன்னதமான ஒரு திருப்பத்தை அடைந்தது. அதன் மூலம் கர்நாடக சங்கீதத்தின் சரிதமும் ஒரு மகத்தான திருப்பத்தை அடைந்தது.

இன்று நமக்குக் கிடைத்துள்ள ஈடும் இணையுமற்ற பேரும், புகழும் தமது கணவரையே சாரும் என்று ஸ்ரீமதி எம். எஸ். அவர்கள் இதயபூர்வமாகக் கருதுகிறார்.

திருமணத்துக்குச் சிறிது காலத்துக்குப் பின் ஸ்ரீ சதாசிவம் அவர்கள் பேராசிரியர் 'கல்கி' அவர்களுடன் சேர்ந்து நமது கல்கி பத்திரிகையைத் தொடங்கினார். கலையரசியுடன் தொடர்புகொள்ளும் பெருமிதம் கல்கி பத்திரிகைக்குக் கிடைத்தது.

ஸ்ரீ சதாசிவம் அவர்களின் அலுவல் அறையில் இன்று காட்சியளிக்கும் ஸ்ரீமதி எம். எஸ்ஸின் புகைப்படத்தை அவர் விருந்தாளிகளிடம் காட்டும்போது, ''என் மனைவி என்ற முறையில் இந்தப் படத்தை மாட்டியிருக்கவில்லை. இந்தப் பத்திரிகையின் ஸ்தாபகர் என்ற முறையில்தான் இந்தப் படம் இங்கு இடம் பெறுகிறது'' என்று சிரித்துக்கொண்டே சொல்வார். தொடர்ந்து அதற்கு ஹாஸ்யமாக விளக்கமும் தருவார். ''தர்ம சிந்தனை தன் வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது (Charity begins at home) என்பார்கள். இப்போது என் அகமுடையாள் தர்மசிந்தனையுடன் இலவசக் கச்சேரிகள் செய்வதைப்பற்றி எல்லாரும் சொல்கிறார்கள் அல்லவா? அதுகூடச் சொந்த வீட்டிலிருந்துதான் தொடங்குகிறது. ஆம், எனக்குக் கலியாணமான புதிதில் கல்கி சஞ்சிகைக்கு மூலதனம் வேண்டுமென்பதற்காகவே அவள் 'சாவித்திரி' டாக்கியில் நாரதராக நடித்தாள். அதனால் கல்கியின் ஸ்தாபக

ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் குடும்பத்துடன் சதாசிவம் குடும்பம்



ரானதுடன், சங்கீதத்தைத் தர்மப் பணிகளுக்குப் பயனுக்கவும் தொடங்கினுள்'' என்பார்.

1941-ம் ஆண்டு சாவித்திரி படப்பிடிப்புக்காக சதாசிவம் தம்பதியர் பம்பாயிலிருந்து கல்கத்தா செல்கையில் வழியில் சேவாக் கிராமம் சென்ருர்கள். காந்தியடிகள் எம். எஸ்ஸின் பிரார்த்தனைக் கீதங்களை முதன் முதலாகக் கேட்டுச் சொக்கியது அப்போது தான். கல்கத்தா நியூ தியேட்டர்ஸில் 'சாவித்திரி' படப்பிடிப்பின் போது, சைகால், சன்யால், கே. ஸி. டே, ஸ்ரீமதி கண்ணன் பாலா ஆகிய வட இந்திய காயகர்கள் எம். எஸ்ஸின் கானத்தைக் கேட்டு உள்ளம் உருகியிருக்கிருர்கள். 1943ம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற விக்கிரமாதித்த விழாவின் போது ஸ்ரீமதி எம். எஸ்ஸின் கானத்தை ஹிந்துஸ்தானி இசையின் கௌரிசங்கர சிகரம் என்று வடநாடெல்லாம் வணங்கின அல்லாதியாகான் மற்றும் ஓம்கார நாத் டாகுர் முதலிய பல ஹிந்துஸ்தானி வித்துவான்கள் கேட்டுப் பரவசமாயினர். விக்கிரமாதித்த விழாவிலிருந்துதான் எம். எஸ்ஸின் அகில இந்தியப் புகழ் உருவாகத் தொடங்கியது எனலாம்.

அடுத்த ஆண்டில் எம். எஸ்ஸின் சமூக சேவை வாழ்வு தொடங்கிற்று. அவரின் இந்தத் தொண்டுக்குத் தூண்டுகோலாக இருந்தவர் தலைவர் ராஜாஜி அவர்களே.

1944ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள் சதாசிவம் தம்பதியரின் இல்லத்துக்கு வந்தார் ராஜாஜி. அன்னை கஸ்தூரிபா மறைந்து போய் அவருக்கு ஞாபகார்த்தம் எழுப்ப முயன்று வந்த நாட்கள் அவை. ''கஸ்தூரிபா ஞாபகார்த்தத்துக்காக உங்கள் மனைவி ஐந்து உதவிக் கச்சேரிகள் செய்வார் என்று பாபுவிடம் சொல்லி யிருக்கிறேன்'' என்ருர் ராஜாஜி ஸ்ரீ சதாசிவத்திடம்.

கஸ்தூரிபாவுக்காக, அண்ணல் காந்திஜியிடம் அருமைத் தலைவர் ராஜாஜி ஒப்புக்கொண்ட காரியத்தை நிறைவேற்றுவதைப் பாக்கியமாகக் கருதினர் சதாசிவம் தம்பதியினர்.


அதன் பின் ஸ்ரீமதி எம். எஸ். செய்துள்ள உதவிக் கச்சேரிகள் எத்தனை எத்தனையோ! சங்கீதத்தின் மூலம் ரோமாபுரியைக் கட்டியதாகச் சொல்வார்கள். எம். எஸ்ஸின் இசையால் இன்று இந்நாட்டில் எழுந்துள்ள கல்வி சாலைகளும், வைத்தியசாலைகளும், கலைமன்றங்களும், ஆன்மிக நிறுவனங்களும், கோபுரங்களும் பலப்பல. இவற்றில் ஸ்ரீமதி எம். எஸ். முக்கியமாகக் கருதுவது திருவாரூரில் நிர்மாணமாகி வரும் சங்கீத திரிமூர்த்திகளின் ஞாபகார்த்தம்தான். 'அவர்கள் போட்ட பிச்சைதான் தமது இசை வாழ்வு' என்று திடமாக நம்புபவரல்லவா ஸ்ரீமதி எம். எஸ்? கடந்த பதினெட்டாண்டுகளில் ஸ்ரீமதி எம். எஸ். நிகழ்த்தியுள்ள சுமார் நூறு உதவிக் கச்சேரிகளின் மூலம் பல நற்பணிகளுக்காக ஏறக்குறைய நாற்பது லட்சம் ரூபாய்கள் வசூலாகி யுள்ளன. இதைக் காணும் போது கலைஞர் என்பதை விடச் சமூக



'' மீரா வேஷமல்ல; மீராவே ''

சேவகி என்ற முறையிலேயே ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மிக்கு நமது முதல் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும் என்று தோன்றும்.

ஸ்ரீமதி எம். எஸ். நடித்த மீரா 1945-ம் ஆண்டில் வெளியாகி பக்தி வெள்ளத்தையும், இசை வெள்ளத்தையும் பாய்ச்சியது. 'ஸ்ரீமதி எம். எஸ். நடித்த மீரா' என்று நாம் சொன்




Bombay 28-9-44

Dear Subbulakshmi,

Rajaji has told me everything about your good work in connection with Kasturba Memorial Fund by using your musical gifts. May God bless you.

Yours

மோ. க. காந்தி




காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஸ்ரீமதி எம். எஸ்.

னது எவ்வளவு தவறு என்பது இரண்டாண்டுகளுக்குப் பின் வெளியாயிற்று. அப்போது ஹிந்தி 'மீரா' படத்தில் தானே தோன்றி முகவுரை வழங்கிய கவிக் குயில் சரோஜினி தேவி, ''சுப்புலக்ஷ்மி மீராவாக நடிக்கவில்லை; மீராவே நம் முன் மீண்டும் வந்து வாழுகிறாள் என்பதை ரசிகர்கள் யாவரும் ஒப்புக் கொள்வீர்கள்'' என்று உள்ளம் திறந்து கூறினார். எம். எஸ்ஸைப் பற்றிய தமது பாராட்டுரையை ஆங்கிலத்தில் வழங்குவதற்கு அவர் இவ்வாறு காரணம் கூறினார்: ''என்னுடைய இந்த உயிருள்ள வார்த்தைகள் உலகத்தின் எட்டாப் பகுதிகளில் உள்ள மூலை முடுக்குகளிலும் பரவ வேண்டுமென விரும்புகிறேன். இந்தியாவைச் சேர்ந்த ஒரு மகாவித்வாம்ஸினி எப்படித் தமது கானத்தால் கோடானு கோடி மக்களின் இதயங்களைத் தொடுகிறார் என்பதை உலகமெல்லாம் அறிய வேண்டுமென விரும்புகிறேன்.''

இன்று அகில உலகப் புகழுக்கு அங்குரார்ப்பணமாக எம். எஸ். எடின்பரோ விழாவுக்குச் செல்வதை ஸ்ரீமதி சரோஜினி தேவியின் ஆத்மா அறிந்து ஆசி கூறுமல்லவா?

சரோஜினி தேவியின் மறைவில் ஓர் அன்னையின் பிரிவை உணர்ந்து துக்கித்தார் ஸ்ரீமதி எம். எஸ்.

மீரா படத்தைக் கண்ட பிரதமர் நேரு எம். எஸ்ஸின் பரம ரசிகர்களில் ஒருவர் ஆனார். டில்லியில் 'மீரா'வை வெளியிட்ட போது அவர் காட்டிய அக்கறை இவ்வளவு அவ்வளவு அல்ல. வந்தவர்களை வரவேற்பதும், செல்கிறவர்களை வழியனுப்புவதுமாக அவர் துருதுரு வென்று அலைந்து கொண்டிருந்ததைக் கண்ட பலர் 'மீரா படத் தயாரிப்பாளர் சதாசிவமா, நேருஜியா?' என்று புரியாமல் திகைக்கும்படி நேர்ந்தது! மீரா படத்தைக் கண்டு எம். எஸ்ஸின் கானத்தில் வசியமானவர்களில் வைஸ்ராய் மவுண்ட்பேட்டன் தம்பதியை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.



மவுண்ட்பேட்டன் தம்பதியுடன்

மீராவில் ஸ்ரீமதி எம். எஸ். உடல் உருக, உள்ளம் உருக, ஊனெல்லாம் நெக்குருகப் பாடியதன் மூலம் வட இந்தியாவில் பெரும் கீர்த்தி பெற்றார். தேசத் தலைவர்கள் எல்லாம் அவரது இசையிற் கட்டுண்டார்கள்.

1947-ம் ஆண்டு சுதந்திரம் வந்தபின் காந்தியடிகளின் முதல் ஜயந்தி நெருங்கிக் கொண்டிருந்தது. காந்தி ஜயந்தியன்று டில்லியில் அவர் முன்னிலையில் பிரார்த்தனைக் கூட்டத்தில் பாடுமாறு எம். எஸ்ஸுக்கு அழைப்பு வந்தது. சில காரணங்களுக்காக அந்த அழைப்பை ஏற்கமுடியவில்லை. எம். எஸ்ஸைக் கொண்டு சில பஜன்களை ரிகார்ட் செய்து டில்லிக்கு அனுப்பி வைத்தார் ஸ்ரீ சதாசிவம். அக்டோபர் முதல் தேதி — அதாவது ஜயந்திக்கு முதல் நாள் — காந்தியடிகளுக்குப் பணிவிடை செய்து வந்த ஸ்ரீமதி சுசேதா கிருபளானியிடமிருந்து ஒரு டெலிபோன் செய்தி வந்தது. 'ஹரி, தும ஹரோ ஜனகி பீர்' என்று தொடங்கும் மீரா பஜனை எம். எஸ். பாடித் தமது பிறந்த நாளன்று கேட்க வேண்டுமென அண்ணல் விரும்புகிறார் என்பதே சேதி. ('ஹரி! மக்களின் துயரைத் துடைப்பாயாக' என்பதே அப்பாட்டின் பொருள்.) ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்கு அந்தப் பாடல் பாடமில்லை என்று ஸ்ரீ சதாசிவம் வருத்தத்துடன் தெரிவித்தார்.

அன்று மாலை டில்லியிலிருந்து மீண்டும் ஒரு டெலிபோன் வந்தது. 'ஹரி தும ஹரோ' பஜனை எம். எஸ். வசன நடையில் படித்து அதை ரிகார்ட் செய்து அனுப்பி வைத்தால் கூடப் போதும் என்கிறார் பாபு. தமது பிறந்த தினப் பிரார்த்தனையில் இந்தப் பஜனை எம். எஸ்ஸின் குரலில் கேட்டே ஆக வேணுமாம்' என்று தகவல் வந்தது. எம். எஸ். அவர்களின் குரல் தேச பிதாவை அவ்வளவு தூரம் கவர்ந்திருந்தது!

'ஹரி தும ஹரோ' பாடலுக்கு மெட்டு அப்போதே அமைக்கப்பட்டுச் சென்னை வானொலி நிலையத்தில் ஒத்திகை ஆகி நள்ளிரவுக்குமேல் அந்தப் பஜன் ரிகார்டு செய்யப்பட்டது. மறுநாள் காலை விமானத்தில் ஸ்ரீ சதாசிவத்தின் மருமகனும், கல்கி ஸ்தாபனத்தின் இன்றைய துணை டைரக்டருமான ஸ்ரீ அனந்தநாராயணன் ரிகார்டைத் டில்லிக்கு



"கனஸியாம ஆயாரி"

எடுத்துச் சென்றார். காந்திஜியும் தமது பிறந்தநாளில் அந்தப் பாடலைக் கேட்டு மெய்ம்மறந்தார்.

அதுதான் அடிகளின் கடைசிப் பிறந்த நாள் என்று அப்போது யார் நினைத்தார்கள்?

சுமார் நான்கு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் மாலை எம். எஸ். வானொலிப் பெட்டியின் அருகே அமர்ந்து திருவையாறு தியாகராஜ உத்ஸவ அஞ்சலைக் கேட்டுக் கொண்டிருந்தார். திடீரென நிகழ்ச்சி நின்றது. சோகம் செறிந்த ஒரு குரல் காந்தி மகாத்மா துப்பாக்கிக் குண்டுக்கு இரையான துர்ச் சம்பவத்தைக் கூறிற்று. அதை அடுத்து....

'ஹரி தும ஹரோ' என்ற பஜன் எம். எஸ்ஸின் குரலில் ரீங்காரமிட்டது. எம். எஸ். மூர்ச்சையானார். அதன் பின் ஓராண்டு காலம் வரை 'ஹரி தும ஹரோ'வைப் பாட முயற்சி செய்தாலே அவர் விதிர் விதிர்த்து விடுவார்!

காந்திஜியை ஸ்ரீமதி எம். எஸ். கடைசி முறையாகத் தரிசித்தது 1947 நவம்பர் மாதத்திலாகும். ஹிந்து-முஸ்லீம் மோதல்கள் காரணமாகக் காந்திஜி மனமுடைந்து போயிருந்த சமயம் அது. அப்போது டில்லி பிர்லா மாளிகையில் ஒரு பிற்பகலில் ஸ்ரீமதி எம். எஸ். பஜனை கீதம் பாட, சாந்தி பூத்து மகிழ்ந்தார் காந்திஜி. பின்னர் குமாரி ராதா 'கனஸியாம ஆயாரி' என்ற பாடலுக்கு அபிநயம் பிடித்த போது, சிரிப்பையே சிறிது காலமாக மறந்திருந்த அடிகள் வாய்விட்டுச் சிரித்து ஆனந்தித்தார். அன்று மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்திஜியே எம். எஸ்ஸை நோக்கி, 'ராம் துன் காவோ' என்று பணித்தார்.


காந்திஜி நினைவுக்கு எம். எஸ். அளித்த காணிக்கை இன்றைய காந்தி மண்டபத்தில் ஐக்கியமாகியுள்ளது. இந்த நினைவு மண்டப நிதிக்காக எம். எஸ். நிகழ்த்திய கச்சேரியில் ஒரு விசேஷமுண்டு. காங்கிரஸ் கண்காட்சியில் நடைபெற்ற இக்கச்சேரிக்குக் கட்டணம் கால் ரூபாய்தான். அப்படியிருந்தும் பத்தாயிரம் ரூபாய்க்குமேல் வசூலாயிற்று. அதாவது, சுமார் அரை லட்சம் மக்கள் தூய கர்நாடக இசையை விரும்பிக் கேட்டிருக்கிறார்கள்.

தேசத் தலைவர்கள் எல்லாருக்குமே எம். எஸ்.ஸின் கானத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. சர்தார் படேல் ஒரு நாள் மாலை எம். எஸ்ஸுக்குத் தமது இல்லத்தில் தேநீர் உபசாரம் நடத்தி அவரது தர்மப் பணியை வாழ்த்தியிருக்கிறார். கோவிந்த வல்லப பந்த் உத்தரப் பிரதேச முதன் மந்திரியாக இருந்த போது லக்னௌவில் எம். எஸ்ஸின் கச்சேரியைக் கேட்டுவிட்டு "இறந்திருந்த என் ஆத்மாவை இன்று மீண்டும் பெற்றேன்" என்று பரவசமாகக் கூறினார். ராஜன் பாபு ராஷ்டிரபதியாக இருந்தபோது பல முறை எம். எஸ்ஸைத் தமது இல்லத்தில் கானம் செய்யச் சொல்லிக் குடும்பத்துடன் கேட்டு மகிழ்ந்திருக்கிறார். மீரா, சூர்தாஸ், கபீர், துளசிதாஸ் முதலியவர்களின் தெய்விகப் பாடல்களை எம். எஸ். உள்ளம் குவிந்து பாடும்போது கண்கள் கலங்க அமர்ந்திருப்பார் ராஜன்பாபு.

1955ம் ஆண்டு கமலா நேரு ஆஸ்பத்திரி உதவிக் கச்சேரியை முன்னிட்டு டில்லி சென்றிருந்த எம். எஸ். தம்பதியர் பத்து நாட்கள் பிரதமரின் விருந்தினராகத் தங்கியிருந்தார்கள். அப்போது பிரதமரும், ஸ்ரீமதி இந்திரா காந்தியும் செய்த உபசாரணைகளை இன்றும் அவர்கள் மனத்தில் பொதிந்து வைத்திருக்கிறார்கள். 'சுபலக்ஷ்மி'க்கு ஜவாஹர்லால்ஜி சூட்டிய புகழ்மாலையை நாடு

ஹெலன் கெல்லர். ஸ்ரீபிரகாசாவுடன்





ராஜாஜி, மைசூர் மகாராஜா, காஸா சுப்பாராவுடன் சதாசிவம் குடும்பத்தினர். காஸாவுக்குப் பின்னால் நிற்கும் ஸ்ரீமதி விசாலாக்ஷி நாராயணஸ்வாமியும் எம். எஸ்ஸுடன் எடின்பரோ செல்கிறார்.

நன்கறியும். "சங்கீத ராணியாகிய சுப்புலக்ஷ்மியின் முன்பு வெறும் பிரதம மந்திரியாகிய நான் யார்?" என்று அவர் பலமுறை கூறியிருக்கிறார்.

நமது ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் எம். எஸ்ஸின் இசையில் லயித்துக் கூறிய மொழிகள் இவை :

"ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் கானத்தைக் கேட்பது பேரானந்தமாகும். அவர் ரசிகர்களை உன்னதமான ஒரு நிலைக்கு இட்டுச் செல்கிறார். எத்தனையோ உயர்ந்த பணிகளில் அவர் பங்கு கொண்டிருக்கிறார். அவரது சங்கீதம் கடவுளர் அளித்த வரப் பிரசாதமாகும். அதனை அவர் தேசத்தின் சேவைக்குப் பயன்படுத்துகிறார்."

எம். எஸ்ஸையோ, சதாசிவத்தையோ எங்கு கண்டாலும், ராஷ்டிரபதி பவனக் கச்சேரியில் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி பாடிய 'கைலாஸ சைல' என்ற ஸ்காந்த புராண சுலோகத்தைப் பிரஸ்மம் போட்டுப் பாடத் தொடங்கி விடுவார் நமது ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்கள்.

ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் "எம்.எஸ்.ஸின் சங்கீதம் இந்த சகாப்தத்தின் குரல்" என்று சென்ற ஆண்டில் பாராட்டியது நேயர்களுக்கு நினைவிருக்கும்.

சங்கீத நிபுணரும் சாகித்திய கர்த்தருமான மைசூர் மகாராஜா, "பிரபஞ்ச முழுவதையும் கவரும் ஒப்பற்ற தன்மை படைத்தது எம். எஸ்ஸின் இசை; சங்கீத சாஸ்திரத்தின் முழுமையைப் பெற்றிருப்பதோடு அவரது இசையில் தெய்வ பக்தியின் தீவிரம் செறிந்திருக்கிறது" என்று கூறிப் புகழ்ந்திருக்கிறார்.

சமீபத்தில் விதேக கைவல்யமடைந்த ஸ்வாமி சிவாநந்த சரஸ்வதி அவர்கள் ரிஷிகேசத்தில் ஸ்ரீமதி எம். எஸ்ஸின் இன்னிசையைக் கேட்டு அவரை மனமார வாழ்த்தியிருக்கிறார்.

தமிழகம் தான் பெற்ற கலைச்செல்வியைத் தயங்காமல் கொண்டாடியது. பொது மக்களின் பேரன்பைப் பெற்ற ஸ்ரீமதி எம். எஸ்ஸை மகா வித்வான்களான மைசூர் வாசுதேவாச்சாரியார், காரைக்குடி சாம்பசிவ அய்யர் ஆகியோர் வெகுவாகச் சிலாகித்திருக்கிறார்கள். எம். எஸ்ஸின் இசையில் உயிரையே வைத்திருந்தவர்களில் ரஸிகமணி டி. கே. சி. அவர்களைக் குறிப்பிட வேண்டும்.

இசைவாணி எம். எஸ்ஸின் கானத்தில் உள்ள அதே ஜாஜ்வல்யம் தமது எழுத்தில் துலங்கப் பெறு மன்னர் கல்கி அதனைப் பற்றி விமரிசித்து இந்த ஏட்டில் எழுதியதெல்லாம் இன்று ஒரு தனி இலக்கியமாகவே ஆகி விட்டது.

பல மேநாட்டினரும் எம். எஸ்ஸின் சங்கீதத்தை மாந்திக் களித்திருக்கிறார்கள். அநாதைகளின் சேவகியான உலகப் புகழ் பெற்ற ஹெலன் கெல்லர் கிண்டி ராஜபவனத்தில் எம். எஸ். பாடிக் கேட்டுத் தம்மை மறந்த நிலையில் ஆழ்ந்து விட்டார்!

1941-ம் ஆண்டில் செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசய்யர், கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை இவர்களின் தலைமையில் 'இசைவாணி' என்ற பட்டத்தைப் பெற்ற எம். எஸ். அதன் பின் எவ்வளவோ விருதுகளைப் பெற்றிருக்கிறார். 1954-ம் ஆண்டில், சுதந்திர பாரதத்தில் தேசிய விருதுகள் அமைக்கப்பட்ட முதல் ஆண்டிலேயே அவர் 'பத்ம பூஷண'மானார். இரண்டாண்டுகளுக்குப் பின் ராஷ்டிரபதிப் பரிசைப் பெற்றார். இதற்கெல்லாம் சிகரமாக இப்போது உலக அரங்கில் அவர் சங்கீதச் செல்வத்தை வழங்கப் போகிறார்.

பிரிட்டிஷ் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஹார்வுட் பிரபுவும் அவரது மனைவியும் ஐந்தாண்டுகளுக்கு முன் டில்லியில் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் கானத்தில் திளைத்து மகிழ்ந்தார்கள். சென்னைக்கு அவர்கள் வந்தபோது எம். எஸ்ஸின் இல்லத்துக்கு வந்து மீண்டும் அவரது இன்னிசையைக் கேட்டு மகிழ்ந்தார்கள். "எடின்பரோவில் நாங்கள் நடத்

தும் சர்வதேசக் கலைவிழாவில் தாங்கள் அவசியம் பங்குகொள்ள வேணும்'' என்று கேட்டுக் கொண்டார்கள்.

ஆண்டவன் அருளில் இன்று அந்த விருப்பம் ஈடேறுகிறது. இம்மாதம் 25ந் தேதி எம். எஸ். தமது பதியோடும் பக்கவாத்தியக்காரர்களோடும் பம்பாயிலிருந்து புறப்பட்டு இங்கிலாந்து செல்கிறார். எடின்பரோவில் இரண்டு கச்சேரிகள் நிகழ்த்துகிறார். இம்மாதம் முப்பதாம் தேதி ஒரு கச்சேரி; செப்டம்பர் இரண்டாம் தேதி இரண்டாவது கச்சேரி. இரு கச்சேரிகளும் இரவு எட்டு மணியிலிருந்து பத்து மணி வரை நடக்கும். இந்தக் கால கட்டத்தில் எம். எஸ்ஸுக்குக் கச்சேரி தந்திருப்பதே விழா நிர்வாகிகள் அவருக்குக் காட்டும் பெருமதிப்பைக் குறிக்கும்.

ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் கலைவாழ்வைப் பற்றிச் சொல்வதோடு அவரது குண நலன்களையும் கூறினால்தான் இக்கட்டுரை நிறைவுறும். பண்பாடுகிற உயர் பண்பாட்டோடு மானுடப் பண்புகளால் உயர்ந்து பண்பட்ட உள்ளம் பெற்றவர் ஸ்ரீமதி எம். எஸ். கலைமகள், திருமகள் இருவரது விலாசத்தையும் குறைவறப்பெற்ற எம். எஸ். செருக்கோ, உயர்வு மனப்பான்மையோ சிறிதும் படைத்திராதவர். கல்கி சிப்பந்திகளுக்கு எஜமானியாக இல்லாமல் 'அம்மா'வாகவே இருந்து வரும் அன்பு மனத்தவர் அவர். இல்லாள் என்ற முறையில் சுற்றத்தையும், உற்றத்தையும் பேணுவதில் தம் நல்லியல்புகளை வெளிப்படுத்துபவர். லக்ஷ்மீகரமான தோற்றமும் மிருதுவான நடவடிக்கைகளும் கொண்ட எம். எஸ். விருந்தினரை உபசரிப்பதை ஒரு கலையாகவே பயின்றவர்.

எளிமைமிக்க ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி இறைவனிடம் அசையாத நம்பிக்கை கொண்டவர். ஆசார அநுஷ்டானத்தில் மிகவும் பயபக்தியோடு சிரத்தையும் கொண்டவர்.

தமது வித்தையால் மக்களின் மதிப்பையும், விநயத்தால் அவர்களின் அன்பையும் பெற்ற இந்த ஏழிசைச் செல்வி ஆழ்கடல் கடந்து சென்று உலக அரங்கில் தமது கலைப் பெருமையைப் பிரகடனம் செய்யும் நாளை யாவரும் ஆர்வமுற எதிர்பார்க்கிறார்கள். அவரது இந்த நற்பணி நிறைவேற ஏழிசையாயும் இசைப் பயனுமுள்ள ஆண்டவன் அருள்வான்; அவர் அநுதினமும் அநுசந்தானம் செய்யும் நாத வித்தையின் உபாசகர்கள் அநுக்கிரகிப்பார்கள்; நாடெங்கிலும் அவர் புரிந்துள்ள சமூகப் பணியை மெச்சிப் பாரதத் தாய் தன் ஆசியை உடன் அனுப்புவாள்; தமிழிசைக்குத் தலையான தொண்டு புரிந்துள்ள அவருக்குத் தமிழன்னை வாழ்த்துக் கூறுவாள்; நம் எல்லோருடைய உளமார்ந்த அன்பும் அவருக்கு உறுதுணையாகச் செல்லும்!


இவை யெல்லாவற்றோடும் இரண்டு மகாத்மாக்களின் அநுக்கிரகம் தம்மை அனவரதமும் ரட்சிப்பதாக நம்புகிறார் ஸ்ரீமதி எம். எஸ். ஒருவர் நமது அருமைத் தலைவர் ராஜாஜி. தினந்தோறும் அவர் இந்தக் கல்கிப் பூங்காவில் உலாவுவதால் இங்கு சத்தியத்தின் சாந்நித்தியம் பொலிவதாக ஸ்ரீ சதாசிவம் தம்பதியர் நம்புகிறார்கள்.

தம்மைக் காக்கும் மற்றொரு சக்தி ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் திருவருள் எனக் கருதுகிறார் ஸ்ரீமதி எம். எஸ். அவரது இசை வாழ்வில் எடின்பரோ விழா உச்சகட்டமாகும் என்று நாம் எண்ணினாலும் அவரோ தமது இசை வாழ்வு அதன் நிறைவையும் பலனையும் முன்பே அடைந்துவிட்டது என்று கருதுகிறார்—அதாவது மகாசிவராத்திரி புண்ணிய காலங்களில் பிரத்தியட்ச சிவமூர்த்தமாகிய ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் திருமுன்னர் மூன்று ஜாமங்களிலும் பாடி அவரது ஆசியைப் பெற்றபோது தமது சிறிய இசைத்தொண்டை ஈசன் அங்கீகரித்து விட்டான் என்றே எண்ணி ஆத்ம திருப்தி அடைகிறார்!

— 'கன்யா'

எடின்பரோ செல்லும் பக்கவாத்தியக் குழுவுடன் ஸ்ரீமதி எம்.எஸ். அவர்கள். வயலின் - ஸ்ரீ ஆர். எஸ். கோபாலகிருஷ்ணன்; மிருதங்கம் - ஸ்ரீ டி. கே. மூர்த்தி; கடம் - ஆலங்குடி ஸ்ரீ ராமச்சந்திரன்





"செக் எத்தனை ரூபாய்க்கு?"

"நூற்றேழு ரூபாய்க்கு."

"வள்ளிசாக நூற்றைந்தாக வாங்கிக் கொள்ளுங்களேன், மாமி!"

"நூற்றுப் பத்தாகக் கொடுத்து விடேன், பெண்ணே! பார்த்துப் பழகிய பெண்ணாய் இருக்கிறாயே. அந்தத் தெரு பாங்கிலே ஒரு அஞ்சு பத்து கூடவே போட்டுத்தான் கொடுக்கிற வழக்கம்."

ஒரு பாங்கில் கணக்கு வைத்திருப்பவர்களிடம் பணம் கொடுத்து வாங்கும் 'காஷியர்' வேலைசெய்யும் ஒரு பெண்ணும், செக் கொடுத்துப் பணம் வாங்க வந்திருக்கும் ஒரு ஸ்திரீயும்

பெண் 'காஷியர்'

அனுசுயா

இப்படிப் பேசிக் கொள்வார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆண்கள் இப்படிப் பரிகசிக்கக் கூடும். 'ஸ்திரீகள், எதிலும் பேரம் செய்பவர்கள்' என்று ஒரு பழிச் சொல் ஏற்பட்டிருக்கிறதல்லவா? அந்த அநியாயத்தைப் பற்றி இன்னொரு சமயம் விவரமாகச் சொல்கிறேன்.



இரண்டு வாரங்களுக்கு முன்னாலே ஹைதராபாத்திலே கனரா ஸின்டிகேட் பாங்கு புதுசாக ஒரு கிளை ஆபீஸ் ஆரம்பித்தது. அதிலே வேலை செய்கிறவர்கள் எல்லாருமே பெண்களாம். ஆனால், காவல் காக்கிறதுக்குக்கூடக் கூர்க்காப் பெண்ணை நியமித்திருக்கிறார்களோ, என்னவோ தெரியாது.

இப்போது பட்டணத்திலே தியாகராய நகரிலே, ஸென்ட்ரல் பாங்கு கிளை ஆபீஸிலே பெண்கள் இலாகா என்று ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் மூன்று நான்கு பெண்கள் வேலை செய்கிறார்கள். இவர்கள் ஸ்திரீகள் சம்பந்தப்பட்ட கணக்குகளைக் கவனித்துக் கொள்வார்கள்.

ஆனால், இதெல்லாம் அவ்வளவு புதிதல்ல. ஏனென்றால், ஏழெட்டு வருஷங்களுக்கு முன்னாலேயே மதுரையில் பாண்டியன் பாங்கியில் இந்தப் பெண் பாங்கு குமாஸ்தாக்கள் பரீட்சை ஆரம்பித்து விட்டார்கள்.

கணக்கு, என்றால் பெண்கள் பயப்படுவார்கள் என்று சொல்வதுண்டு.

'பாலுங் கசந்ததடி - சகியே !
பரீ......ட்சை வந்ததடீ !'

என்று ஒரு பெண் பாடிக் கொண்டு நடனமாடியதாக யாரோ கதை விட்டார்கள். இப்போது பல பெண்களுக்குக் கணக்குப் போடுகிறது என்றால் ஐஸ்கிரீம் தின்கிறது மாதிரி. எனக்குத் தெரிந்த எத்தனையோ பெண்கள் பி. காம். பரீட்சை கொடுத்திருக்கிறார்கள். சிலர் 'சார்ட்டர்ட் அக்கௌண்டன்ட்' பரீட்சை தேறியிருக்கிறார்கள்.

இப்போதெல்லாம் பல ஸ்திரீகளிடம் பணம் புழங்கி வருகிறது. ஆயிரக் கணக்கான பெண்கள் உத்தியோகம் செய்து வருகிறார்கள். அநேகமாக எல்லாரும் பாங்கியில் கணக்கு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கணக்கு என்றால், பாங்கு என்றால், பணம் என்றால் பெண்களுக்கு ஒன்றும் புதிதில்லை, பெரிய விஷயமில்லை என்பதற்காகச் சொல்ல வந்தேன்.

அமெரிக்காவில் நூற்றுக்கணக்கான பேர் பாங்கின் தலைவிகளாக இருக்கிறார்கள். கிட்டத்தட்ட நாற்பதினாயிரம் பேர் பெரிய பாங்கு உத்தியோகஸ்தர்களாகி யிருக்கிறார்கள். நம் தேசத்திலும் பெரிய பதவியில் சில ஸ்திரீகள் இருக்கிறார்கள். ஆனால் காஷியர்கள், குமாஸ்தாக்கள் மிகவும் குறைவு.

ஒருவர் பாங்கியில் பணம் போட்டிருப்பதற்கு மேல் அதிகப்படியாகப் பணம் கொடுப்பதற்கு 'ஓவர் டிராப்ட்' என்று பெயர். ஒரு ஸ்திரீ பாங்கின் ஏஜெண்டாக இருந்தால் 'ஓவர் டிராப்ட்' கேட்டவர் சரியான பேர்வழியாக இருந்தாலொழிய இலேசில் அந்த வசதியைப் பெற்றுக் கொண்டுவிட முடியாது.

ஒன்றிரண்டு அம்சங்களில் பெண்களுக்குப் பாங்கு வேலை சிரமமாயிருக்கலாம். பணம் போடுபவர்களின் கணக்கு எழுதும் 'லெட்ஜர்' என்ற பெரிய நோட்டுப் புத்தகம் இருக்கிறதே, அது நாற்பது, ஐம்பது புடவைகள் கனமிருக்கும். அதை இப்படியும், அப்படியும் நகர்த்தி வைக்க நல்ல பலம் வேண்டும்.

மொத்தத்தில் பெண்கள் பாங்கியில் வேலை பார்த்தால் தில்லுமுல்லுகள் அதிகம் நடக்காது. ஏஜெண்ட் ஒரு பெண்ணாக இருந்தால் மிகவும் சிக்கனமாகவும் அதிஜாக்கிரதையாகவும் காரியங்களைச் செய்வாள்.

சிக்கன மாமியார் : எங்க குடும்பத்திலே ஊறுகாயை எடுத்து இலையில் போட்டுக்கொண்டு சாப்பிடுகிற வழக்கமில்லே. அது இருக்கிற பாத்தி ரத்தை இடது கையால் தொட்டுக் கொண்டே சாப்பிடுவோம்!

சிக்கன நாட்டுப்பெண் : அதென்னமா கட்டுப்படியாகும்? பாத்தி ரத்தைத் தொட்டுக் கொண்டேயிருந்தால் அது தேய்ந்து போய்விடாதா? நாங்கள் பாத்திரத்தை இலைக்கு எதிர்த்தாற்போல் வைத்துக்கொண்டு அதைப் பார்த்துப் பார்த்துக்கொண்டு சாப்பிடுகிற வழக்கம். ஆனால் வடு மாங்காய் என்றால் எங்களுக்கெல்லாம் பிராணன்.... அதை மட்டும்....

சி. மா: அட, ராமா! தின்று விடுவீர்களாக்கும் !

சி. நா: இல்லே. அதை எதிர்த்தாற்போல் கட்டித் தொங்கவிடு வோம். சாதத்தை அதற்கு நேரே காட்டி, காட்டிவிட்டுச் சாப்பிடு வோம். ரொம்ப ஜோராயிருக்கும்.

அஹிம்ஸா பட்டு

அஹிம்ஸா செருப்பு என்று கேள்விப் பட்டிருக்கிறீர்களா? தோலுக் காக மாட்டைக் கொல்லாமல் அது தன்னால் இறந்த பிறகு அதன் தோலைப் பதப்படுத்திச் செய்யப்படுவதுதான் அஹிம்ஸா செருப்பு. அது போல அஹிம்ஸா பட்டு என்பதாகவும் ஒன்றிருக்கிறது !

ஒரு ஸ்திரீ ஒரு நல்ல பட்டுப் புடவை கட்டிக் கொள்வதற்காகக் கிட்டத்தட்ட மூவாயிரம் பட்டுப் பூச்சிகள் தங்கள் உயிரைத் தியாகம் செய்கின்றன. ஆனால், இப்போது அஹிம்சா பட்டு தயாரிக்கிறார்கள்.

நிலக்கரி, தண்ணீர், காற்று இந்த மூன்றிலிருந்தும் அந்தப் பட்டு நூலை உற்பத்தி செய்கிறார்கள். அவற்றிலுள்ள சத்துக்களைச் சேர்த்து ஒரு வகை உப்பைத் தயாரிக்கிறார்கள். இந்த உப்பைக் குழம்பாகக் காய்ச்சி ஆற வைத்துப் பாளம், பாளமாக ஆக்கி விடுகிறார்கள். பிறகு ஸோப் சிப்ஸ் மாதிரி செய்கிறார்கள். இந்தச் சிப்ஸை மறுபடியும் உருக்கித் திரவமாகச் செய்கிறார்கள். இதைச் சன்னமான துவாரங்களின் வழியாகப் பாயச் செய்தால் அது நூலாக வெளி வருகிறது. அதுதான் நைலான் நூல்.

இந்த நூலை எவ்வளவு தடியாக வேண்டுமானாலும், எவ்வளவு மெல்லியதாக வேண்டுமானாலும் நமக்குத் தேவையானபடி இழுத்துக் கொள்ளலாம். சற்றுத் தடியாகக் கம்பி போல் இருப்பதைக் கொண்டு தான் பல் தேய்க்கும் பிரஷ், தலைவாரிக் கொள்ளும் பிரஷ் முதலியன செய்கிறார்கள்.

இந்த 'அஹிம்சா' பட்டு மலிவானது. நன்றாக உழைக்கிறது. மற்றப் பட்டுப் புடவைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்தால், எழுந்தால், நிமிர்ந் தால் கசங்கிப் போகுமே. சுத்தமான நைலான் அப்படியே இருக்கும். அதை மற்றப் புடவைகளைப்போல் கல்லில் அறைந்து தோய்க்க வேண்டும் என்பதில்லை. ஸோப் தூள் கரைத்த தண்ணீரில் ஊற வைத்து எடுத்து, நல்ல தண்ணீரில் அலசி உலர்த்தினால் போதும். இது ஏழை, பணக் காரர்கள் என்ற வித்தியாசம் இருப்பதை ஓரளவு குறைத்து வருகிறது.

பல புருஷர்கள் தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை என்று நினைத்துக் கொண்டு புடவை, ரவிக்கை வேறு பொறுக்கி யெடுத்து வாங்கிக் கொடுக்க வந்துவிடுவார்கள். செயற்கைப் பட்டுக்கள் வந்த பிறகு அவர்கள் இப்படித் தலையிடுவது குறைந்து விட்டது.

ரேயான், ஸாட்டின், டப்பெட்டா, பாப்லின், ஜார்ஜெட், டெரிலீன், கிரேப், ஷிப்பான், நைலான், டிவிங்கிள் நைலான் இவை விஷயத்தில் ஒன்றுக்கொன்று அவர்களுக்கு வித்தியாசம் தெரிவதில்லை. சில பேருக்கு வித்துவான் எந்தப் பாட்டைப் பாடினாலும் ஒரே ராகத்தில் பாடுகிறது போலிருக்கும். அதே மாதிரி இவர்களுக்கு எதைப் பார்த்தாலும் நல்ல பட்டாகவே தோன்றும். ஆகையினால்தான் தலையிடுவதில்லை.

குடும்ப அகராதி

அப்பாடி, அம்மாடா....

விடியற்காலையில் எழுந்து காரியங்கள் செய்ய ஆரம்பித்து, சமைத்துப் புருஷனுக்குச் சாதம் போட்டு, அப்புறம் வந்து உட்காரும் மைத்துனனுக்குப் பரிமாறி, கொஞ்சம் நேரம் கழித்து வந்து உட்கா ரும் இன்னொரு மைத்துனனுக்குப் பரிமாறி, அப்புறம் சாப்பிட வந்து உட்காரும் மாமியாருக்கும் போட்டு விட்டு.... இப்படியே இராத்திரியும் காரியம் செய்து விட்டுப் படுத்துக் கொள்ளும்போது





தன்னையறியாமல் விளம்பும் வார்த்தைகள். இவை இலக்கண விரோதமானவை என்றும், 'அப்பாடா', 'அம்மாடி' என்று சொல்ல வேண்டும் என்றும் தமிழுக்காக உழைப்பவர்கள் குறை சொல்வார்கள்.

பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு....

இது ஆசீர்வாதம் செய்யும் வசனம் என்று பெயர். இது தோன்றிய விதமாவது:

நாற்பத்தைந்தில் பதின்மூன்றைக் கழித்தால் முப்பத்திரண்டாகிறது. இதை இரண்டால் வகுத்தால் பதினாறு வருகிறது. அதாவது பதின்மூன்று வயதில் கலியாணம் செய்து கொள்ளும் ஒரு பெண் தனது நாற்பத்தைந்தாம் வயதுக்குள் இரண்டு வருடத்துக்கு ஒரு குழந்தை விதம் பதினாறு குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கொள்ள வேண்டும். இத்தனை குழந்தைகளை ஆபத்தில்லாமல் பெற்றெடுத்துச் சுகமாகப் பெருவாழ்வு வாழ்வதென்பது நடக்க முடியாத காரியம்.

தன்னை மிகவும் கொடுமைப்படுத்திய தன் நாத்தனாருக்குக் கல்யாணமான போது ஒரு அம்மாள் மறைமுகமாக இப்படி சபித்தது ஆசீர்வாத வசனமாகப் போய் விட்டது.

தேவை

கலியாணம் செய்து கொள்ளும் பையன் எத்தனை வயதானவனாக இருந்தாலும், எத்தனை பெரிய உத்தியோகஸ்தனாயிருந்தால்கூட 'மாப்பிள்ளை அழைப்பு' என்பது இல்லாவிட்டால் கல்யாணம் நன்றாக நடந்த திருப்தி ஏற்படுவதில்லை. ஆனால் மாப்பிள்ளை அழைப்புக்கு தற்கேற்ற மேலே மூடி போடாத மோட்டார் வண்டிகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. அதற்காக வழக்கத்தை விடாமல் அந்தப் பையன்கள் மேல் மூடியுள்ள ஸெடான் வண்டிகளில் ஒரு டஜன் பெரிய குழந்தைகளோடு அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது. கல்யாண மண்டபம் கட்டியிருப்பவர்கள் மேலே திறந்திருக்கும் மோட்டார் வண்டியும் வைத்திருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இப்படியும் நடந்தது

இங்கிலாந்தில் 'போல்க் ஸ்டோன்' என்ற ஊரில் உள்ள பார்பாரா என்ற பதினெட்டு வயதுப் பெண்ணும், கோல்ட் ஸ்டாக் என்ற 19 வயதுள்ள வாலிபனும் கலியாணம் செய்து கொள்ள விரும்பினார்கள். ஆனால் பெண்ணின் தந்தை அவள் நன்றாகச் சமைக்கக் கற்றுக் கொண்டாலொழிய கலியாணம் செய்யச் சம்மதிக்கப் போவதில்லை என்று கூறி விட்டார்.

காதலர்கள் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், வழக்குத் தொடுத்தார்கள். "பார்பரா நன்றாகச் சமைக்கக் கற்றுக் கொள்ள வேண்டியது. இதற்கு மூன்று மாதம் அவகாசம் கொடுத்திருக்கிறேன்" என்று பெண்ணின் தந்தை பக்கம் தீர்ப்புக் கூறினார் நீதிபதி.

சேவைக்கு உதவும் சித்திரங்கள்

உலகெங்கிலும் உள்ள குழந்தைகளில் மூன்றில் இரண்டு பங்கினர், முன்னேற்ற மடைவதில் முனைந்திருக்கும் பின்தங்கிய நாடுகளில் வாழ்கின்றவர்களே. இவர்களில் பெரும்பாலோர் பசியாலும் பிணியாலும் அவதிப்பட்டுக்கொண்டும், கல்வி அறிவு இன்றியும் காலத்தை ஓட்டுகின்றனர். பரிதாப நிலையில் இருக்கும் இத்தகைய பாலகர்களுக்கு உதவும் நோக்கத்தோடுதான் ஐ. நா. சபையின் குழந்தைகள் நிதி (UNICEF) ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு நாடுகளிலும் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இந்நிதியைக் கொண்டு சகாயமளித்து வருகிறது. இந்நிதிக்குப் பணம் திரட்டும் நோக்கத்துடன் வழக்கம் போல இவ்வருஷமும் ஐ. நா. ஸ்தாபனத்தினர் வாழ்த்து மடல்கள் அச்சிட்டு விற்கின்றனர். உலகில் சிறந்த ஓவியக் கலைஞர்கள் பலர் இந்த வாழ்த்து மடல்களுக்கு வர்ண ஓவியங்கள் தீட்டித் தந்திருக்கின்றனர். இவ்விதழின் பொருளடக்கப் பகுதியில் வெளியாகியுள்ள கோமாளியின் சித்திரத்தை வரைந்த காரெல் ஸ்வாலின்ஸ்கை செக்கோஸ்லாவாகியா நாட்டினைச் சேர்ந்தவர்.



சென்ற ஆண்டில் மட்டும் மொத்தம் 2,60,00,000 வாழ்த்து மடல்கள் விற்பனை ஆயின. இதனால் இந்நிதிக்குக் கிடைத்த லாபம் சுமார் ரூ. 80,00,000 இந்தப் பெருந் தொகையும் கூட உலகெங்கிலும் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு உதவி அளிக்கும் ஐ.நா. சபையின் பணிக்கு இரண்டு வாரங்களுக்கு மட்டுமேதான் போதுமானதாய் இருந்தது என்றால் எப்பேர்ப்பட்ட பிரும்மாண்டமானதும் கடினமானதுமான வேலையை ஐ. நா. ஸ்தாபனம் மேற்கொண்டிருக்கிறது என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். வருங் காலச் செல்வங்களின் நல் வாழ்வில் அக்கறை கொண்ட அனைவரும் UNICEF, 11, JORBAGH, NEW DELHI' என்ற விலாசத்துக்கு எழுதி, இந்த வாழ்த்து மடல்களை வாங்கி நண்பர்களுக்கு விசேஷ தினங்களில் அனுப்பி வைக்கலாம்.

அறிவுக் கனலே, அருட் புனலே!

ரா. கணபதி

பிருந்தாவனத்தின் இரு புண்ணிய பாகங்களான ராதா குண்டத்திலிருந்தும், சியாம குண்டத்திலிருந்தும் கொண்டு வந்திருந்த மணலைப் பஞ்சவடியிலும், தமது சாதனைக் குடிலிலும் பரப்பினார் ராமகிருஷ்ணர்.

"ஹிருது. இன்றிலிருந்து இந்த இடம் பிருந்தாவனத்துக்குச் சமமாகப் புனிதமாகிறது" என்றார்.

ஹிருதயர் மண்வெட்டியால் குடிசையின் தளத்தைப் பெயர்த்துப் பிருந்தாவனத்து மணலைப் போட்டுக் கெட்டிப்படுத்தினார். தக்ஷிணேசுவர மண்ணும் பிருந்தாவன மண்ணும் கலந்தன.

இது நடந்து சிறிது காலத்தில் ஹிருதயரின் மனைவி மண்ணோடு மண்ணாகிப் போனாள். உலக வாழ்வின் ஆசை அற்றுப் போகாதவர்தான் ஹிருதயர். எனினும் அவர் அதனால் மனமுடைந்து விடவில்லை. ஏனெனில், உலக ஆசை அற்றுப் போகாவிடினும், என்றோ ஒரு நாள் அந்த ஆசை அற்றுப் போய்த் தானும் 'சின்ன மாமா'வைப் போல் சாதனைகள் புரியவேண்டும் என்ற அந்தரங்க எண்ணமும் ஹிருதயருக்கு உண்டு. மனைவி மறைந்ததையே சாதனைக்குத் தொடக்கமாகக் கொள்ள நினைத்தார் அவர்.

ராமகிருஷ்ணரிடம் வந்து தமக்குப் பயிற்சியளிக்குமாறு கோரினார் ஹிருதயர். ஸ்படிகப் பேழைக்குள் வைத்த பொருளை ஸ்வச்சமாகப் பார்ப்பது போல் தம் எதிரே உள்ளவரின் அடி ஆழம் வரை துல்லியமாகக் காணும் சக்தி பெற்ற ராமகிருஷ்ணர் உதட்டைப் பிதுக்கினார்.

"உனக்கு அதெல்லாம் சரிப் பட்டு வராது" என்றார்.

"வரும். வரும்படியாக உங்களால் செய்ய முடியும்" என்றார் ஹிருதயர்.

ஹிருதயரின் பூர்வ சம்ஸ்காரங்களை அவ்வளவு எளிதில் மாற்ற முடியாது என்பது ராமகிருஷ்ணருக்குத் தெரியும்.

ஆகவே, "அப்பனே, நீ எனக்கு சுசுருஷை செய்தாலே போதும்; உரிய காலத்தில் ஆத்ம சம்பத்தைத் தானாகப் பெறுவாய். இப்போது நீயும் என்னைப் போல் சாதனை செய்யத் தொடங்கிவிட்டால் என்னை யார் கவனித்துக் கொள்வது?" என்று கேட்டார்.

ஹிருதயர் நகைத்தார்.

"என்ன மாமா இப்படிச் சொல்லுகிறீர்கள்? எனக்கு மெய்யாகவே சாதனையில் ஆர்வம் இருக்கிறதா என்று பார்ப்பதற்குச் சோதனை செய்கிறீர்களா? உங்களை நானா இப்போது கவனித்துக் கொள்கிறேன்? உங்கள் சர்வேசுவரியல்லவா கண்ணும் கருத்துமாகப் பார்த்து ரட்சித்து வருகிறாள்? நான் இல்லாவிடில் இன்னொரு கருவி மூலம் அவள் உங்களைப் பராமரித்து வருவாள். அவ்வளவுதானே?" என்றார்.

"சரி, திவ்ய மாதாவின் சித்தம் எப்படியோ அப்படியே நடக்கட்டும். நீ போய்ப் பவதாரிணிக்குப் பூஜை பண்ணு" என்று பணித்தார் ராமகிருஷ்ணர்.

'திவ்ய மாதாவின் சித்தப்படி நடக்கட்டும்' என்று சின்ன மாமா சொன்னால் கேட்ட வரத்தை அவர் கொடுத்து விட்டார் என்று அர்த்தம் என்பது ஹிருதயருக்குத் தெரியும். அவர் மகிழ்ச்சியுடன் பவதாரிணியின் சேவைக்குச் சென்றார். என்ன ஆச்சரியமோ நிமிஷமாக அவர் உள்ளம் அம்பிகையிடம் குவிந்தது.

தன் நினைவின்றி தேவியைத் தியானித்துக் கொண்டிருந்த ஹிருதயரைக் கண்டதும், மதுராநாதருக்கு ஆச்சரியமாகிவிட்டது. ராமகிருஷ்ணரிடம் வந்தார். "பிதா, ஹிருதயருக்கு இவ்வளவு சித்த ஏகாக்கிரம் எப்படி ஏற்பட்டது?" என்று வியந்து கேட்டார்.

"அம்பாளிடம் பிரார்த்தித்துக் கொண்டான். அவள் அநுபவத்தைத் தந்திருக்கிறாள்" என்றார் ராமகிருஷ்ணர்.

"அம்பாளாவது, பிரார்த்தனையாவது? எல்லாம் உங்கள் லீலைதான்" என்று மதுராநாதர் பெருமூச்செறிந்தார். தமக்கும் இதே போல் அநுபவத்தை ராமகிருஷ்ணர் எப்போது அருளுவாரோ என்ற ஆர்வம் அவருக்கு உண்டாயிற்று. 'இந்த ஆர்வம் அவசியம்தானா' என்ற எண்ணமும் அவருக்கு உடனே தோன்றியது.

ஞானிகள் லோக மங்களமான பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். ஆனால் ஞானாக்கினியில் வினையை எரித்த அவர்களுக்குக் காரியத்தின் பலன் கிடையாது. எனவே அவர்களுடைய காரியத்தின் புண்ணிய பலன் அவர்களுடைய அடியார்களையே சாரும் என்பது சாஸ்திரம். இதன்படி தாம் சாதனை செய்யாவிடினும் ராமகிருஷ்ணருக்குப் பணிவிடை புரிவதன் மூலமே அவரது கர்மாக்களின் புண்ணிய வினைகளைப் பெற்று உயர் நிலை பெறலாம் என்ற நம்பிக்கை மதுராநாதருக்கு ஏற்பட்டது.

''ஐயனே! ஹிருதயரை உடனே சாமானிய நிலைக்குத் திருப்புங்கள். உங்களுக்கு ஊழியம் புரிவதற்கு மேல் ஒரு சாதனையும் உண்டோ? நந்தியும் பிருங்கியும் பரமேசுவரனுக்குப் பணிவிடை புரிவது போல் உங்களுக்குச் சேவை செய்யவே நானும் ஹிருதயரும் பிறந்தோம். எங்களுக்கு எதற்கு இந்த அசாதாரணமான அநுபவங்கள்?'' என்றார்.

மகானுக்குச் சேவை செய்வதற்காக ஆத்ம சாதனைகளைத் தியாகம் செய்யும் பக்குவம் பெற்றுவிட்டார்.

ஓர் இரவில் தியானம் செய்வதற்காகப் பஞ்சவடி செல்லும் ராமகிருஷ்ணரைப் பின்தொடர்ந்தார் ஹிருதயர். திடுமென ராமகிருஷ்ணரின் மானுட உரு மறைந்தது. ஒளிப் பிழம்பாகவே அவர் சென்று கொண்டிருப்பது தெரிந்தது. 'இது தமது பிரமைதானா?' என்று கண்களைத் துடைத்துக் கொண்டு பார்த்தார் ஹிருதயர். அல்ல, சுற்றுமுற்றும் இருந்த மரம் செடி கொடிகள் யாவும் எப்போதும் போல்தான் தெரிகின்றன. ஆனால் இன்னமும் ராமகிருஷ்ணர் ஜோதி மயமாகவே தெரிகிறார். அந்த ஒளியைத் தாங்காமல் ஹிருதயர் கண்ணைத் தாழ்த்திக் கொண்டார். தாழ்ந்த கண்கள் மீண்டும் கூசின. காரணம் பூமியில் பதிந்திருந்த தமது பாதங்களை அக்னிபோல் ஜ்வலிப்பதை ஹிருதயர் கண்டதுதான். பாதம் மட்டும்தானா? தம் உருவம் முழுவதுமே ஒளிமயமாகி விட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டார் ஹிருதயர். பரவச நிலையை அடைந்தார்.

''ராமகிருஷ்ணா, ஹே ராமகிருஷ்ணா! உன்னை வந்தடைந்த நாங்கள் செத்துப் பிறக்கிற சாதாரண ஜீவன்கள் அல்ல. நாங்களும் நீயேதான். நாங்கள் ஒரு காரியத்துக்காக இந்த உலகத்துக்கு வந்திருக்கிறோம். அந்தக் காரியத்தில் எங்களை ஈடுபடுத்தி அருள்வாய். நாங்கள் தேச தேசமாய் உலகமெல்லாம் சென்று மக்களைப் பந்தத்திலிருந்து விடுவிக்க அநுமதிப்பாய்'' என்று கூவினார்.

இச்சமயத்தில் ராமகிருஷ்ணரின் அக வாழ்க்கையில் ஒரு பெரிய திருப்பம் நிகழ்ந்து கொண்டிருந்தது. தம்முடைய அநுபவங்கள் எல்லாம் உலகுக்கு மத உணர்வை அளிப்பதற்காகவே ஏற்பட்டவை; தம்மை அதற்காகவே தேவி இவ்வுலகுக்கு அனுப்பியிருக்கிறாள் என்பதை அவர் உணர்ந்து கொண்டார். தம்மை உலகுக்கு அனுப்பிய தேவி தமது அநுபவங்களை உலகில் பரப்புவதற்காக சிஷ்ய மணிகளையும் தம்மிடம் அனுப்பி வைக்கப் போகிறாள் என்பதை ராமகிருஷ்ணர் உணரத் தொடங்கிய காலம் அது. ராமகிருஷ்ணரின் அநுக்கிரகத்தால் ஹிருதயர் அவருடனேயே ஒன்றுகிற உணர்வைப் பெற்று இந்த உண்மைகளை யெல்லாம் அறிந்து விட்டார். இதே சமயத்தில் தம்மை அவரிலிருந்து வேறுபடுத்திக் கொண்டு அவரது பணியைச் செய்யவும் துடித்தார்.

இந்தத் தருணத்தில் இந்த உண்மைகள் வெளிப்படுவது அநுசிதம் என்று கருதினார் ராமகிருஷ்ணர்.

ஹிருதயரை நெருங்கினார். ''நிறுத்து இந்தக் கூப்பாட்டை! உன்னுடைய கத்தலை யாராவது கேட்டால் என்ன நினைப்பார்கள்?'' என்று அதட்டினார். ஹிருதயரின் இருதயத்தை ஸ்பரிசித்தபடி, ''சர்வேசுவரி, இவனுடைய உணர்வுகளை மழுக்கிவிடு'' என்று பிரார்த்தித்தார்.

அந்தக் கணமே ஹிருதயர் பரவச நிலையிலிருந்து நழுவிக் கீழே வரலானார். ராமகிருஷ்ணரைப் பார்த்துப் பரிதாபமாகத் தேம்பினார். ''ஏன் மாமா, என் உன்னத அநுபவங்களை இப்படிப் பறித்தீர்கள்?'' என்றார்.

''என் அப்பனே! தகுந்த காலத்தில் உனக்கு மறுபடியும் சாதனை கைகூடும். இப்போது உன்னால் சாதனா வேகத்தைத் தாங்க முடியாது. நான் அழுது சிரித்து அமர்க்களப்படுத்தியதைப் பற்றி நீங்கள் எல்லாம் எவ்வளவு சொல்லியிருப்பீர்கள். ஆனால் என் அநுபவத்தில் லவலேசத்தைக்கூடச் சுமக்க முடியாமல் நீ இந்தப் பாடுபடுகிறாயே!'' என்றார் ராமகிருஷ்ணர்.

ஹிருதயரின் அருள் தாகம் தணிவதாக இல்லை. ராமகிருஷ்ணரின் வார்த்தையையும் புறக்கணித்து அவர் தீவிரமாக ஜபமும், தியானமும் புரியலா

ணார். ஒரு நாள் நள்ளிரவில் பஞ்சவடி சென்று ராமகிருஷ்ணரின் ஆசனத்தி லேயே அமர்ந்து ஜபம் புரியலானார். சிறிது போதுக்குப் பின் ராமகிருஷ்ண ரும் அங்கு தியானம் புரிய வந்தார்.

அவரைக் கண்டதும் ஹிருதயர் அல றித் தீர்த்து விட்டார்.

''நல்ல சமயத்தில் என்னைக் காக்க வென்றே வந்தீர்கள் மாமா! என் உடம்பெல்லாம் பற்றி எரிகிறது. என்னால் தாளவே முடியவில்லை. ரட்சி யுங்கள் மாமா'' என்று கூக்குரலிட் டார் ஹிருதயர்.

ராமகிருஷ்ணர் தமது தண்ணென்ற திருக் கரத்தால் அவரைப் பரிவுடன் தடவிக் கொடுத்தார். தாபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது.

வேறொரு நாள் ஹிருதயர் தமது கிரு கத்தில் சாரதா நவராத்திரி ஆராதனை யைச் சிறிதும் வழுவின்றிச் செய்யப் போவதாக ராமகிருஷ்ணரிடம் கூறினார். ''நீங்கள் பூஜைக்கு வந்திருக்க வேணும்'' என்று கேட்டுக் கொண்டார்.

''நான் ஸ்தூலமாக வருவதற்கில்லை'' என்றார் ராமகிருஷ்ணர். மனக் குறை யுடன் புறப்பட்டார் ஹிருதயர்.

''குழந்தே!'' என்று குளிரக் கூப் பிட்டார் ராமகிருஷ்ணர். ''ரொம்பவும் நியமம் வேணும் என்பதற்காகப் பட் டினி கிடந்து உடம்பை வருத்திக்கொள் ளாதே. சிறிது பாலும், ஜீராப் பாகும், கங்கா தீர்த்தமும் சாப்பிட்டு வா. அத னால் விரத பங்கமில்லை'' என்றார்.

மகாபுருஷர்களின் ஆன்மிக சாதனை யைச் சொல்வதா, மானுடப் பண்பைச் சொல்வதா?

மாமா வரவில்லையே என்ற குறை யுடனேயே நவராத்திரி பூஜை செய்து வந்தார் ஹிருதயர். ஏழாவது நாள் பூஜையன்று ஹிருதயரின் உள்ளம் துள் ளிக் குதித்தது. சின்ன மாமா தீபக் கொழுந்தாகத் தம் அருகே அமர்ந் திருப்பதைக் கண்டார் அவர். அஷ்ட மியும், நவமியும் கூடும் புனித கால மாகிய சந்தி பூஜையின் போதும் இதே திவ்விய தரிசனம் அவருக்குக் கிடைத்தது. ''நான் ஸ்தூலமாக வரு வதற்கில்லை'' என்று கூறிய சின்ன மாமா சூக்ஷ்மமாக வரக் கூடிய மகிமை பொருந்தியவர் என்பதை அப்போது தான் புரிந்து கொண்டார் ஹிருதயர்.

நவராத்திரி பூஜையான பின்பு ஹிரு தயரின் உள்ள எழுச்சி தணியத் தொடங்கியது. மாமாவைப் பணியப் பிறந்தவரே தாம், அதுவே தமக்கு ஜப மும் தவமும் என்பதை தேவி பூஜை யின் பெருமையால் அவர் உணர்ந்தார். சம்சாரத்தை விட்டு சந்நியாசியாகக் கூடியவரல்ல தாம் என்பதையும் தெரிந்து கொண்டார். மறுமணம் புரிந்துகொண்டார்.

ஹிருதயருக்கு மணமான சிறிது காலத்துக்குப் பின் ராமகிருஷ்ணரின் தமையனார் ராமகுமாரின் குமாரன் அக்ஷயனுக்கு விவாகம் நடைபெற்றது. நாலைந்து ஆண்டுகளாகச் சித்தப்பா வுக்குப் பிள்ளை நான்தான் என்று தக்ஷி ணேசுவரத்து ராதா கோவிந்தன் ஆல யத்தில் மனோலயத்துடன் பூஜை புரிந்து வந்த அக்ஷயன் விவாகத்துக்கு இசைந் ததே ஓர் ஆச்சரியமாகத்தான் இருந் தது. அந்த ஆச்சரியத்தை விரைவி லேயே அதிர்ச்சியாக்கிவிட்டான் அக்ஷ யன். தன்னைக் கைப்பிடித்த பாலகி யைச் சில வாரங்களிலேயே கைம்பெண் ணாக்கிவிட்டு மாண்டு போனான் அக்ஷ யன். பாட்டி சந்திரமணி துடிதுடித்துப் போனாள். ஹிருதயர் விம்மி விம்மிப் புலம்பினார். சிவகுமாரனைப் போலப் பொலிந்த அக்ஷயன் சவமாகிக் கிடந் ததைக் கண்டு தக்ஷிணேசுவரமே தவித்தது.

ராமகிருஷ்ணர் மட்டும் விழுந்து விழுந்து சிரித்தார்.

இளம் பிராயத்திலேயே அன்னையை யும் தந்தையையும் இழந்த அக்ஷயனை ராமகிருஷ்ணர் எப்படியெல்லாம் சீராட் டிப் பாராட்டி வளர்த்திருக்கிறார்? இப் போது ஏன் இப்படி அட்டகாசமாகச் சிரிக்கிறார்!

வாடிய அல்லி மலராகக் கிடந்த அக்ஷயனைக் கண்டபோது ராமகிருஷ் ணர் மிகவும் உயர்ந்த ஓர் ஆன்மிக நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். ஒரு கூட்டிலிருந்து எடுத்த கத்தியை இன்னொரு கூட்டில் வைப்பது போல் ஓர் உடலிலிருந்து பிரிகிற ஆத்மா இன்னோர் உடலில் உறையப்போகிறது, அவ்வளவுதானே? கிழிந்த உடையை மனிதன் மாற்றிக் கொள்வது போல் உளுத்துப்போன உடலை ஆத்மா மாற் றிக்கொள்கிறது என புண்டரீகாக்ஷன் கூறவில்லையா? அக்ஷயனைப் பொறுத்த மட்டில் இந்தக் கூட்டிலிருந்து எடுத்த கத்தி இன்னொரு கூட்டில் அடையப் போவதில்லை. இந்த உடல் என்ற உடையைக் களைந்த அவன் இன்னோர் உடல் எடுக்கப் போவதில்லை. அந்தக் கொடுத்து வைத்தவன் திவ்விய மாதா வுடன் இந்த இளம் பருவத்திலேயே லயமாகி விட்டான். இதற்கு அழுவா னேன்? இதை எண்ணி எண்ணித்தான் சிரித்தார் ராமகிருஷ்ணர்.



பெரிய சேமிப்பு...
சிறிய
டிபாஸிட்டுகள்
மூலம்
கிடைக்கின்றன.
உங்களது சிறு
டிபாஸிட்டுகள் விரைவில்
பெரிய சேமிப்பாக
வளருகின்றன
உடனே எமது சேவிங்ஸ், ரெக்கரிங் டிபாஸிட், பிக்ஸட் டிபாஸிட் திட்டங்களில் சேருவதின் மூலம் உங்களது வளரும் குழந்தைகளின் பிற்கால வசதியான வாழ்விற்காக உங்கள் சேமிப்பு வளருகின்றது.
எங்களது திட்டங்கள் உங்கள் சௌகரியத்துக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டுள்ளன.
இந்தியன் பாங்க் லிட்.
பதிவு அலுவலகம்:
இந்தியன் சேம்பர் பில்டிங், எஸ்பிளனேட், சென்னை - 1.
இந்தியா முழுவதும் கிளைகள் உண்டு
செக்ரடரி. G. S. சுந்தரம்.
ELEGANT-/IB/-1

ஆனால் அவரும் சாதாரண நிலைக்கு இறங்கி வந்தபோது துயரவசமானார். அக்ஷயன் வசித்த அறைப் பக்கமே அதன் பின் அவரால் செல்ல இயலவில்லையாம்.

அக்ஷயன் செய்துவந்த ராதா கோவிந்தன் பூஜையை ராமகிருஷ்ணரின் மற்றொரு தமையனான ராமேசுவரர் ஏற்றுக் கொண்டார். எனினும் சொந்த ஊர் என்பதைத் துடைத்துப் போட்டு விடாமல் ஒரு தொடர்பு வைத்துக் கொண்டிருந்த நாளல்லவா அது? எனவே அவர் அடிக்கடி கமார்புகூர் செல்ல வேண்டியிருந்தது. இதனால் வேறு இருவர் பூஜையைக் கவனித்துக் கொண்டனர்.

கல்கத்தாவில் கலுதோலா என்ற இடத்தில் நாம சங்கீர்த்தனம் செய்யும் ஹரிசபை ஒன்று நடைபெற்று வந்தது. பகவத் விஷய பிரவசனங்களில் ஆஞ்சநேய ஸ்வாமிக்கென்று ஓர் ஆசனம் ஒதுக்கி வைப்பது போல் ஹரி சபையில் சைதன்ய மகா பிரபுவுக்காக ஓர் ஆசனம் அமைத்திருந்தார்கள்.

ராமகிருஷ்ணர் அந்தச் சபைக்குச் சென்றார். அடியார்கள் நாராயண நாமத்தை நாவாரச் சொல்லி வாயும் உள்ளமும் இனித்துப் போயினர். ராமகிருஷ்ணரின் திவ்விய போதை ஏறிக் கொண்டே போயிற்று. இக உலகப் பிரக்ஞையை அறவே மறந்தவராக ஆடிப் பாடிப் பின்னர் ஆடலும் பாடலும் மறைந்து மோனம் கூடினார். சாந்தம் பூத்த திருமுகத்தோடு சைதன்யருக்கென நியமித்திருந்த ஆசனத்தில் சென்றமர்ந்து சமாதியில் ஆழ்ந்து விட்டார். பக்தியும், பக்தனும், பரமனும் ஒன்றில் மற்றது கரைந்து போன நிலையில் ராமகிருஷ்ணர் சைதன்யரின் ஸ்தானத்தில் வீற்றதை யாருமே தவறாக எண்ணவில்லை. நிமாயி ஸ்வாமி மீண்டும் வந்திருக்கிறார் என்ற நம்பிக்கையுடன் அவரை வணங்கவே செய்தனர். ராமகிருஷ்ணரும் சைதன்யரும் ஒருவரே என்று பைரவி பிராம்மணி கூறியது நினைவிருக்கிறது அல்லவா?

என்றாலும் பிறகு இந்தச் சம்பவம் வெளியில் பரவி இரு தரப்பான கருத்துக்கள் தோன்றின. வைஷ்ணவ சங்கங்கள் பல ராமகிருஷ்ணரையும், கலுதோலா ஹரி சபையினரையும் பழித்தன.

இதற்குச் சில மாதங்களுக்குப் பின் ராமகிருஷ்ணருடைய விருப்பத்தின் பேரில் சைதன்யர் வாழ்ந்த நவத்வீபத்துக்கு அவரை அழைத்துச் சென்றார் மதுராநாதர். புனித ஸ்தலங்களிலெல்லாம் சமாதி அடைந்து விடும் ராமகிருஷ்ணர் நவத்வீபத்தில் மட்டும் அப்படித் தம்மை மறந்த உன்னத நிலையை அடையவில்லை. மாறாக அங்கிருந்து, கங்கா நதியில் படகில் வரும் போது திடீரெனப் பரவசமடைந்தார். படகிலிருந்து அவர் விழாமல் ஹிருதயர்தான் காப்பாற்றினார். ''இந்த இடமே சைதன்யர் வாழ்ந்த நவத்வீபம். அன்று தீவாக இருந்த இடத்தில் இன்று ஆறு ஓடுகிறது. இப்போது நாம் நவத்வீபம் என்பது உண்மையில் சைதன்யர் வாழ்ந்த இடமல்ல'' என்றார் ராமகிருஷ்ணர்.

பிற்பாடு நடந்த ஆராய்ச்சிகளிலிருந்து ராமகிருஷ்ணர் கூறியதே உண்மை எனத் தெரிய வருகிறது. காற்றின் அழுத்தத்தைக் காட்டும் பாரமானி போல் பூமியின் புனிதத் தன்மையை அளந்து காட்டுகிற ஓர் அற்புதக் கருவியாக இருந்திருக்கிறார் ராமகிருஷ்ணர்.

கல்னா என்ற புண்ணியப் பகுதிக்குச் சென்றார் ராமகிருஷ்ணர். அங்கு எண்பது வயதைத் தாண்டிய பகவான் தாஸ் என்ற வைணவ சித்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். ராமகிருஷ்ணர் கலுதோலாவில் சைதன்யருடைய பீடத்தில் அமர்ந்ததாகக் கேள்விப் பட்டபோது அதனை பகவான் தாஸ்

வன்மையாகக் கண்டித்திருக்கிறார். அவரைக் காண அவருடைய ஆசிரமத்துக்கு வந்தார் ராமகிருஷ்ணர். "என்பது வயதுக்கு மேலானவராயிற்றே! எவ்வளவு சாதனைகள் செய்திருப்பாரோ? எத்தகைய அநுபவங்கள் பெற்றிருப்பாரோ? அவர் முன் நாம் எப்படி நிற்பது?" என்று எண்ணினார் எளிமையில் சிறந்த ராமகிருஷ்ணர். தலையிலிருந்து கால் வரை தம்மை நன்றாகப் போர்த்திக் கொண்டு குழந்தை போல ஆசிரமத்தில் பிரவேசித்தார்.

"இங்கு யாரோ மகாத்மா வருகிறார்கள் போலத் தெரிகிறதே" என்றார் உள்ளே இருந்த பகவான்தாஸ். அவரிடமும் ஒரு பாரமானி இருந்தது!

ராமகிருஷ்ணர் ஆசிரமத்துக்குள் நுழைந்தபோது, ஏதோ தவறு செய்த சாதுவைக் கண்டித்துக் கொண்டிருந்தார் பகவான்தாஸ். "உம்முடைய ஜபமாலையைப் பிடுங்கிக்கொண்டு, உம்மைச் சமூகத்திலிருந்தே நான் பகிஷ்காரம் செய்யப் போகிறேன்" என்று காரமாக அவர் மொழிந்து கொண்டிருந்தார்.

"என்னுடைய மாமா இவர். தக்ஷிணேசுவரத்து ராமகிருஷ்ணர் என்பார்கள். பகவந் நாமாவைக் கேட்டாலே பரவசத்தில் ஆழ்ந்துவிடுகிறவர் இவர்" என்று ராமகிருஷ்ணரை அறிமுகம் செய்தார் ஹிருதயர்.

ஹிருதயரிடம் ஏதோ வினவியபடியே தமது ஜபமாலையை உருட்டலானார் பகவான்தாஸ்.

"பூரணத்துவம் பெற்ற தாங்கள் ஏன் இன்னமும் இதெல்லாம் செய்கிறீர்கள்?" என்று கேட்டார் ஹிருதயர்.

"உலகுக்கு வழி காட்டவே, உபதேசிக்கவே நான் இப்படிச் செய்கிறேன்" என்றார் பகவான்தாஸ்.

அந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் ராமகிருஷ்ணரின் உடல் முழுவதும் கூசிற்று. ஆஹா, இவ்வளவு பெரிய மகானுக்கா இத்தனை அகம்பாவம்? 'நான் உம்மை பகிஷ்காரம் செய்வேன்' என்று சற்று முன் கூறினார்! இப்போது "நான் உலகுக்கு வழி காட்டுகிறேன்" என்கிறாரே! இவரா இதையெல்லாம் செய்கிறார், அல்லது செய்ய முடியும்? மகா சக்தியல்லவா உள்ளே புகுந்து நடத்தி வைக்கிறாள்?

ராமகிருஷ்ணர் பரபரப்புடன் எழுந்தார். "ஒருவரை ஒதுக்கவோ சேர்க்கவோ, ஒருவருக்கு உபதேசிக்கவோ நீங்கள் யார்? ஒருவனைக் கொண்டு தவறு செய்யும் அவனே அல்லவா இன்னொருவனைக் கொண்டு அவனைத் தண்டிக்கிறான்? அவன் அருள் இன்றி உபதேசம் செய்துவிட முடியுமா? செய்தால் தான் அது பலனளிக்குமா?" என்று மனவெழுச்சியுடன் கூறினார் ராமகிருஷ்ணர். சைகைகளுடன் அவர் பேசிய போது அவர் இழுத்துப் போர்த்தியிருந்த வஸ்திரம் நழுவியது. சந்தன மரம் போல ஒளியும் குளிர்ச்சியும் ஒருங்கே தோன்ற நின்றார் ராமகிருஷ்ணர். அவருடைய சத்தியமும் சரணாகத புத்தியும் அந்தச் சூழலில் அலை பாய, அந்த அலையையும் அறியாமல் சமாதியில் ஆழ்ந்தார் ராமகிருஷ்ணர்.

பகவான்தாஸின் இதய வீணையில் இதுவரை பிறவாத ஓர் அன்பு நாதம்—எளிமை நாதம்—பிறந்தது. வெட்கி மௌனியாக அமர்ந்திருந்தார் அவர். அதற்குள் யாரோ, "இவர்தான் கலுதோலாவில் சைதன்யப் பிரபுவின் ஆசனத்தில் கூசாமல் அமர்ந்தவர்" என்று ராமகிருஷ்ணரைப் பற்றி பகவான்தாஸிடம் கூறினார்கள்.

"அப்படியா!" என்று கேட்ட பகவான் தாஸின் குரலில் ஆச்சரியத்தோடு உவகையும் கலந்திருந்தது.

முப்பத்து நாலே வயதான ராமகிருஷ்ணரை வணங்கினார் அந்த வயோதிக சாதகர். "உங்களை இன்னாரென்று தெரியாமல் முன்பு நிந்தித்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்" என்றார்.


"நீங்கள் எவ்வளவு பெரியவர்! உங்களை எப்பேர்ப்பட்ட பெரியவர்களெல்லாம் வணங்குகிறார்கள்! நீங்கள் இந்தத் தக்ஷிணேசுவரத்தில் இருக்க நான் என்ன பாக்கியம் செய்தேனோ" என்றார் மதுராநாதர் ராமகிருஷ்ணரிடம், யாத்திரை முடிந்து திரும்பியபின்.

"மதுர், நீங்கள் உள்ளவரை நான் இங்குதான் இருக்கப் போகிறேன்" என்றார் ராமகிருஷ்ணர் — ஏனோ அவர் குரல் தடுக்கிற்று.

மேக மூட்டத்துக்குப் பின்னால் மறைந்திருக்கும் பிறையைக் காண்பது போல் ஏதோ ஓர் உண்மையை மதுராநாதரும் புரிந்து கொண்டார்.

"ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? என் மனையாள் ஜகதாம்பா தாஸிக்கு உங்களிடம் சாதாரணமான பக்தியா? நான் போன பின்னும் அவளைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று மனம் கசிந்து பிரார்த்தித்தார் மதுராநாதர்.

சில நாட்களுக்குப் பின், அதாவது 1871ம் ஆண்டு ஆனி மாதத்தில் மதுராநாதருக்குக் காய்ச்சல் கண்டது; நாளுக்கு நாள் தீவிரமாயிற்று. (தொடரும்)



பாரெக்ஸ் புகட்டும் பருவம்

உங்கள் குழந்தைக்கு ஏறக்குறைய நான்கு மாதம் என்றால் அதுவே பாரெக்ஸ் புகட்டும் பருவம். பக்குவம் செய்து தயாரான நன்செய் தானிய உணவே பாரெக்ஸ்; வைட்டமின் Dயும் தாதுப் பொருள்களும் செறிந்தது. பற்களையும் எலும்புகளையும் வலுவாக்குவதற்கான எல்லாச் சத்துக்களும் உள்ளடங்கி, திடமான வளர்ச்சிக்கு உதவுவது பாரெக்ஸ். இதன் தயாரிப்பாளர்கள்: 'குழந்தை உணவுப் புகழ்' கிளாக்ஸோ.

பாரெக்ஸ்—ஓர் கிளாக்ஸோ தயாரிப்பு






இலவசம்! 'தி பாரெக்ஸ் கைடு' (ஆங்கிலம்) குழந்தைகளை ஊட்டி வளர்ப்பதுபற்றிய இந்நூலை வேண்டுவோர், தபால் செலவுக்காக 15 ந. பைசா தபால் வில்லைகளை அனுப்பி, எழுதுக: பாரெக்ஸ், தபால் பெட்டி 202, பம்பாய்—1.

FA. 3-78 TM











திரை உலகும் கல்கியும்

ஆசிரியர் அவர்களுக்கு
வணக்கம்.

'கல்கி' இதழின் (21–7–63) அட்டையைப் பார்த்தது முதல் எங்கள் குடும்பமே அதை நம்ப முடியாமல் அது ''கல்கி''தானா என்ற சந்தேகம் தீராமல் தவிக்கிறோம். காரணம், அட்டைப் படத்தில் தாங்கள் இடமளித்திருக்கும் வடநாட்டுத் திரைப்படக் கதாநாயகியின் போட்டோதான்.

இன்று அந்த அட்டையில் வடநாட்டுக் கதாநாயகிக்கு இடம் தந்த மர்மம் என்னவோ? இன்றைய நம் தமிழ் சினிமா உலகில் உயர்ந்து நிற்கும் நடிகர் திலகம் சிவாஜியையோ, நடிகையர் திலகம் சாவித்திரியையோ தாங்கள் 'கல்கி' அட்டைப்படத்தில் போட்டுக் கௌரவித்ததாக எனக்குத் தெரியவில்லையே?

தாங்கள் ஏன் சினிமா கதாநாயகியை அட்டைப் படத்தில் போட்டுக் கல்கியின் புனிதத் தன்மையைப் பிறர் குறைத்துப் பேசும்படி செய்ய வேண்டும்?

மைலாப்பூர்
26-7-63 ருக்மிணி பார்த்தசாரதி

[கல்கியின் அட்டைப்படத்தைப் பார்த்ததும் ஸ்ரீமதி ருக்மிணி பார்த்தசாரதிக்கு ஏற்பட்ட வியப்பைக் காட்டிலும் அவரது கடிதத்தைக் கண்டதும் எங்களுக்கு ஏற்பட்ட வியப்பு சற்றும் குறைந்ததல்ல! சினிமா இந் நாட்டில் வேரூன்றி விட்ட ஒரு கலை. மக்களை உயர்த்தவோ தாழ்த்தவோ அபார சக்தி படைத்த ஒரு சாதனம். இத்தகைய சக்தி மிக்க சாதனம் சரியான விதத்தில் பயன்படுத்தப்படுகிறதா என்று கண்காணிப்பதில் பத்திரிகைகளுக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு. இக் கடமையை ஆரம்ப நாட்களிலிருந்தே கல்கி சிறப்பான வகையில் நிறைவேற்றி வந்திருக்கிறது. மோசமான படங்களை விமர்சனங்களில் தாக்கத் தயங்கியதில்லை; நல்ல படங்களைப் பாராட்டப் பின் வாங்கியதும் இல்லை. சரியான சந்தர்ப்பத்தில் திரை உலகுடன் சம்பந்தப்பட்டோரில் சிறந்தவர்களை அட்டையில் வெளியிட்டுக் கௌரவித்தும் இருக்கிறோம் என்பதை இந்தப் பக்கங்களில் உள்ள புகைப்படங்கள் நிரூபிக்கும். நடிப்பில் பிரதமரான சிவாஜி கணேசனும் பாரதப் பிரதமரான நேருஜியும் ஒரே சமயத்தில் கல்கி இதழ் அட்டையில் வந்திருக்கிறார்கள் என்பதை இந்தப் புகைப்பட வரிசையில் காணலாம். 'மறக்க முடியாத திரைப்படங்கள்' என்ற தலைப்பில் சில





















மாதங்கள் பிரசுரமான சிறப்பு அம்சமும். சென்ற இதழிலும் இந்த இதழிலும் வெளியாகியுள்ள 'வெள்ளித்திரையின் வளர்ச்சி' என்ற ஆராய்ச்சிக் கட்டுரையும் திரைப்பட உலகுக்குக் கல்கி ஆற்றியுள்ள பெரிய சேவை எனக் கருதுகிறோம். இதே உயர்ந்த நோக்கத்துடன் திரை உலகின் பொன்விழா ஆண்டையொட்டி கல்கியின் செப்டம்பர் 22ந் தேதி இதழ் "திரைப்பட மலராக"ப் பல சிறப்பு அம்சங்களுடன் வெளியாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இது பற்றிய அறிவிப்பை இவ்விதழின் வேறு ஒரு பக்கத்தில் காணலாம். — ஆசிரியர்]

படங்கள்: இடது பக்கம் மேலிருந்து கீழாக: செப்டம்பர் 16, 1941 — சாந்தா ஆப்தே — சாவித்திரி; அக்டோபர் 10, 1942 கண்ணாம்பா — கண்ணகி; மார்ச் 1, 1943 — பாபநாசம் சிவன் — குபேர குசேலா; ஏப்ரல் 10, 1943—எஸ். டி. சுப்புலக்ஷ்மி—வள்ளியாக; — செப்டம்பர் 20, 1943 — சைகால் — தான்ஸேன்; ஏப்ரல் 16, 1944 — ஷோபனா சமர்த் — ராம ராஜ்யம்; ஜூலை 2, 1944 — பேபி ராதா - மீரா; அக்டோபர் 28, 1945 - ஸ்ரீமதி எம். எஸ். - மீரா; டிஸம்பர் 9, 1945— டைரக்டர் எல்லிஸ் ஆர். டங்கன்; ஜூன் 1, 1947 ஸ்ரீமதி சரோஜினி தேவி — நேருஜி — ஸ்ரீமதி எம். எஸ். (ஹிந்தி மீரா வெளியீட்டினை யொட்டி); வலது பக்கம்: ஜனவரி 4, 1948 — பேபி ராதாவும் நேருஜியும்: — ஜூலை 3, 1949 — ஸ்ரீ எஸ். எஸ். வாஸன் — சந்திரலேகா; டிசம்பர் 4, 1949 — ஸ்ரீ என் எஸ். கே.; மே 7, 1950 — நர்கிஸ்—பர்஼ஸாத்; நவம்பர் 5, 1950 — ஸ்ரீ ஏ.வி.எம்.— வாழ்க்கை; ஜூன் 1, 1952 — நாகையா— ஏழை படும் பாடு; ஆகஸ்ட் 16, 1953 ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் — ஒளவையார்; பிப்ரவரி 27, 1955 — தில்லி சினிமா கலை அரங்கினை யொட்டி தேவிகாராணி — கர்மா; ஏப்ரல் 26, 1959 — சிவாஜி கணேசனும் நேருஜியும் — இரண்டு பிரதமர்கள்; ஜூலை 3, 1960 - ஜூபிலியின் பார்த்திபன் கனவு; ஜூலை 21, 1963 — நூதன் — பந்தினி.














குரிய
தலைவி
Robin Ultramarine
வெள்ளைத் துணிகளை பிரகாசிக்கச் செய்கிறது

குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

அத்தியாயம் ஆறு
பரம்பரைக்கு ஒரு பொக்கிஷம்

உமாவின் வீட்டிலிருந்து குதூகலத்துடன் கிளம்பிய பிச்சுமணி தன்னுடைய பேபி ஆஸ்டின் காரை நோக்கி வந்தான்.

அவனிடம் பெல்ட் அடி வாங்கிய நாயின் மூலம்தான் அவனுக்கு உமாவின் அறிமுகம் கிடைத்தது என்று நினைக்கும்போது அதன் மீது அளவிலா அன்பு சுரந்தது. ஆனால் அவன் சுற்றுமுற்றும் பார்த்தபோது, தெருவில் அந்த நாயைக் காணோம். அதன் உடைமைக்காரன் வந்து அதை இழுத்துக் கொண்டு போய்விட்டானோ என்னவோ?

பிச்சுமணி தன் காரை ஓட்டி வந்து மெரினா கடற்கரையில் நிறுத்தினான்.

அவனுடைய காதில் சொருகியிருந்த குண்டு மல்லிகையின் நறுமணம் அவன் உள்ளத்தில் இனம் புரியாத ஓர் இன்பப் போதையை மிருதுவாகப் பரப்பிக் கொண்டிருந்தது. அதன் ஆழ்ந்த நறுமணத்தின் ஊடே இரவின் சுகந்தத்தில், இயற்கையின் பொலிவெல்லாம் பிச்சுமணிக்கு இது வரை உணர்ந்தேயிராத ஒரு புது வித ரசனையை எழுப்பின. பாதையில் செல்லும் ஆண் பெண் ஜோடிகள், வானத்தில் சிரிக்கும் மோகன நிலவு, கடலெனும் நீல நிற மஞ்சத்தில் பொங்கிப் பொங்கி விழும் அலைகளின் ஓசை, கண்ணுக்குத் தெரியாமல் மெல்ல மெல்ல விளையாடி வந்து, கட்டித் தழுவும் கடற் காற்று, இவற்றையெல்லாம் பிச்சுமணி இதற்கு முன்னால் ஒரு முறை கூட அனுபவித்தது கிடையாது. ஆனால் இப்போதோ அவற்றிலெல்லாம் அலாதியான அர்த்தங்கள் தொனித்து, பிச்சுமணியின் உள்ளத்தில் மோகமான கற்பனைகளையெல்லாம் வளர்ந்தெழச் செய்தன. அக்கற்பனைகளெல்லாம் வானத்து வெண்ணிறத் தேவதையைப் பூவுலகத்துக்கு இறக்கிக் கொண்டுவர முயன்றன. அந்த அற்புத தேவதையின் முகமோ உமாவின் அமைதியான முகம்போலவே இருந்தது!

புது வெள்ளம் போன்ற அந்நினைவுகளில் நீந்தி விளையாடிய பிச்சுமணிக்கு இரவு எட்டரை மணியானது கூடத் தெரியவில்லை.

தன் கைக் கடிகாரத்தைப் பார்த்ததும் அவனுக்குத் தாத்தாவின் நினைவு ஊசி போல் குத்தியது. உடனே அவன் தன் பேபி ஆஸ்டின் காரை முடிந்த அளவு வேகமாக ஓட்டிக் கொண்டு தன் தாத்தாவின் கோட்டையை நோக்கிப் பறந்தான்.

மேஜர் ராமதுரையின் அந்தக் கோட்டை, சாந்தோம் வட்டாரத்தில் முள் வேலியிடப்பட்ட ஒரு பெரிய தோட்டத்தின் நடுவே பூதாகாரமான பங்களாவாக அமைந்திருந்தது. அது ஆதியில் வெள்ளைக்காரத் துரை ஒருவருக்காகக் கட்டப்பட்டது. ''வெள்ளையனே வெளியேறு!'' என்ற சுதந்திர கோஷம் ஆக்ரோஷமாக மாறிய சமயம் பார்த்து அந்தப் பங்களாவை மேஜர் ராமதுரை மலிவான விலைக்கு வாங்கி விட்டார்.

அவர் வீர பரம்பரையைச் சேர்ந்தவர். அவருடைய மூதாதையர்களின் பூர்வ சரித்திரம், மதுரை நாயக்க மன்னர்களின் சாம்ராஜ்யம் ஸ்தாபிதமாகிய பாளையக்காரர்களைத் தோற்றுவித்த காலம் முதல் தொடங்கி, வீர பாண்டிய கட்டபொம்மன் காலம் வரை 'பாளையக்காரர் பரம்பரை'யாகத் திகழ்ந்தது. பிறகு பாளைய ஒழிப்பெல்லாம் முடிந்து, பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் ஸ்தாபிதமானதும் அந்தப் பரம்பரை, ராஜாக்கள் — ஜமீன்தார்கள் பரம்பரையாகத் திரிந்தது. அவர்களில் சிலர் கோபுரத்தைத் தாங்கும் பொம்மைகள் போல் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைத் தாங்கும் தூண்களென்று தங்களைச் சொல்லிக் கொண்டு, சர்-திவான் பகதூர் — ராவ் பகதூர் முதலான பட்டங்கள் பெற்றுக் கௌரவப் பரம்பரையாகப் பிரிந்தனர். வீர ரத்தமுள்ள சிலர் பிரிட்டிஷ் பட்டாளத்தில் சேர்ந்து, மேஜர் — கர்னல் முதலான பட்டங்களைப் பெற்றுப் 'பட்டாளத்தார் பரம்பரையாக' விளங்கினர். அந்தப் பட்டாளத்தார் பரம்பரையில் உதித்தவர்தான் மேஜர் ராமதுரை!

அவர் மேஜர் என்ற பட்டத்துக்காகப் பிரிட்டிஷ் ராணுவத்தில் சிறிது காலம்தான் பணியாற்றினார் என்றாலும், குறுகிய காலத்திற்குள் ஏராளமான வீரப் பதக்கங்கள் பெற்றிருந்தார். அதுமட்டுமல்ல; அவர் வேட்டை

யாடிய காலங்களில் ஒரு சிறுத்தை, மூன்று புலிகள், இரண்டு காட்டெருமைகள் முதலானவற்றைச் சுட்டுத் தள்ளி அவற்றின் தலைகளை யெல்லாம் பாடம் செய்து தமது பங்களாவின் சுவர்களில் வீரத்தின் பயங்கரச் சின்னங்களாகத் தொங்க விட்டிருந்தார்.

அவருக்கு எழுபத்தாறு வயதாகிவிட்டது! இருந்தாலும் இன்னும் அவர் வெடிக்கத் தயாராக இருக்கும் பழங்காலத்துப் பீரங்கி போலவே காட்சியளிப்பார். அதற்கு அவருடைய முறுக்கு மீசை யொன்றே கட்டியம் கூறும். அந்த மீசையோடு தம்முடைய முகவாயில் ஒரு தாடியையும் வளர விட்டால், தம்மைப் 'பொய்ஞானி' யெனப் பறைசாற்றும் என்று பயந்து தினந்தோறும் தமது பழைய க்ஷவரக் கத்தியை முகத்தில் விளையாட விட்டு முறுக்கு மீசை ஒன்றைத் தவிர தம்முடைய முகத்தில் எதுவும் வளராதபடி வெட்டி எறிந்து விடுவார்.

அவருடைய வாழ்க்கைத் துணைவி அவருடைய வயதை எட்டிப் பிடிக்க முடியாமல் முப்பது வருஷங்களுக்கு முன்பே இருதய வியாதியோடு போராடி வீர சுவர்க்கம் அடைந்து விட்டாள். அந்தப் புண்ணியவதியோடு மேஜர் கழித்த குறுகிய 'தேன் நிலவு' நாட்களில் அவருக்கு ஒரே ஒரு புதல்வன்தான் பிறந்தான். 'செல்லத்துரை' என்று பெயர் சூட்டப்பட்ட அந்தத் தவப் புதல்வனோ, பரம்பரைப் பெருமையையும், ஜாதி, சம்பிரதாயங்களையும் பூர்விக சொத்துக்களையும் புறக்கணித்து விட்டு, உலக வாழ்க்கைக்குக் காதலே பிரதானம் என்று முழங்கியவனாக மலையாளத்துக்கு ஓடி மோகினி என்னும் ஒரு நாடகக் காரியை மணந்து கொண்டு அவளே சதமென்று கிடந்தான். அந்தக் காலத்தில் மேஜர் ராமதுரையும் முரட்டுப் பிடிவாதமுடையவராக விளங்கியதால் தம் அந்தஸ்துக்குக் குந்தகம் விளைவித்த பிள்ளை இனித் தம் முகத்தில் விழிக்கவே கூடாதென்று தூரத் தள்ளி விட்டார். தம்முடைய ஒரே வாரிசை மயக்கி இழுத்துக் கொண்ட நாடகக்காரி மோகினியையும் தம் பரம சத்துருவாகப் பாவித்தார். அந்தத் துவேஷம் முற்றிய பிறகு பெண்ணினத்தைக் கண்டாலே வெறுக்கும் மனப்பான்மையை அவரிடம் வளர்த்து விட்டது. அதனால் ஆண் வாடையே ஆகாது என்ற அல்லி ராணி போல், பெண் வாடையே ஆகாது என்னும் ஆண் மகாராஜனாக மாறித் தம் மாளிகைக்குள் எந்த விதப் பெண்ணும் எந்தக் காரணத்தை முன்னிட்டும் நுழையவே கூடாதென்று கடுமையான உத்தரவுகளும் பிறப்பித்தார்.

அவருடைய குமாரன் செல்லத்துரையோ மலையாளத்தில் தன் காதல் மனைவியான மோகினியின் மோகனப் புன்னகையிலேயே தன் காலம் முழுவதையும் கழித்துவிடத் தீர்மானித்துக் கடைசியில் அவளுக்கு ஓர் ஆண் குழந்தையைக் கொடுத்து விட்டு, மோகினியின் கைக்குள்ளேயே தன் உயிரை நீத்துக் காதலர்களின் சொர்க்கத்துக்குப் போய்விட்டான். அவனுக்கு அந்த மலையாளத்து மோகினியிடம் பிறந்த ஆண் குழந்தைதான் பிச்சுமணி.

மேஜர் ராமதுரையின் வீரப் பரம்பரைக்குப் பிச்சுமணியைத் தவிர வேறு வாரிசு யாரும் மிஞ்சாததால் தம் சொந்தக் குமாரனின் திருமணத்தை அங்கீகரிக்காத மேஜர் தம் பேரனை மட்டும் அங்கீகரித்துப் பிச்சுமணியைக் குழந்தைப் பருவத்திலேயே எடுத்து வந்து தம் கோட்டைக்குள் வைத்துக் கொண்டுவிட்டார்.

பிச்சுமணியைப் பெற்ற மலையாளத்துப் பெண்மணி அதன் பிறகு என்ன ஆனளோ, தெரியவில்லை. மேஜர் ராமதுரையைப் பொறுத்த வரையில் அந்தப் பெண்மணி எங்கோ இறந்து போய் விட்டாள் என்ற வதந்தியை அவர் ஊர்ஜிதப்படுத்தி அந்த மோகினியின் சகாப்தத்தையே முடித்து விட்டார்!

பிச்சுமணியோ தாயில்லாத செல்வனாகவே தாத்தாவின் பராமரிப்பில் வளர்ந்து ஆளானான். தாத்தாவின் காலத்துக்குப் பிறகு பூர்விக சொத்துக்களை ஆண்டு அனுபவித்துப் பரம்பரைப் பெருமையை நிலைநாட்டுவதற்குத் தேவையான குணதிசயங்களையெல்லாம் பேரன் பிச்சுமணியின் மீது திணிப்பதில் அவனுடைய தாத்தா மும்முரமாக இருந்தார்.

பிச்சுமணி தன் தோற்றத்தில் மலையாளத்து மோகினியான தன் தாயாரையே உரித்துக் கொண்டு பிறந்திருந்தான் என்று சொல்லலாம். அதே கலையம்சம் பொருந்திய அழகான முகவெட்டு! தந்தம் போன்ற அதே குளுமையான நிறம்! கருத்தடர்ந்த விழிகளின் மீது அதே அடர்த்தியான புருவங்கள்! சிரித்தால் அதே மாதிரிக் குழி விழும் கன்னங்கள்!

பிச்சுமணி தன் தோற்றத்தில் மட்டுமல்ல, தன் பாவனைகள், உணர்ச்சிப் போக்குகளிலும் கூடத் தன் தாயாரான மோகினியையே பிரதிபலித்துக் கொண்டிருந்தான். மோகினியைப் பற்றிய நினைவையே விஷமென வெறுக்கும்

தாத்தாவோ தம் பேரனிடம் மோகினி பிரதிபலிப்பது தம் கண்களுக்குத் தோன்றாதபடி தம் நெஞ்சை இறுகச் செய்து அந்த நினைவையே மறக்கடித்துக் கொண்டுவிட்டார். அவ்வளவு தூரம் அவருக்குப் பிச்சமணியின் மீது பாசம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அத்தனைக் கத்தனை அவனைத் தம் பரம்பரைக்கு உரியவனாகச் சீர்திருத்துவதில் தாத்தா எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளும் அதிகக் கடுமையாகவே இருந்தன.

இவற்றினிடையே, 'தாயன்பு' என்பதையே அறிந்திராத பிச்சமணிக்குச் சில சமயங்களில் அந்தக் குறை தட்டுப்படும். மர்மமாகத் தொடங்கிய தன் வாழ்க்கையில் என்றாவது ஒரு நாள் எங்கிருந்தாவது ஒரு தாய் எந்த வடிவத்திலாவது அவதரித்து வரமாட்டாளா என்றுகூட ஏங்குவான்! அந்த ஏக்கம் கூடியவரை அவனுக்கு ஏற்படாதபடி அவனுடைய தாத்தாவே தாயன்பையும் சேர்த்து அவன் மீது பொழிந்து அவனை வளர்த்தார். அவன் குழந்தையாக இருந்தபோது தாத்தாவே தம் கையால் புட்டிப் பாலும் புகட்டியிருந்தார்! அந்தக் காலத்தில் ஒரு தாய் செய்ய வேண்டிய சேவைகளையெல்லாம் சிறிதும் கூச்சப்படாமல் செய்திருந்தார்; அது மட்டுமல்ல, பெரியவனாக வளர்ந்துவிட்ட பிச்சமணி வெளி நண்பர்களைப் பிடித்துக் கொண்டு வந்தால் அவனுடைய தகப்பனைப் போல் அவனும் கெட்டுப் போய்விடுவானோ என்று தாத்தா பயந்து அவரே அவனுக்கு உண்மை நண்பனாகவும் விளங்கி, அவனோடு சீட்டாடவும் தயாராகிவிட்டார். சுருக்கமாகச் சொன்னால் கடைசிக் காலப் பொக்கிஷத்தைக் கட்டிக் காக்கும் கருமியைப் போலவே மேஜர் ராமதுரை தம் பேரனைத் தம்முடைய உலக பந்தங்களின் கடைசிப் பிடிப்பாக வைத்துக் கொண்டு பிச்சமணியைப் பாதுகாத்து வந்தார். அதற்காகவே அவர் தம்முடைய உயிரையும் தம்முடைய உடம்பில் வைத்துக் கொண்டிருந்தார். ஆனால் எதிர்பாராத



விதமாக ஏதாவது விபரீதம் எந்த நிமிஷமும் நிகழ்ந்துவிடுமோ என்ற பயமும் அவரையறியாமல் அவருக்கு உள்ளூற இருந்து கொண்டே இருந்தது.

பழைய மாடல் பேபி ஆஸ்டின் காரைச் சப்த ஜாலங்களுடன் பிச்சுமணி ஓட்டிக்கொண்டு வந்து தன் தாத்தாவின் மாளிகையை அடைந்தான்.

மாளிகையைச் சுற்றிலுமுள்ள விசாலமான தோட்டத்தில் பயங்கர இருளும், விசித்திரமான ஒருவித அமைதியுமே குடிகொண்டிருந்தன.

காம்பவுண்டுக்குள் பிச்சுமணி தன் காரைச் செலுத்தி மாட்டுக் கொட்டகையில் கொண்டு போய்க் காரை நிறுத்திவிட்டு, காரின் விளக்குகளை அணைத்துவிட்டுக் கீழே இறங்கி நின்று சுற்றுமுற்றும் இருளை ஊடுருவிப் பார்த்தான். மாட்டுக் கொட்டகையின் ஒரு மூலையில் கனத்த இருளின் ஊடே ஓர் உருவம் அசையாமல் நின்று கொண்டிருந்தது!

அத்தியாயம் ஏழு

இளமையும் முதுமையும்

மாட்டுக் கொட்டகையின் ஒரு மூலையில், கனத்த இருளில் அசையாமல் நின்ற அந்த உருவம் யார் என்பது உடனே பிச்சுமணிக்குப் புரிந்துவிட்டது.

அந்த உருவத்தை நோக்கிப் பிச்சுமணி மெல்லிய குரலில், ''நீதானே? இருதயசாமி!'' என்று கூப்பிட்டான்.

''ஆமாம், தம்பி!'' என்று பதில் குரல் கொடுத்துக் கொண்டே இருதயசாமி பீப்பாய் போன்ற தன் பருத்த உடம்பைத் தூக்கிக் கொண்டு நடந்து வந்தான்.

அவன்தான் அந்த மாளிகையின் தலைமை வேலைக்காரன். உணவு இலாகா முதல் மாளிகையின் மராமத்து இலாகா வரை மந்திரி வேலை பார்த்து, நிதி இலாகாவையும் அவனிடம் தாராளமாக ஒப்படைக்கலாம் என்கிற அளவுக்கு அவன் நம்பிக்கைக்கு உரியவனாக முதிர்ந்து விட்டான்! வயதில் மட்டுமல்ல, தந்திர உபாயங்களில் கூடத் தன் எஜமானருக்குச் சமதையானவன்! கிழவரான மேஜர் ராமதுரைக்கு இதமாக உடம்பு பிடித்து விடுவது, அவருடைய பாரம்பரைப் பெருமைக்கு ஒத்து ஊதுவது, இன்னுரைகளால் குளிப்பாட்டுவது, சில சமயங்களில் மந்திராலோசனை என்ற பெயரில் இடித்துரைப்பது, அந்தரங்க நண்பனாக மாறிக் காத[illegible]ருந்து கொண்டு விசேஷக் காரியங்கள் செய்வது முதலானவற்றையெல்லாம் தனி வித்தையாகவே கையாண்டு வந்தான். ஆனால் பிச்சுமணிக்கு மட்டும் அவன் எந்தக் காரியத்தையும் இனாமாகவும், இருதயபூர்வமாகவும் செய்யத் தயாராக இருந்தான். ஏனென்றால், பிச்சுமணியைத் தொட்டிலிலிருந்து எடுத்துத் தன் தோள் மீதும் மார்பு மீதும் போட்டு வளர்த்தவன் அவன்! அதனால் பிச்சுமணியைத் தன் சொந்தப் பிள்ளையாகவே பாவிக்கும் மனப்பான்மையைத் தன்னிடம் வளர்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு வேறு உலக பந்தங்களும் கிடையாது. அவனுடைய வாழ்க்கையில் அவ்வப்போது சிறுசிறு காதல் விவகாரங்கள் ஏற்பட்டது உண்டென்றாலும் அவையெல்லாம் அவனுடைய வாழ்க்கைக் கணக்கின் பேரேட்டில் இடம் பெற முடியாது. ஆக, அவன் நாளது தேதி வரையில் எதற்கும் பிடி கொடுக்காத தனிக் கட்டைதான்!

பிச்சுமணியை வெகுளிப் பையனாகப் பெரியவர் வளர்க்க முயலும் முறை அவனுக்குச் சிறிதும் பிடிக்காது! இளவயதில் பிள்ளைகள் கட்டுப்பாடின்றி உலகில் புகுந்து விளையாடிப் பலவிதமான அநுபவங்களும் பெற்றுச் சுயமாகவே 'கடைத்தேற வேண்டும்' என்ற கொள்கை உள்ளவன் அவன். அதனால் மாளிகையில் பிச்சுமணிக்கு எதிராகக் கிழவர் எடுக்கப் போகும் நடவடிக்கை, அல்லது கோளாறான நிலைமை எதுவாக இருந்தாலும் அதை முன்கூட்டியே பிச்சுமணியிடம் தெரிவிப்பதற்காக இருதயசாமி ஓசைப்படாமல் வந்து மாட்டுக் கொட்டகை அருகில் காத்திருப்பான். பிச்சுமணியும் அவனிடமிருந்து எல்லா நிலவரங்களையும் தெரிந்து கொண்ட பிறகுதான் மாளிகையில் நுழைந்து தன் தாத்தாவின் முகத்தில் விழிக்கத் துணிவான்.

அது போலவே அன்றிரவும் பிச்சுமணியை எதிர் நோக்கி மாட்டுக் கொட்டகையருகில் இருதயசாமி வெகு நேரம் காத்திருந்தான்.

''என்ன இருதயம்? கோட்டைக்குள் ஒரே அமைதியாக இருக்கிறதே.....?'' என்று கேட்டான் பிச்சுமணி.

''ஆமாம், தம்பி! ராத்திரி மணி ஒன்பது ஆகிவிட்டதல்லவா? கடிகாரத்தின் முள்ளைக் கொஞ்சம் பின்னால் திருப்பி

வைக்கலாம் என்றால், பெரியவர் கழுகு போல் கொட்டக் கொட்ட விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.''

''உள்ளே சீதோஷ்ண நிலைமை எப்படியிருக்கிறது?''

''ஒரே பயங்கரம்! உன்னை எதிர்பார்த்துப் பெரியவர் இன்னும் சாப்பிடாமல் கைத்தடியைச் சுழற்றிக் கொண்டிருக்கிறார்!''


''அப்படியானால் தாத்தா ரொம்ப உஷ்ணமாக இருக்கிறார் என்று சொல்லு?''

''ஆமாம்! உன் ஐஸ் வாட்டர் தந்திரமெல்லாம் இன்னைக்குப் பலிக்காது'' என்றான் இருதயசாமி.

பிச்சுமணி ஒரு கணம் யோசித்தான். பிறகு அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு தன் காதில் சொருகியிருந்த மல்லிகைப் பூவை எடுத்துத் தன் சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டே, வழக்கம் போல் சீட்டியடித்துக் கொண்டு பூதாகாரமான அந்த மாளிகையினுள் நுழைந்தான்.

உள்ளே விசாலமான முன்கூடத்தில் ஒரே ஒரு மின்சார விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது!

அதன் வெளிச்சத்தில் சுவரெங்கும் புலி,



சிறுத்தை, காட்டெருமை முதலானவற்றின் தலைகள்தான் முன்னதாகப் பளிச்சிட்டன. அவற்றின் மத்தியில், கீழே ஒரு பெரிய வட்டமேஜையின் முன்னால் மேஜர் ராமதுரை தம்முடைய சிம்மாசனத்தைத் திருப்பிப் போட்டுக் கொண்டு தன்னந்தனியாக உட்கார்ந்திருந்தார். அவருடைய கைத்தடி, கைகளுக்குள் மத்துப் போல் சுழன்று கொண்டிருந்ததே தவிர, அவருடைய குனிந்த உடம்பு சிறிதுகூட ஆடவில்லை. வாசற்படி மீது பதிந்திருந்த அவருடைய விழிகளின் பார்வையும் சிறிதும் அசையவில்லை. முறுக்கு மீசையின் முனைகள் மட்டும் வெடவெடத்துக் கொண்டிருந்தன.



பிச்சுமணி தன் சீட்டி சத்தத்தைக் கொஞ்சம் நிறுத்தி விட்டு அந்தக் கூடத்துக்குள் ஓர் அடி எடுத்து வைத்தான்.

கிழவர் 'ஊடல்' செய்யும் மனைவி போல் தம்முடைய முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

அவரே முதலில் பேச்செடுத்து யுத்தத்தை ஆரம்பிக்கட்டும் என்று பிச்சுமணி ஒருகணம் மௌனமாக நின்று தன் பார்வையை அங்குள்ள வட்டமேஜை மீது மேய விட்டான். அதன் ஒரு புறம் இரண்டு பேர் சாப்பிடுவதற்குத் தயாராக வெள்ளைக்காரர் பாணியில் டின்னர் பிளேட்டுகள் வைக்கப்பட்டு ரொட்டி, வெண்ணெய், ஜாம் வகையறாக்களுடன், தமிழ் நாகரிகத்தை யொட்டிச் சிறிதளவு சாதம், காய்கறிப் பதார்த்தங்களும் பரிமாறப்பட்டிருந்தன. ஒரு கண்ணாடித் தட்டின் மீது ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை முதலான கனி வர்க்கங்கள் கொலு வீற்றிருந்தன.

வட்டமேஜைக்குச் சற்றுத் தள்ளி, ஹைதர் காலத்திய தந்த முக்காலி ஒன்றின் மீது ஒரு சீட்டுக் கட்டுப் பிரித்து வைக்கப்பட்டிருந்தது. அந்தச் சீட்டுகளின் அருகே வரிசையாகப் பரத்தி வைக்கப்பட்டிருந்த பல வீரப் பதக்கங்கள் மின் விளக்கின் ஒளியில் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தன. அந்த மினுமினுப்பு ஒவ்வொரு வீரப் பதக்கத்துக்கும் ஒவ்வொரு சரித்திரம் உண்டு என்று முணுமுணுப்பதைப் போல் இருந்தது. அதை எதிரொலிப்பது போல் தந்த முக்காலியின் அருகே சுவர் மீது வரிசையாக மாட்டப்பட்டிருக்கும் படங்கள் காட்சியளித்தன. மேஜர் ராமதுரைக்கு வெள்ளைக்கார வைஸ்ராய் ஒருவர் வீரப் பதக்கம் மாட்டுவது போன்ற அவருடைய வீரப் பிரதாபங்களின் பழைய சரித்திரச் சம்பவங்களைத்தான் அந்தப் படங்களெல்லாம் விளக்க முயன்று கொண்டிருந்தன.

மேஜர் ராமதுரை தமது வீரப் பிரதாப வாழ்க்கையிலிருந்து ரிடையராகி மாளிகைக்குள் ஒடுங்கியதும் 'கடி

கார வாழ்க்கை'க்கு உதாரண புருஷராக மாறி விட்டார். அவர் தினசரி அதி காலையில் கோழி கூவு முன்பே கடி காரத்தில் சரியாக நாலு மணி பத்து நிமிஷம் ஆகும் போது தாமாகவே எழுந்து பச்சைத் தண்ணீரில் குளித்து விட்டு, நெற்றியில் கொஞ்சம் விபூதியை அள்ளிப் பூசிக் கொண்டு ஈஸிசேரில் சாய்ந்து பொருளாதாரக் கணக்கு வழக்குகளைப் பற்றிய ஆராய்ச்சிகள்,— தம் பேரனைப் பற்றிய எதிர்காலத் திட்டங்கள் முதலானவற்றில் தம்முடைய சிந்தனையைச் செலுத்துவார். பொழுது விடிந்து சரியாக ஆறு மணியானதும் மாடியில் உள்ள தம் பேரனின் பள்ளியறைக்குச் சென்று அவனைத் தட்டி யெழுப்புவார். பேரன் வெந்நீரில் 'காக்காய்'க் குளியலை முடித்துக் கொண்டு வந்ததும் அவனுடன் சேர்ந்து, வட்ட மேஜையின் முன் அமர்ந்து பலகாரம் காப்பி சாப்பிடுவார். ஆறரை மணி யானதும் அவர் தம் கைத்தடியுடன் வெளியே சிறிது உலாவச் சென்று ஏழு மணிக்குள் மாளிகைக்குத் திரும்பி விடுவார். இவ்வாறு கடிகாரத்தை ஒட்டியே அவரது பகல் பொழுதும் ஆகார நியமங்களும் நடந்தேறும்.

இரவாகி விட்டால் அவர் சரியாக எட்டு மணிக்குத் தம் பேரனோடு சாப்பிட வேண்டும்! பிறகு ஒன்பதரை மணி வரையில் அவனோடு சீட்டாட்டம்.

தாத்தாவின் ஆழ்ந்த மௌனத்தையும் கூடத்தில் குடிகொண்டிருக்கும் அமைதியையும் பிச்சுமணியால் தாங்க முடியவில்லை.

பிச்சுமணி மெல்லக் கனைத்தான். ஆனால் தாத்தா திரும்பிப் பார்க்கவில்லை.

பிச்சுமணி இரண்டு முறை இருமினான். அதற்கும் தாத்தா திரும்பிப் பார்க்கவில்லை.

பிச்சுமணி யோசித்தான். மருந்து கெட்டித்த பீரங்கி சதா குறி பார்த்துக் கொண்டே யிருப்பதைவிட, ஒரு தடவை வெடித்துத் தீர்த்து விடுவது மேலல்லவா? தாத்தாவைச் சிறிது சத்தம் போட வைத்தால் சத்தம் தீர்ந்ததும் சமாதானப் படலம் ஆரம்பமாகி விடுமென்று எண்ணமிட்டான்.

உடனே அவன் மாடியில் உள்ள தன் தனியறைக்குப் போவது போல் பாவனை செய்து கொண்டு, மாடிப் படிக்கட்டை நோக்கி நடந்தபடி உற்சாகமாக ஒரு சினிமாப் பாட்டைக் கிளப்பினான்.

> **ஆசைக் கிளியே கோபமா? என்**
> **அருகில் வரவும் நாணமா?**

என்ற அந்தப் பாட்டைக் கேட்டதும் மேஜர் ராமதுரைக்கு உள்ளூறச் சிரிப்பு வந்து விட்டது என்றாலும் அதைப் பலவந்தமாக அடக்கிக் கொண்டார். பிச்சுமணி முழங்கும் பாட்டு பெண்ணைப் பற்றிய காதல் பாட்டாகத் தொனித்ததால் அவருக்கு அளவுகடந்த கோபமும் வந்தது.

''டேய், மடையா!'' என்று மேஜர் பயங்கரமாகக் கத்தினார்.

பிச்சுமணி அப்படியே திரும்பிப் பாராமல் நின்றான்.

''தெருப் பாட்டை யெல்லாம் வீட்டுக்குள் கொண்டு வராதே!'' என்று மேஜர் முழக்கமிட்டார்.

''இது தெருப் பாட்டல்ல தாத்தா! சினிமாப் பாட்டு! சின்னக் குழந்தைகள் முதல் உங்களைப் போன்ற தாத்தாக்கள் வரை வெகு ஜோராகப் பாடுகிறார்கள்!'' என்றான் பிச்சுமணி.

''முட்டாள்கள்! முட்டாள்கள்!'' என்று முனகிய மேஜர் ராமதுரை ''முதல்லே கதவைச் சாத்திவிட்டு வா'' என்று முழங்கினார்.

தாத்தா யுத்தத்தை ஆரம்பித்து விட்டதால் தானும் சமதையாக வேண்டும் என்று பிச்சுமணி தீர்மானித்தவனாய், 'படார்' என்று கதவைச் சாத்திவிட்டுத் தன் தாத்தாவின் அருகில் வந்து நின்றான்.

பிறகு அவன், ''தாத்தா! என்மேல் கோபமா?'' என்று மெல்லச் சிரித்துக் கொண்டே கேட்டான்.

''உன்மேல் எனக்கென்னடா கோபம்?'' என்று மேஜர் சீறினார்.

''பின்னே இருதயசாமியின் மேல் கோபமா? அவன் ஏதாவது பண்ணி விட்டானா?''

''அவன் ஏதாவது பண்ணியிருந்தால் கோபிப்பேனா? சுட்டுத் தள்ளியிருப்பேன்!''

''என்ன தாத்தா! பத்து நிமிஷம் தானே லேட்டாக வந்தேன்!''

''பத்து நிமிஷமா? ஐம்பத்திரண்டு நிமிஷம்!'' என்று மேஜர் கூவினார்.

''அதுக்காகவா தாத்தா, சாப்பிடாமல் உட்கார்ந்து கொண்டு பிரமாதப் படுத்துகிறீர்கள்?''

''டேய், நீ சின்னப் பையன். ஊர் சுற்றுவதுதான் உனக்குப் பிரமாதம்! எனக்குச் சாப்பாட்டு விஷயம் பிரமாதம்!''

''அதுதான் தாத்தா, நான் வந்து விட்டேனே! இனி நாம் சாப்பிடலாம்!''

''எனக்குச் சாப்பாடு வேண்டாம்!''

''ஏன், தாத்தா?''

''எனக்குச் சாப்பாட்டு 'டைம்' கடந்து போய் விட்டது.''

''டயப்படிதான் சாப்பிட வேண்டுமா? சிறிது நேரம் கழித்துச் சாப்பிட்டால் என்ன?''

''நீ சின்னப் பையன். உனக்கு ஜீரணித்துவிடும். எனக்கு ஜீரணிக்காது.''

''தாத்தா! எந்நேரமானாலும் நான் வீட்டுக்குத் திரும்பி வந்துதானே ஆக வேண்டும்? எனக்காக நீங்கள் சாப்பிடாமல் எதுக்கு அநாவசியமாகக் காத்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

''டேய், டேய்! உனக்கு அது அநாவசியமாகப் படுகிறதோ?''

''சரி, தாத்தா! எனக்குப் பசிக்கிறது!'' என்று பிச்சுமணி பேச்சைத் திருப்ப ஆரம்பித்தான்.

''பசித்தால் அதோ இருக்கிறது. எடுத்துச் சாப்பிடு!'' என்று மேஜர் ராமதுரை அதிகாரத்தோடு மேஜையின் ஒருபுறத்தைச் சுட்டிக் காட்டினார்.

''தாத்தா! நீங்களும் சாப்பிட்டால் தான் நானும் சாப்பிடுவேன்!''

''என்னைப் பற்றி உனக்கென்னடா கவலை? நான் எதையும் தொட மாட்டேன்!'' என்றார் பிடிவாதமாக.

''அப்போ நானும் எதையும் தொட மாட்டேன்!''

''டேய்! சாப்பிடாவிட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

''ஏன்? உங்க உடம்பு மட்டும் என்னத்துக்கு ஆகும்?''

''ஏண்டா உனக்கும் எனக்கும் வித்தியாசமில்லையா?''

''என்ன வித்தியாசம் தாத்தா?''

''நீ வளர்கிற பையன்; நான் தேய்கிற கிழவன்!''

''வளர்கிறது தானாக வளர்ந்துவிடும்! தேய்கிறதைத்தான் தாத்தா கவனிக்க வேண்டும்!''

''டேய், நீ பெரிய முட்டாள்டா!''

''நான் ஒண்ணும் முட்டாளில்லே!''

''நீ முட்டாள்தான். அடி முட்டாள்! முட்டாளைத் தவிர நீ வேறு எதுவுமாகவே ஆகப் போவதில்லை!''

அந்த விமர்சனத்தைக் கேட்டுப் பிச்சுமணியின் முகத்தில் எவ்வித மாறுதலும் ஏற்பட்டுவிடவில்லை. தாத்தா தன் வழிக்குப் பணிந்து வருகிறார் என்று அலாதியான திருப்திதான் அடைந்தான்.

பிறகு அவன் ஏதோ யோசித்துவிட்டு, ''தாத்தா! சாப்பாட்டுக்கு முன்னால் நீங்கள் மருந்தும் இரண்டு மாத்திரைகளும் சாப்பிட வேண்டுமே, சாப்பிட்டீர்களா?'' என்று கேட்டான்.

''எனக்கு மருந்தும் வேண்டாம்; மாத்திரைகளும் வேண்டாம்!'' என்று தாத்தா குழந்தைக் கோபத்தில் அடம் பிடிப்பது போல் கத்தினார்.

''ஏன், நான் நேரத்தோடு வீட்டுக்கு வரவில்லையென்கிற கோபத்தாலே நீங்கள் மருந்துகூடச் சாப்பிடாமலா இருக்கிறீர்கள்?''

''நீ என்ன கேள்வி கேட்கிறது? நான் என்ன பதில் சொல்கிறது?''

''நீங்கள் பதில் சொல்ல வேண்டாம் தாத்தா! மருந்தைத்தான் சாப்பிடச் சொல்கிறேன்.''

''எனக்கு இப்போ மருந்து சாப்பிடப் பிடிக்கவில்லை.''

''பிடிக்கிறதோ இல்லையோ, மருந்து சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும்! டாக்டர் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறார் அல்லவா? மருந்து சாப்பிடாவிட்டால் உங்கள் உடம்புக்கு ஏதாவது வந்துவிடும் தாத்தா!'' என்று பிச்சுமணி பரிவுடன் தவித்தான்.

''வரட்டும், என்றைக்காவது ஒரு நாள் வரப் போவதுதானே'' என்று குமுறிய மேஜர் ராமதுரை, ''இப்போது நான் மருந்து சாப்பிடப் போவதில்லை!'' என்று இன்னும் குழந்தை போலவே முரண்டு பிடித்தார்.

''இல்லை. இப்போது நீங்கள் மருந்து சாப்பிடத்தான் போகிறீர்கள்!'' என்று எதிர்ச் சவால் விட்ட பிச்சுமணி, மேஜையிலிருந்து இரண்டு மாத்திரைகளையும், ஓர் அவுன்ஸ் மருந்தையும் எடுத்து வந்து, ''எனக்காக இந்த மருந்தை நீங்கள் சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும் தாத்தா!'' என்று குழைந்து, ''என்னைப் பாருங்கள் தாத்தா! நீங்கள் மருந்து சாப்பிடாவிட்டால் நான் அழுவேன்! பட்டினி கிடப்பேன்! உங்களோடு நான் பேசவே மாட்டேன்!'' என்று பலவாறாக நயமாகவும் பயமாகவும் சொல்லித் தாத்தாவைக் குழந்தை போல் ஆக்கி, அவரைத் திமிற விடாதபடி ஒரு கையால் கட்டிப் பிடித்துக் கொண்டு, இன்னொரு கையால் மாத்திரைகளை அவருடைய வாய்க்குள் திணித்து, ஓர் அவுன்ஸ் மருந்தையும் புட்டிப் பாலைப் போல் கொஞ்சம் கொஞ்சமாகப் புகட்டி அவர் விழுங்கும்படி செய்துவிட்டான்.

தாத்தாவுக்கு உள்ளூறப் பரம திருப்தி! ஆனாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல், ''டேய், என்னைக் குழந்தையென்று நினைத்தாயா? விடுடா, மடையா!'' என்று கூவினார்.

''ஊஹூம்! தாத்தாவை இனிமேல் விடவே மாட்டேன்!'' என்று பிச்சுமணி, தாயாரின் கழுத்தைக் கட்டிக் கொள்ளும் பச்சைக் குழந்தை போல், தன் தாத்தாவின் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

அப்போது பிச்சுமணியின் சட்டையின் வலது புறம் ஈரமாக இருப்பதை மேஜர் உணர்ந்து கொண்டு பரபரப்புடன் துள்ளினார். (தொடரும்)

நன்றி நவிலல்

புகழ்பெற்ற கடிதங்கள்



புத்தர்பிரான் அவதரித்தருளிய பாரத நாட்டுக்குச் சீனவிலிருந்து அநேக பௌத்த சந்நியாசிகள் கி. பி. ஏழாவது நூற்றாண்டில் வந்து போயினர். இவர்களுள் முக்கியமானவர் ஹ்யூன் த்ஸாங். இவரை யுவான் சுவாங் என்றும் அழைப்பர். இவர் காலம் கி. பி. 600 – 664.

இவர் யாத்திரையாகப் புறப்பட்டுச் சீனவின் மேற்கெல்லைப் பக்கமாக வந்து கொண்டிருக்கையில், ஒரு சிற்றரசனுடைய விருந்தினராகச் சில நாட்கள் தங்கும்படி நேரிட்டது. அப்பொழுது அந்தச் சிற்றரசன், இவருடைய பரந்த புலமையிலும் நல்லொழுக்கத்திலும் பெரிதும் ஈடுபட்டுப் போய், இவரை மேற்கொண்டு யாத்திரை செல்ல வேண்டாமென்றும், தன்னிடமே நிரந்தரமாகத் தங்கி விட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். ஹ்யூன்த்ஸாங் இதற்கு இணங்க மறுத்து, யாத்திரையைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்கிற தம் உறுதியைத் தெரிவித்தார். அப்பொழுதும் அந்தச் சிற்றரசன், இவர் பிரயாணத்துக்கு அனுமதி கொடுக்க மனமிசையவில்லை. எனவே இவர் — ஹ்யூன்த்ஸாங் — மூன்று நாட்கள் உண்ணாவிரதமிருந்தார். இதைக் கண்டு அந்தச் சிற்றரசன் பயந்து போய், நான்காவது நாள் இவருக்கு மேற்கொண்டு செல்ல அனுமதி கொடுத்ததோடல்லாமல், யாத்திரையின் போது தேவைப்படக் கூடிய அநேக பொருள் வகைகளையும், இவைகளை எடுத்துச் செல்வதற்கான ஆட்கள், குதிரை முதலிய பரிவாரங்களையும், துணைவர்களாகச் செல்ல நான்கு பௌத்த சந்நியாசிகளையும் அனுப்பினான்; தவிர, ஹ்யூன்த்ஸாங் எந்தெந்த நாடுகளின் வழியாகச் செல்லக் கூடுமோ அந்த நாடுகளின் அரசர்களுக்கு — இருபத்தி நான்கு அரசர்களுக்கு — அறிமுகக் கடிதங்களும் கொடுத்தான். இவையனைத்துக்கும் நன்றி தெரிவிக்கும் முறையில், ஹ்யூன்த்ஸாங் அந்தச் சிற்றரசனுக்குக் கடிதம் எழுதினார். இதனை, இவருடைய சுருக்கமான சுய சரிதம் என்று கூறலாம். இதில், தம்மைப் பற்றிச் சொல்லிக் கொள்ள வேண்டிய சில இடங்களில் ஹ்யூன்த்ஸாங் என்றே சொல்லிக் கொள்கிறார். கடிதம் வருமாறு:—

ஆழமான நதியையோ, கடலையோ கடக்க விரும்பும் ஒருவன், துடுப்புக்களுடன் கூடிய ஒரு படகின் உதவியை நாட வேண்டியவனாயிருக்கிறான். அது போல் மனிதர்கள், தங்களுடைய வாழ்க்கையைப் பற்றிய பலவிதப் பிரச்னைகளில் ஏற்படக் கூடிய சந்தேகங்களைத் நிர்மாணித்துக் கொள்ள வேண்டுமானால், சமயத்திரங்களின் உதவியை நாட வேண்டும். கருணையுள்ளங்கொண்ட ததாகதர் (புத்தர்) களங்கம் நிறைந்த இந்த உலகத்தில் அவதரித்தருளினார். மக்களின் மனத்தில் படிந்து கிடக்கும் அஞ்ஞான இருளைப் போக்கும் ஞான சூரியனாக அவர் விளங்கினார். எல்லா ஜீவராசிகளும் நன்மை பெற வேண்டும் என்பதற்காகவே அவர் அவதரித்தார். தம் கடமை முடிந்ததும், எது அநித்தியமோ அதைத் துறந்துவிட்டு நித்தியமாயுள்ளதை நாடிச் சென்று விட்டார். அவர் அருளிவிட்டுப் போன உபதேசங்கள், கீழ் நாட்டில் (சீனவில்) சுமார் அறுநூறு வருஷங்களுக்கு மேலாகப் பரவியிருக்கின்றன. காசியப மாதங்கன், சங்கவர்மன், தர்மரட்சகன், குமாரஜீவன் ஆகிய அறிஞர்கள்* அவைகளை நன்கு பிரகாசப்படுத்தியிருக்கின்றனர். அவர்கள் உண்மையை விளக்கிச் சொன்னதோடல்லாமல் அரிய காரியங்களையும் செய்திருக்கின்றனர். அவர்களும், அவர்களைப் போல் புத்த மத கிரந்தங்களைச் சீன மொழியில் மொழி பெயர்த்தவர்களும், வெகு தொலைவில் உள்ள நாடுகளிலிருந்து வந்தபடியால், புத்தமத கிரந்தங்களுக்குப் பல்வேறு வியாக்கியானங்கள் ஏற்பட்டு விட்டன. தவிர, புத்தர் பிரானுடைய காலமும் வெகு முந்தியதாகிவிட்டது. அதனாலும் அவருடைய தத்துவங்களில் தவறான பல கருத்

* சீனவில் புத்தமதம் பரவுவதற்குத் துணை செய்தவர்கள். புத்தமத கிரந்தங்களைச் சீன மொழியில் மொழி பெயர்த்தவர்கள்.

துக்கள் புகுந்து விட்டன. இவைகளினால், புத்த மதம் இரண்டு கிளைகளாகப் பிரிந்து விட்டன. இவற்றுள் ஒன்றான மஹாயானத்தில் வடக்குப் பக்கத்துக் கொள்கை என்றும் தெற்குப் பக்கத்துக் கொள்கை என்றும் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டு விட்டன. இவற்றுள்ளும் வாதப் பிரதிவாதங்கள் அதிகம். இவை காரணமாக, ஜனங்களுக்கு, புத்த மதத்தைப் பற்றிப் பலவித சந்தேகங்கள் தோன்றத் தொடங்கிவிட்டன. இவற்றுக்கு யாராலும் விளக்கம் தர முடியவில்லை.

முற்பிறவியில் செய்த நற்றவப் பயனால், ஹ்யூன் த்ஸாங், சிறு வயதிலேயே பிட்சுவாகி, புத்தமத கிரந்தங்களைப் பல்வேறு ஆசிரியர்களிடம் சுமார் இருபது வருஷ காலம் பயின்றான்; வேறு பல அறிஞர்களோடு சேர்ந்து ஆராய்ச்சி செய்தான். இப்பொழுது மஹாயானம், ஹீனயானம் என்ற இரு கிளைகளைப் பற்றி ஒருவாறு தெரிந்துகொண்டிருக்கிறான். இருந்தாலும், புத்த மத சம்பந்தமான ஒரு கிரந்தத்தை எடுத்துப் படிக்கத் தொடங்குகையில், அவனுக்குச் சந்தேகங்கள் பல தோன்றுகின்றன. அதனுள் பொதிந்து கிடக்கும் நுண்ணிய கருத்துக்களை அவனால் விளங்கிக்கொள்ள முடிவதில்லை. விளக்கங் காண வேண்டுமென்பதற்காக, அவன் புத்தர்பிரான் உபதேசித்தருளிய இடங்களுக்குச் சென்று வர வேண்டுமென்று வெகு காலமாகவே ஆவல் கொண்டிருந்தான். ஆகாயம் முழுவதையும் ஒரு சிறு குழாய் வழியாகப் பார்க்க



வெ. சாமிநாதசர்மா



"இரு மாமா! அதுக்குள்ளே கூப்பிடறயே. பாலு இப்பத்தான் ஒரு பவுண்டரி எடுத்திருக்கான்!"

முடியாது என்பதும், அப்படியே கடல் நீர் முழுவதையும் ஓர் அகப்பையினால் அளக்க முடியா தென்பதையும் அவன் தெரிந்து கொள்ளாமலில்லை. ஆயினும் அவன், தன் ஆவலை நிறைவேற்றிக் கொள்ளவே துணிந்தான். இதற்காக, எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு அவன் தன் யாத்திரையைத் தொடங்கி விட்டான். அநேக கஷ்ட நிஷ்டூரங்களுக்குப் பிறகு யிவு என்ற ராஜ்யத்தை அடைந்தான்.

வானுலகமும் நானிலமும் வாழ்த்தப் பிரபஞ்சத்தின் அன்பைப் பெற்றிருக்கும் சக்கரவர்த்தியாகிய தாங்கள் பிரஜைகளைத் தங்கள் பிள்ளைகளைப் போல் பரிபாலித்து வருகிறீர்கள். கிழக்குப் பக்கத்தில் உள்ள பெரிய நாட்டின் (இந்தியாவின்) நற்பண்புகள் பலவும் தங்களிடம் குடிகொண்டிருக்கின்றன. மேற்குப் பக்கத்தில் உள்ள நாட்டின் (சீனாவின்) பழக்க வழக்கங்களையும் தாங்கள் அனுசரிக்கிறீர்கள். அக்கம் பக்கத்திலுள்ள நாடுகள், தங்களுடைய அன்புக்கும் நல்லொழுக்கத்துக்கும் வசப்பட்டனவாயிருக்கின்றன. தவிர, தாங்கள் முனிவர்களிடம் மரியாதை செலுத்துகிறீர்கள்; அறிஞர்களிடம் அன்பு காட்டுகிறீர்கள்; எது நல்லதோ அதை விரும்புகிறீர்கள். ஜனங்களை அன்புடன் நடத்துகிறீர்கள். மற்றும் தொலைதூரத்தில் உள்ள நாட்டிலிருந்து வந்தவர்களை அன்புடன் வரவேற்று நன்கு உபசரிக்கிறீர்கள்.

நான் இங்கே வந்த பிறகு, என்னை மிகவும் பரிவுடன் உபசரித்து, பௌத்த தர்மத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்யும்படியான கௌரவத்தையும் எனக்கு அளித்தீர்கள். என்னைத் தங்கள் சகோதரன் என்று அழைத்து என் மீது சகோதர வாஞ்சை செலுத்தினீர்கள். மேற்குப் பகுதியிலுள்ள இருபத்து நான்கு ராஜ்யங்களுக்குத் தாங்கள் அறிமுகக் கடிதங்கள் கொடுத்து, அவற்றில், என்னை மரியாதையாக நடத்துமாறும், என் பயணத்துக்குத் தடையில்லாமல் செய்து கொடுக்குமாறும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். குளிர் காலத்தில் பனி படிந்த பாதையில் நான் தனியனாகப் பயணம் செய்ய வேண்டியிருக்குமென்று கருதி, தாங்கள், எனக்கு நான்கு வாலிபத் துறவிகளை வழித் துணைவர்களாக அனுப்பித் தந்ததுடன் துவராடை முதல் பலவித உடைகளும், கம்பளிகளும், காலணி, தலையணிகளும், இன்னும் பல வகைப் பொருள்களும் உதவியிருக்கிறீர்கள். மற்றும், இந்தியாவுக்குச் சென்று திரும்பி வர இருபது வருஷ காலம் பிடிக்கும் என்று உத்தேசமாகக் கருதி அந்த இருபது வருஷத்துச் செலவுக்குப் பணமும் அளித்திருக்கிறீர்கள்.

இங்ஙனமெல்லாம் தாங்கள் காட்டிய அன்புக்கு நான் தலை வணங்க வேண்டியவனாக இருக்கிறேன். என்னுடைய நன்றியை எப்படித் தெரிவிப்பது என்று எனக்குப் புரியவில்லை. தாங்கள் என்னிடம் காட்டிய அன்பை 'ஷியாவோ' நதியின் வெள்ளத்தோடு ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. (அந்த நதியின் வெள்ளத்தைக் காட்டிலும் தங்கள் அன்பு வெள்ளம் மேலானதாயிருக்கிறது) தாங்கள் எனக்குச் செய்திருக்கும் உதவி, பாமிர் மலைத் தொடர்ச்சியைக் காட்டிலும் கனமானது. இனி என்னுடைய பயணத்தில் எனக்கு எவ்விதக் கவலையும் இருக்காது. நான் தொடங்கியுள்ள யாத்திரையைப் பூர்த்தி செய்து கொண்டு திரும்புவேனாயின், அதற்குக் காரணம் தாங்கள்தான் அல்லவா? தங்களுக்குத்தான் என் நன்றி யெல்லாம். நான் (இந்தியாவுக்கு) சென்று எல்லா அறிஞர்களையும் சந்திப்பேன். அவர்களிடமிருந்து பௌத்த தர்மத்தை நன்கு அறிந்து கொள்வேன். திரும்பி என் தாய்நாட்டுக்கு வந்ததும் புத்தமத கிரந்தங்களைச் சீன மொழியில் மொழி பெயர்ப்பேன். அதன் மூலம், இதுவரை தெரியாதிருந்ததைத் தெரியப்படுத்துவேன்; தவறான கருத்துக்களை அகற்றச் செய்வேன். இப்படிச் செய்வதன் மூலம் தாங்கள் என்னிடம் காட்டிய விசேஷ அன்புக்கு நன்றி செலுத்திக்கொள்வேன்.

நான் மேலே செல்ல வேண்டிய வழி வெகு தூரமிருக்கிறது. ஆகையால் இனி இங்கு தாமதிக்கக் கூடாதவனாயிருக்கிறேன். விடைபெற்றுக் கொள்வதென்பதே வருத்தந் தரக் கூடியதாயிருக்கிறது. என் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு இக் கடிதத்தை எழுதலானேன்.



நாளைய அறுவடைக்கென ஒருகை தானியம்

பூதேவி மனம் கனிந்து செழிப்பாகத் தருவதற்கென மறுபடியும் விதைப்பதற்கென பொன்னான தானியம் பத்திரப்படுத்தப்படுகிறது.

விவசாயத்தில் போலவேத் தொழிலிலும் வளர்ச்சிக்கென முதலை ஒதுக்குவது தேவை. இந்த அடிப்படையான கோட்பாட்டை மனத்தில் கொண்டு எஸ்ட்ரெலா அதன் சம்பாத்தியங்களில் பெரும் பகுதியை, தன் வளர்ச்சிக்கு வருங்காலத்தில் உதவுவதற்கெனத் தனியே ஒதுக்கி வைக்கிறது.

ஓர் எண்ணம், அதுவே ஒரு தேசியத் தொழிலாயிற்று.

எஸ்ட்ரெலா

பாட்டரீஸ் லிமிடெட்

பம்பாய் • டில்லி • கல்கத்தா • மதராஸ் • கான்பூர்

ES.G. 20 TAM.

வெள்ளித் திரையின் வளர்ச்சி

எஸ். கிருஷ்ணஸ்வாமி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

மொகலாயர்கள் இந்நாட்டை ஆண்ட காலத்தில் இலக்கிய நாடகங்கள் நடிக்கப்படாது போயினும் பல நாட்டுப் பாடல்களைக் கொண்ட கிராமிய நாடகங்கள் நடிக்கப்பட்டன. வங்காளத்தில் 'ஜாத்ரா', அசாமில் 'ஓஜபள்ளி', காஷ்மீரில் 'ஜாஷின்', தமிழ்நாட்டில் 'கூத்து', ஒரிஸ்ஸாவில் 'லீலா' என்ற பல பெயர்களைக் கொண்ட இந்தக் கிராமிய நாடகங்கள் பழங்காலத்து வடமொழி நாடகங்களைப்போல, பாடல்களும், நாட்டியங்களும் நிறைந்ததா யிருந்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் வங்காளத்தில் ஐரோப்பியப் பண்பை யொட்டி, சில புதிய இலக்கிய நாடகங்கள் உருவாயின. இவ்வித புதிய நாடகங்களில் ரவீந்திரநாத் தாகூரின் குடும்பத்தினரும் பங்கெடுத்துக் கொண்டனர். இந்த நாடகங்கள் மேல் நாட்டு நாடக வழியைத் தழுவியபோதிலும் இவற்றிலும் இந்திய முறைப்படி பாடல்களும் நாட்டியங்களும் நிறைந்திருந்தன.

இதனால் திரைப்படத்துக்குக் குரல் வந்ததும் அது மௌனப் படம் பேச ஆரம்பித்த முறையில் இல்லை. இந்திய பேசும் படம் வடமொழி நாடகத்துக்கும் மௌனப் படத்துக்கும் வாரிசாக அமைந்தது என்றே கூறலாம்.

தொழில் முறையில் பல பிரபல மௌனப் படத் தயாரிப்பு ஸ்தாபனங்கள் ஒலிப்பதிவு சாதனங்களுக்கு மூலதனம் இல்லாமல் மூடப்பட்டன. நூறு தியேட்டர்களைக் கொண்ட மதன் தியேட்டர்ஸார் இவ்வளவு சினிமாக்களையும் ஒலியோடு மாற்றியமைக்க இயலாமல் இருந்தனர். 1929ல் உலக வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டமும் அவர்களைப் பாதித்தது. இதனால் மதன் தியேட்டர்ஸார் சினிமாக்களை விற்கலாயினர்.

பேசும் படத் தொழிலின் ஆரம்ப காலத்தில் வழிகோலிகளாய் விளங்கிய ஸ்தாபனங்கள் கல்கத்தாவில் நியூ தியேட்டர்ஸ், பம்பாயில் பாம்பே டாக்கீஸ், பூனாவில் பிரபாத் பிலிம் கம்பெனி ஆகியவை.

லண்டன் சென்று என்ஜினியரிங் படித்து வந்த பி. என். சர்கார் நியூ தியேட்டர்ஸை ஆரம்பித்தார். சிறந்த தியேட்டர்களையும் தொழில் நுட்பக் கலைஞர்களையும் திரு சர்கார் தம் ஸ்தாபனத்தில் சேர்த்துக் கொண்டு தம் திறமையை வெளிப்படுத்தினார்.

ஒரு படத் தயாரிப்பாளர் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு இந்தியத் திரைப்பட வரலாற்றில் திரு சர்கார் ஒரு மாபெரும் உதாரணம் என்றால் மிகையாகாது. அவர் நியமித்த டைரக்டர்களில் ஒருவர் "தேபகி போஸ்". சிறந்த தேசபக்தரும், வைணவ சித்தாந்தத்தில் தேர்ச்சி பெற்றவருமான தேபகி போஸ் திரைப் படத்தில் ஒலியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதில் மிக்க கவனம் செலுத்தினார். சண்டி தாஸ், பூரன் பகத், சீதா, வித்யாபதி ஆகிய படங்கள் அனைத்திலும் புதிய முறையில் இசையைப் பயன்படுத்தினார். இப்படங்கள் அனைத்தும் பக்தி மார்க்கத்தை எடுத்துக் காட்டின.

நியூ தியேட்டர்ஸ் நியமித்த மற்றொரு டைரக்டர் 'இளவர் பருவா'. அசாம் பிரதேசத்தில் கௌரிப்பூர் ராஜ்யத்தைச் சேர்ந்த பருவா ஒரு சிறந்த நடிகர். சாந்திநிகேதனில் படித்த பட்டதாரி. இசை வல்லுநர். குதிரையேற்றம், வேட்டையாடுதல், நடனம், டென்னிஸ் விளையாட்டு ஆகிய பல கலைகளிலும் வல்லுநராய் விளங்கினார். வெளி நாடுகளைச் சுற்றிப் பார்த்துப் பல கலைகளிலும் முக்கியமாக சினிமாவிலும் நாட்டம் செலுத்தி பிரெஞ்சு டைரக்டர் ரெனிகிளேர் ஜெர்மானிய டைரக்டர் லூபிஷ் ஆகியவர்களின் டைரக்ஷனைக் கவனித்து வந்தார் பருவா.

பருவா நியூ தியேட்டரில் டைரக்ட் செய்த முதல் படம் தேவதாஸ். இந்தப் படம் இந்திய சமூகத்திலேயே ஒரு புதிய வரலாற்றை ஏற்படுத்தியது என்று கூறலாம். தேவதாஸுக்கும் பார்வதிக்கும் ஏற்பட்ட துக்கங்களைக்கண்டு ஒரு நாடே அழுதது! வங்காள மொழியில் தயாரிக்கப்பட்டு, பிறகு ஹிந்தியிலும், மற்ற மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது.

பல நூற்றாண்டுகளாகச் சாதாரணமாக இந்திய நாடகங்களில் துக்ககரமான

சத்யஜித்ராய் டைரக்ட் செய்த பதேர் பாஞ்சாலி




முடிவு விரும்பப்படவில்லை. தேவதாஸுக்குப் பிறகு இந்த நிலைமை முற்றிலும் மாறியது. பல டைரக்டர்கள் இந்திய மக்கள் துக்ககரமான முடிவை விரும்புகின்றனர் என்று இம்மாதிரியான படங்களை எடுக்கலாயினர். தன்னைத்தானே இரக்க மனப்பான்மையுடன் பார்த்து நொந்துகொள்ளும் மனோநிலையில்லாத பாத்திரங்கள் உருவாயின.

மௌனப் படக் காலத்திலேயே இந்திய ஜெர்மன் கூட்டுத் தயாரிப்பாகப் புத்தரின் வாழ்க்கையைப் படமாக்கிய ஹிமான்ஸுராய், அவர் மனைவி நடிகை தேவிகா ராணி ஆகிய இருவரும் பாம்பே டாக்கீஸை நிறுவினர். பல வருடங்கள் ஐரோப்பாவில் தங்கி, நாடக, சினிமாக் கலைகளைப் பற்றி நன்கு அறிந்திருந்த இவர்கள் தங்கள் படத் தயாரிப்பு ஸ்தாபனத்தை மிகச் சிறந்த முறையில் நடத்தினர். சில ஜெர்மன் டெக்னிஷியன்கள் இங்கு பணியாற்றினர். கல்லூரிகளிலிருந்து வெளிவரும் பல இளைஞர்களுக்கு பாம்பே டாக்கீஸில் பயிற்சி அளிக்கப்பட்டது. 1933ம் வருடம் "கர்மா" என்ற ஆங்கிலப் படத்தை பாம்பே டாக்கீஸார் தயாரித்தார்கள். அசோக்குமாரும், தேவிகா ராணியும் நடித்த 'அச்சுத் கன்யா' என்னும் படம் ஒரு தீண்டாத வகுப்பைச் சேர்ந்த பெண்ணின் வாழ்க்கையைப் பற்றி அமைந்தது. மேலும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த தேவிகா ராணி சினிமாவில் நடிக்க வந்தது பல பெண்களுக்குத் தைரிய மூட்டியது.

கோலாப்பூரில் தொடங்கி, பூனாவுக்கு மாற்றப்பட்ட பிரபாத் பிலிம் கம்பெனி ஐந்து பங்குதாரர்களால் நிறுவப்பட்டது. இவர்களில் ஒருவர் வி. சாந்தாராம். பதினாறு வயதிலேயே ஒரு டெண்ட் சினிமாவில் வேலைக்கமர்ந்தார். அப்பொழுது அவருக்கு சினிமாவில் ஏற்பட்ட ஆர்வம் அவரை நாளடைவில் பிரபாத் கம்பெனியோடு சேர்த்தது. முன்பு கூறியது போல் பருவா, ஹிமான்ஸு ராய் ஆகிய டைரக்டர்கள் மேல்நாட்டுப் படங்களைக் கண்டு திரைப் படத்தில் ஆர்வம் கொண்டார்கள். தேபகிபோஸ் தயாரித்த படங்கள் வங்காளப் பண்பாட்டில் வேரூன்றியதாக இருந்தன.

பருவாவின் படங்கள் எந்த நாட்டுப் பண்பாட்டைச் சேர்ந்தவை என்று கூற முடியாமல் ஒரு தனிப்பாதையை வகுத்தன. சாந்தாராமைப் பொறுத்தவரை வெளிநாட்டுப் படங்களை விட பால்கேயின் படங்களே அவரது மனத்தை மிகவும் கவர்ந்தன. இதனால் பிரபாத் கம்பெனி தயாரித்த முதல் பேசும் படத்துக்கு "ராஜா அரிச்சந்திரன்" கதையைத் தேர்ந்தெடுத்தனர். அதுவே சாந்தாராமின் வெற்றிக்கும் அடிகோலியது. பிரபாத் தயாரித்த "ஸந்த் துக்காராம்" மராட்டியப் பண்பாட்டை எடுத்துக்காட்டும் சிறந்த படம்.

இவ்விதம் மராத்தியப் படங்கள் பம்பாய் மாகாணத்திலும் வங்காளப் படங்கள் கல்கத்தாவிலும் தயாராகிக் கொண்டிருந்த காலத்தில் மற்ற மொழிப் படங்கள் அந்தந்தப் பிரதேசங்களில் மட்டும் தயாராகாமல் பெரும்பான்மையானவை பம்பாயிலும் கல்கத்தாவிலும் தயாராயின. தமிழ்ப் படங்களைத் தயாரிப்பதற்காகப் பல வட நாட்டுத் தயாரிப்



பிமல்ராய் டைரக்ட் செய்த சுஜாதாவில் சுனில் தத். நூதன்

பாளர்களும், தமிழ் நாட்டுத் தயாரிப்பாளர்களும், நடிகர், நடிகைகளையெல்லாம் அழைத்துக் கொண்டு பம்பாய், கல்கத்தா சென்று படம் பிடித்து வந்தனர். சென்னையிலேயே பேசும் படங்களை ஏ. நாராயணனும் மற்றும் சிலரும் தயாரிக்க ஆரம்பித்தனர். சென்னையிலிருந்து கல்கத்தா சென்று படம் தயாரித்தவர்களில் கே. சுப்பிரமணியமும் ஒருவர். முதலில் ஓரிரு புராணப் படங்களைத் தயாரித்த பின்னர் கே. சுப்பிரமணியம் "மதராஸ் யுனைடெட் ஆர்ட்டிஸ்ட்" கார்ப்பொரேஷன் என்ற படக் கம்பெனியை நிறுவிப் பல சமூகப் படங்களைத் தயாரிக்கலானார். இவைகளில் முக்கியமானவை "பால யோகினி", பேராசிரியர் கல்கியின் கதையை அடிப்படையாகக் கொண்ட "தியாகபூமி". கள்ளங்கபடமற்ற குழந்தைகளின் வாயிலாக ஜாதிப்பாகுபாடுகளை நேரிடையாக எதிர்த்தது பாலயோகினி. சுதந்திர கோஷத்தை எழுப்பிய தியாக பூமிக்கு பிரிட்டிஷ் அரசு தடை விதித்தது. தென்னிந்தியத் தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரும் படப் பிடிப்புக்காக வடநாடு செல்வதைத் தடுக்க Motion Picture Producers Combine' என்ற பெயரில் தயாரிப்பாளர்கள் கூட்டு ஸ்டுடியோ

ஒன்றை கே. சுப்பிரமணியம் ஆரம்பித்தார். சென்னையிலேயே உருவான மற்றொரு திரைப் பட ஸ்தாபனம் திரு பி. என். ரெட்டி, ராம்நாத், சேகர் ஆகியவர்கள் நிறுவிய வாஹினி பிக்சர்ஸ். ''வந்தே மாதரம்'' என்ற தெலுங்குப் படத்தின்மூலம் வாஹினி பிக்சர்ஸ் பெரும் வெற்றி கண்டது. தேபகி போஸின் டைரக்ஷனில் வளர்ந்த வங்காளப் படங்கள் எவ்விதம் வங்காளப் பண்பாட்டை எடுத்துக் காட்டினவோ, அதே போன்று ஆந்திர தேசத்து மக்களின் வாழ்க்கை முறையைப் பிரதிபலித்தன பி. என். ரெட்டியின் படங்கள்.

இரண்டாவது உலகப் போர் தொடங்கியதும் திரைப் படத்துக்கும் ஒரு புதிய சகாப்தம் உருவாயிற்று. பல தொழில்களிலும் ஈடுபட்டு, வியாபாரத்திலும், விற்பனையிலும், கள்ளக் கடத்தலிலும் ஒரு சிலருக்குக் கள்ளமார்க்கெட் பணம் ஏராளமாய்க் குவிந்தது. இவ்விதம் லட்சக்கணக்கில் குவிந்த கள்ள மார்க்கெட் பணத்தை நேரிடையாகத் தொழிற்சாலைகளிலோ, வேறு வியாபாரத்திலோ ஈடுபடுத்துவது மிக கடினம். எந்தத் தொழிலில் கச்சாப் பொருள்களை விட, இயந்திரங்களை விட, ஊதியத்தில் செலவழிக்கும் தொகை அதிகமாக இருக்கிறதோ அத்தொழிலில் கள்ள மார்க்கெட் பணத்தைச் செலவழிப்பது சுலபமாகும்.

சினிமாத் தொழிலில் முக்கிய பாகமேற்று நடிக்கும் நடிகர், நடிகையர், சங்கீத டைரக்டர்கள் ஆகியோருக்கு அதிக மதிப்பு இருக்கிறது; ஆதலால் அவர்களால் ஒரு படத்தை வெற்றியடையச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை கொண்ட வியாபாரிகள் பலர் தங்கள் கள்ள மார்க்கெட் பணத்தோடு சினிமாத் தொழிலில் ஈடுபடலாயினர். பிரபாத், பாம்பே டாக்கீஸ் முதலிய பெரிய கம்பெனிகளில் நிரந்தரமாக மாதச் சம்பளத்துக்கு அமர்ந்திருந்த நடிகர், நடிகையர் பலரை இவ்விதம் புதிதாக வந்த அதிபர்கள் அதிகப் பணம் கொடுப்பதாகக் கூறி, வெளியே அழைத்தனர். மாதச் சம்பளம் ரூ. 3000,—ரூ. 4000 வரை வாங்கிக்கொண்டிருந்த நடிகர், நடிகையர் நிரந்தர ஒப்பந்தமின்றி ஒரு தனிப்பட்ட படத்துக்கு ரூ. 10,000, ரூ. 20,000 கிடைக்கும் என்று தெரிந்ததும் இக் கம்பெனிகளை விட்டு விலகினர். இவர்களில் அதிகப் புகழ் பெற்ற நடிகர், நடிகையர் முன்பு கம்பெனியில் இருந்தபோது ஒரே சமயத்தில் ஒரு படத்தில் மட்டும் நடித்துக் கொண்டிருந்தாலும் இப்பொழுது ஒரே சமயத்தில் பல படங்களில் நடித்து அதிகப் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பைப் புரிந்து கொண்டனர். இந்தப் புதிய முதலீடு முக்கியமாகக் கள்ள மார்க்கட் பணத்தைக் கொண்டு உருவானதால் ஒரு நடிகருக்கு ரூ. 20,000 கொடுக்குமிடத்தில் ரூ. 5000க்கு ரசீது கொடுத்தால் போதும் என்று புதுத் தயாரிப்பாளர்கள் கூறினர். வருமான வரி விஷயத்தில் இது நடிகருக்கு லாபகரமானதாக இருந்ததால் அவர்கள் தாராளமாய் ஒப்புக் கொண்டனர்.

இவ்விதம் நிரந்தர நடிகர், நடிகையர் பெரிய நிறுவனங்களிலிருந்து வெளிவரவும் அந்த நிறுவனங்கள் ஓரளவுக்கு ஆட்டம் கண்டன. இதற்கிடையே ஏற்பட்ட கச்சா பிலிம் நெருக்கடியினால் அரசாங்கம் பல வருடங்களாகத் தயாரிப்பிலிருந்த தயாரிப்பாளருக்குக் கச்சா பிலிம் சலுகை காட்டியது. இதனால் பல நிறுவனங்கள் உலக மகா யுத்தம் முடியும் வரை நிலைத்து நின்றன. இதற்கிடையே புதிய தயாரிப்பாளர்கள் அளித்த கதைப் போக்கிலும் மாறுதல் காணப்பட்டது.

ஹிமான்ஸுராய் இறந்த பிறகு பாம்பே டாக்கீஸ் தயாரித்த ''கிஸ்மத்'' படம் இந்த ரகத்தைச் சார்ந்தது. இவை எளிய வாழ்க்கை நடையை விடுத்து, ஒரே மாதிரியாக, 6 பாடல்கள், 3 நடனங்கள், வேலையில்லாத கதாநாயகன், கதாநாயகி காதலில் வில்லன் குறுக்கீடு என்ற கவட்டினை ஏற்படுத்தின. இதனால் வங்காளத்தில் தயாரிக்கப்பட்ட வாழ்க்கை முறையையொட்டிய படங்களுக்கு இந்தியாவின் மற்றப் பகுதிகளில் முன்பு இருந்த மதிப்புக் குறைந்தது.

உலக மகா யுத்தத்துக்குப் பிறகு வெளிவந்த முக்கிய படம் ஜெமினியின் ''சந்திரலேகா''. படவிநியோகத் தொழிலில் ஈடுபட்டிருந்த எஸ். எஸ். வாசன் 1941ம் வருடம் Motion Picture Producers Combine நிறுவனத்தை விலைக்கு வாங்கி, அதே இடத்தில் ஜெமினி ஸ்டூடியோவை நிறுவினார். ஆரம்ப காலத்தில் சில மாயா ஜாலப் படங்களைத் தயாரித்த ஜெமினி ஸ்டூடியோ உலக யுத்தம் முடிந்த பிறகு அதுவரை யாரும் ஒரு படத்துக்குச் செலவிடாத தொகையான முப்பது லட்சம் ரூபாயைச் செலவிட்டு, முதலில் ''சந்திர லேகா''வைத் தமிழிலும், பிறகு ஹிந்தியிலும் வெளியிட்டது. இவ்விதம் சென்னையில் தயாராகும் படங்களை அகில இந்தியாவிலும் திரையிடக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திய சந்திரலேகா பெரிய ஜோடனைகளுக்கும் அதிக முதலீட்டுக்கும் முக்கியத்துவம் அளித்தது. குறைந்த செலவில் எளிய நடையில் கல்கத்தாவில் தயாரான படங்கள் அகில இந்திய மார்க்கெட்டை இழந்தன.

சென்னை, பம்பாய் இவ்விரு நகரங்களுக்கிடையே இந்தியன் ஏர்லைன்ஸ் பல நடிகர் நடிகைகளையும், அவர்கள் குடும்பத்தையும் ஏற்றிச் செல்லலாயிற்று. சென்னை, பம்பாய் ஆகிய நகரங்களில் ஏற்பட்ட புதிய வாய்ப்பினால் பெரிய நடிகர் நடிகைகளுக்குக் கொடுக்கும் பணமும் அதிகமாயிற்று.

பெரிய நிறுவனங்களில் நிரந்தரமாய் வேலை பார்த்து வந்த டெக்னீஷியன்களும், துணை நடிகர், நடிகைகளும், தங்கள் நிரந்தர வேலைகளை இழந்து தனிப்பட்ட முறையில் கூலியில் வேலை செய்யும் அவல நிலையையடைந்தனர். துணை நடிகை, நடிகர்கள் போட்டி காரணமாக வாழ்க்கைக்குத் தேவையான ஊதியம் இல்லாத நிலையை அடைந்தனர்.

சுதந்திரம் அடைந்ததும் எல்லா வகையிலும் நாம் நலமடைவோம் என்று எதிர்பார்த்த திரைப்பட சம்பந்தப்பட்ட மக்களுக்கு அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி காத்திருந்தது. பல வருடங்கள் சிறையில் அடைபட்டு நாட்டுக்காக உழைத்த தலைவர்கள் சினிமா



போன்ற சாதாரணப் பொழுதுபோக்கை அவ்வளவு முக்கிய மென்று கருதவில்லை. மேலும் பெரிய கார்களில் செல்லும் நட்சத்திரங்களையும் அவர்களின் வாழ்க்கையையும் மற்றத் தொழிலில் கள்ள மார்க்கெட்டில் சம்பாதித்த தயாரிப்பாளர்களையும் கண்ட அரசாங்கம் சினிமாத் தொழில் மிகவும் கொழிக்கிறது என்று தமாஷா வரி உட்படப் பல வகையிலும் வரிகளை உயர்த்தினர்.

திரு எஸ். எஸ். வாசன் அவர்களின் தலைமையில் வரியை எதிர்த்துத் தொழிலதிபர்கள் அரசாங்கத்துடன் போராடினர். சினிமாவைப் பற்றி நன்கு அறிய ஆர்வம் கொண்ட மத்திய அரசாங்கம் 1951-ம் ஆண்டு திரு எஸ்.கே. பட்டீல் தலைமையில் சினிமா விசாரணைக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்தியது. இந்தக் கமிட்டி சில வரிகளைக் குறைக்க வேண்டும்; அரசாங்க உதவியோடு, சினிமாவுக்கு முதலீடு கொடுத்து உதவி செய்ய ஒரு ஸ்தாபனம் வேண்டும்; சினிமாத் தொழிலில் பயிற்சி அளிக்க ஒரு கல்லூரி ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனைகளைக் கூறியது. பல வருடங்கள் வரை அரசாங்கம் இந்தச் சிபாரிசுகளைக் கவனிக்கவில்லை.

இப்போது இந்தியாவில் சுமார் 4000 தியேட்டர்கள் இருக்கின்றன. சமீப காலமாக வருடத்துக்கு முந்நூறு படங்களுக்கு மேல் தயாராகின்றன. வருடத்துக்குச் சுமார் இருநூறு படங்கள் தயாரிக்கும் அமெரிக்காவில் 13,000 தியேட்டர்கள் இருக்கின்றன. இவ்விதம் இந்தியாவிலேயே அதிகத் தயாரிப்பும் குறைந்த வெளியீட்டு வாய்ப்பும் இருப்பதால் மத்திய மனிதர்களாகிய விநியோகஸ்தர்களின் முக்கியத்துவம் பன்மடங்கு அதிகரிக்கிறது. முழு முதலீடும் கையிலில்லாமல் விநியோகஸ்தர்களிடமிருந்தும், வட்டிக் கடைகளிலிருந்தும் முன் பணம் எதிர்பார்ப்பதால் தயாரிப்பாளர்கள் சுதந்திரமாகத் தாங்கள் நினைத்தபடி படம் தயாரிக்காமல் இந்த விநியோகஸ்தர்கள் கூறும் யோசனைகளைக் கேட்டுத் தயாரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. பி. என். சர்க்கார் போன்ற ஒரு தயாரிப்பாளர் டைரக்டர் பருவாவுக்குச் சுதந்திரமளித்துத் தேவையான முதலீட்டையும் கொடுத்துப் படம் தயாரித்த முறைக்குப் பதில், பணம் கொடுத்துப் படம் வாங்குபவர்களின் விருப்பத்துக்கு ஏற்பத் தயாரிக்கும் நிலைமை ஏற்படலாயிற்று.

இந்தக் கடினமான சூழ்நிலையில் எதிர் நீச்சலிட்டு ''தோபீகா ஜமீன்'', ''சுஜாதா'' போன்ற வாழ்க்கையை ஒட்டிய கருத்துப் படங்களைத் தயாரித்தார் பிமல் ராய்.

சுஜாதா படத்தில் தீண்டாத வகுப்பைச் சேர்ந்த ஒரு பெண்ணை உயர்குல வாலிபன் ஒருவன் காதலிக்கிறான். பருவாவோ அவரைப் பின்பற்றும் டைரக்டர்களோ இந்தப் படத்தைத் தயாரித்திருந்தால் ஒரு பாத்திரத்தையோ இரண்டையோ கொன்று படத்தை எடுத்திருப்பார்கள். பிமல்ராய் இந்தத் திருமணம் இந்திய சமூகத்தில் நடக்கக் கூடியது என்பதைத் திண்ணமாகத் திறமையான டைரக்ஷனுடன் வலியுறுத்தியிருக்கிறார்.

1954ம் வருடத்தில் ஆடல், பாடல் இல்லாத இரு படங்கள் வெளி வந்தன. ஒரு குழந்தையின் வாழ்க்கையை ஒட்டிய ''முன்னு'' என்னும் ஹிந்திப் படத்தை பம்பாயில் கே. ஏ. அப்பாஸும், சென்னையில் ஒரு துப்பறியும் கதையைக் கொண்டு எஸ். பாலசந்தர் டைரக்ஷனில் ''அந்த நாள்'' என்ற படத்தை ஏ. வி. எம். ஸ்தாபனத்தாரும் வெளியிட்டனர். ''முன்னு'' எடின்பரோ இன்னும் சில உலக பட விழாக்களில் பாராட்டப்பட்டது. ராஜ்கபூர் தயாரித்த ''ஜாக்தே ரஹோ'' மேல் நாட்டு விழாக்களில் பாராட்டுதலைப் பெற்றது.

ஹிந்தி, தமிழ்ப் படங்கள் தயாரிக்கப் பல லட்ச ரூபாய்கள் தேவைப்படுகின்றன. இவற்றில் சுமார் 40 சத விகிதத்துக்குக் குறையாது ஓரிரு நடிகர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இதே நேரத்தில் எப்போதுமே குறைந்த செலவில் படம் தயாரித்து வந்த கல்கத்தாவில் மிகச் சிக்கலான நிலைமை ஏற்பட்டது. கிழக்கு வங்காளம் பாகிஸ்தானாக மாறி விட்ட பின் பாகிஸ்தான் அரசாங்கம் பல விதங்களிலும் இந்தியப் படங்கள் பாகிஸ்தானில் காட்டப்பட முடியாத நிலையை உண்டாக்கியது. இதனால் எப்போதுமிருந்த

'வெள்ளித் திரையின் வளர்ச்சி' என்னும் இக் கட்டுரைத் தொடரை எழுதிய ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அமெரிக்க மக்களுக்காகப் பாரதத்தைப் பற்றிய டெலிவிஷன் நிகழ்ச்சிகள் பலவற்றைத் தயாரித்துப் புகழ் பெற்றவர். கொலம்பியா சர்வகலாசாலையில் படிக்கும் போது இவருக்குப் பேராசிரியராக வாய்த்த ஸ்ரீ பார்னுவ் அவர்களும், இவரும் புல்புரைட் ஸ்தாபனம் அளித்த ஆதரவின்பேரில் பாரதத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்றும் பலரைப் பேட்டி கண்டும் பழைய ஏடுகளைக் கண்டுபிடித்துப் படித்தும் ''இந்தியத் திரைப் படம்'' (Indian Film) என்ற அரியதொரு ஆராய்ச்சி நூலை எழுதியுள்ளனர். அமெரிக்காவில் வெளியாகியுள்ள இந்நூலை லாங்மென்ஸ் கம்பெனியார் இந்தியாவிலும் விரைவில் பிரசுரிக்க விருக்கின்றனர்.



மார்க்கெட்டில் 40 சதவீதத்தை இழந்து அவதியுற்றனர் வங்காளத் தயாரிப்பாளர்கள்.

இக் கடின வாழ்க்கையினூடே உருவாகிக் கொண்டிருந்தது ஒரு தலைசிறந்த திரைக் காவியம். 1941-ம் வருடம் சாந்தி நிகேதனில் பட்டம் பெற்று வெளியேறிய ஓவியர் சத்யஜித்ராய் ஓர் அந்நிய விளம்பரக் கம்பெனியில் ஓவியராகப் பணியாற்றினார். சிறு வயது முதல் திரைப் படங்களில் ஆர்வம் கொண்டு டைரக்டர்களின் பெயரைப் பார்த்துப் படம் தேர்ந்தெடுத்துப் பார்க்கக் கற்றுக் கொண்டார் ராய். சாந்தி நிகேதன் நாட்களிலும் அதற்குப் பிறகும், ''ஐஸன் ஸ்டைன்'' எழுதிய சினிமாவைப் பற்றிய சிறந்த நூல்களைப் படிக்கலானார். 1946ம் ஆண்டு கல்கத்தாவில் சில நண்பர்களுடன் ஒரு பிலிம் சொஸைட்டியை நிறுவினார். இந்த சொஸைட்டி அரசாங்கம் கொடுத்த பல இன்னல்களுக்கிடையே வளர்ந்தது. உலகின் பல நாடுகளிலும் தயாராகும் சிறந்த திரைப் படங்களை இங்கு பார்க்க ராய்க்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. விளம்பரக் கம்பெனி இவரை லண்டனுக்கு வேலை விஷயமாக அனுப்பியபோதும் அங்கு சிறந்த டைரக்டர்களின் — முக்கியமாக விட்டோரியா டெஸிகா, ரோஸலினி முதலிய இத்தாலிய டைரக்டர்களின் படங்களைப் பார்த்தார். இத்தாலியப் படங்களைப்போல் உண்மையான வங்காள வாழ்க்கையை ஒட்டிய படங்களைத் தயாரிக்க வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது.

'பிபூதி பானர்ஜி' என்ற வங்க ஆசிரியரின் ''பதேர் பாஞ்சாலி'' என்ற நாவலுக்கு அட்டைப் படம் வரைவதற்காக அந்த நாவலைப் படித்ததும், அதை அவர் எப்படியும் திரைப் படமாக்கிவிட வேண்டும் என்ற தீர்மானமான எண்ணம் கொண்டார். கதையின் படமெடுக்கும் உரிமையை வாங்கிக் கொண்டதும் ''பதேர் பாஞ்சாலி''யின் திரைக் கதை உருவாயிற்று.

இத் திரைக் கதையில் ஒவ்வொரு காட்சியும், அதற்கான காமிராக் கோணங்களும் வசனங்களும் மட்டுமின்றி முக்கிய காட்சிகளை அப்படியே ஒவ்வொரு கோணமாகப் பார்க்கும் வகையில் சித்திரமாகவும் வரைந்து விட்டார்.

இந்தத் திரைக் கதையோடு சுமார் 40 விநியோகஸ்தர்களையும், தயாரிப்பாளர்களையும் அலுக்காமல், சலிக்காமல் அணுகினார். ''நன்றாக இருக்கிறது. ஆனால் எடுக்கக்கூடிய படம் அல்ல'' என்று பலர் ஒதுக்கி விட்டனர். வேறு சிலர் ''இதில் பாடல்கள் எங்கே? நடிகர், நடிகையர் யார் யார்?'' என்றார்கள். பெரும்பாலும் புது நடிகர்களைக் கொண்டு தயாரிக்கவிருக்கும் 'பதேர் பாஞ்சாலி'க்கு யார் பணம் கொடுப்பார்கள்? கடைசியில் தம் சொந்தப் பணமெல்லாம் சேகரித்து நண்பர்களிடமும் கடன் வாங்கி, படத்தை ஆரம்பித்து விட்டார். பணம் இல்லாமல் படம் பாதியில் நின்று விட்டது. வங்காள அரசாங்கத்தின் உதவியோடு படம் முடிவடைந்தது.

''பதேர் பாஞ்சாலி'' தயாராகிச் சில நாட்களுக்கெல்லாம் அமெரிக்கா, ஐரோப்பா, சீனா ஆகிய பல இடங்களில் மிக வெற்றிகரமாகப் படம் ஓட ஆரம்பித்தது. இன்று சத்யஜித் ராய் உலகின் மூன்று பெரிய டைரக்டர்களில் ஒருவர் என்றால் மிகையாகாது. ஸ்வீடன் நாட்டு 'இங்மார் பார்க்மென்', இத்தாலியின் 'பெடரிகோ பெல்லினி' ஆகியவர்களைத் தவிர சத்யஜித் ராய் அளவுக்கு உலகப் பட விழாக்களில் பரிசும் பாராட்டுக்களும் பெற்ற டைரக்டர்கள் யாரும் இல்லை.

தாதா ஸாஹிப் பால்கே அவர்கள் முதல் இந்தியப் படத்தை வெளியிட்டு ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இந்தப் 'பொன் விழா' வருடத்தில் நம் சத்யஜித் பெர்லின் நகரத்தில் மற்றுமொரு ''ஸெல்ஸ் நிர்'' பரிசை அடைந்திருப்பதைக் குறித்துப் பெருமைப்படுவோம். அதே நேரத்தில் 'வாழ்க்கையில் நாளை என்ன செய்வோம்?' என்ற கேள்வியோடு நிரந்தரமின்றி வாழும் திரைப் பட டெக்னீஷியன்கள், துணை நடிகர்களுக்குப் பொன்விழா வருடத்தில் என்ன சொல்வோம்? திறமை யிருந்தும், சுதந்திரமில்லாது ஏதோ விநியோகஸ்தர்களும், வட்டிக் கடைக்காரர்களும் சொல்லும் முறையில் படம் எடுத்துக் கொண்டிருக்கும் தயாரிப்பாளர்களுக்கும் டைரக்டர்களுக்கும் என்ன சொல்வோம்? என்ற பல கேள்விகள் நம் மனத்திலே எழுகின்றன.

தயாரிப்பாளர்களை விநியோகஸ்தர்கள் பிடியிலிருந்து விடுவிக்க அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கும் ஸ்தாபனம் பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன். விநியோகஸ்தர்கள் அல்லாத வேறு துறையிலிருந்து முதலீடு கிடைத்தால், விநியோகஸ்தர்கள் பிடியிலிருந்து தப்பி அழியாத் திரைக் காவியத்தைப் படைக்கலாம் என்பதற்குப் 'பதேர் பாஞ்சாலி' ஓர் எடுத்துக் காட்டு.

அதே சமயத்தில் பிலிம் பைனான்ஸ் கார்ப்பரேஷன் இவ்விதப் படங்களை ஆதரிக்கவில்லை; எப்போதும்போல் பெரிய நடிகர்களை வைத்துப் பழஞ் சுவட்டிலேயே சென்று கொண்டிருக்கும் படங்களையே ஆதரிக்கிறார்கள் என்றே தோன்றுகிறது. இவ்விஷயங்களையும், இன்னும் அரசாங்கச் செய்திப் படங்கள் தயாரிக்கும் முறைகள் முதலியன பற்றியும் கூற இங்கு இடம் போதாது.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பிலிம் போர்டு தலைவராக இருந்த 'ஜீன் பெனுவீட் லெவியின்' குரலில் இந்தக் கட்டுரையை முடிக்க விரும்புகிறேன்.

''திரைப் படம் என்றும் ஒரு கலையாகத் திகழும். ஏனெனில் வாழ்க்கைக்கும் பல்வேறு கலைகளுக்கும் இன்றியமையாததான வேறுபாடுகள் திரைப்படத்தில் என்றும் காணப்படும். உலகின் அரங்கில் பல்வேறு மக்களின் பழக்கங்களையும், பழங் கதைகளையும் ஆபரணமாகக் கொண்டும், தேசங்களின் உள்ளுணர்வுகளைப் பிரதிபலித்தும் திரைப்படம் உலக வாழ்க்கையைக் காட்டும் அற்புதமான பரந்த காட்சியாகத் திகழும். நிரந்தரமாக மாறிக்கொண்டிருக்கும் சமூகத்தோடு இக்கலை ஒத்து வளர வேண்டுமாதலால் உலக மக்கள் கையில் இந்த முழுமையான கலை பரிணாமமடையும்.''

'காஷ்மீர் பொக்கே டால்க் உபயோகித்து மணிக்கணக்காக சுகந்தத்துடனும் புதுமையுடனும் இருங்கள்



ன்னதமான காஷ்மீர் பொக்கே
ன் தரம், ஒரு அழகுசாதன டால்க்...
ந குழந்தைக்கான பவுடர்
வ்விரண்டையும் அளிக்கிறது.

ஷ்மீர் பொக்கே டால்க்கின்
ருமையான, பூவிதழ்போன்ற
மன்மையான ஸ்பரிசத்தை
்கள் உணரும்பொழுது ஒரு
செண்டிற்குள் இருப்பது போலவே
ான்றும். உடல் முழுவதும் தடவிக்
ாண்டு அதன் ஊற்றுப்பெருக்
ன எழும் புதிய நறுமணத்தில்
னைத்து மகிழுங்கள்



குழந்தையை இதமுடனும் சுகமுடனும் வைத்திருங்கள். காஷ்மீர் பொக்கே, எந்த ஒரு விசேஷ குழந்தைக்கான பவுடரைப் போலவே, மிருதுவும் பட்டுப்போன்றதுமானது. நீங்கள் இருவருமே உபயோகிக்கக்கூடிய அவ்வளவு சௌகரியமான ஒரே பவுடர்!



காஷ்மீர் பொக்கே

டால்கம் பவுடர்—ஆடவர் விரும்பும் சுகந்தமுள்ளது!

CB-6-15-TAM.

கிறிஸ்துவக்

ஒரு நாட்டுப்புறத்தானே அவன் நண்பன் வெகு நாட்கள் கழித்துச் சந்தித்தான். ''என்னப்பா! உன் மகன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்?'' என்று விசாரித்தான்.

ஒரு கல்லூரியின் பெயரைச் சொல்லி அதில் தன் மகன் சேர்ந்து படிப்பதாகச் சொன்னான் கிராமவாசி உற்சாகத்துடன்.

''என்னவோ, மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பெரிய டாக்டராக வரப் போகிறான் என்று சொல்லிக் கொண்டிருந்தாயே?'' என்று தொடர்ந்தான் நண்பன்.

''இப்போது என் பயல் பல பாஷைகளைப் படிக்கிறான். ரொம்பக் கடினம் போலிருக்கு! பயல் கல்லூரிக்குச் சம்பளம் கட்டப் பணம் கேட்டு விவரமாகக் கடுதாசி எழுதியிருக்கிறான் பாரு! பிரெஞ்சுக்கு ஐந்து பவுனும்! அப்புறம் ஸ்காட்சுக்கு ஐம்பது பவுனும்'' என்று அளக்க ஆரம்பித்தான் அந்த அப்பாவி.

இது ஒரு மேல் நாட்டு நகைச்சுவைத் துணுக்கு. பையன் தான் படிக்கும் பாஷைகளின் பெயரோடு குடிக்கும் பிரசித்தி பெற்ற ஸ்காட்ச் மதுவுக்கும் பணம் வேண்டித் தந்தையை ஏமாற்றும் ஒரு சம்பவம். அதிகம் படிக்காத தந்தை பிரெஞ்சையும் ஸ்காட்சையும் ஒரேயடியாக எடை போட்டு விட்டான்.

ஆனால் சென்ற நூற்றாண்டில், நம் தமிழ் நாட்டு இளைஞர்களும் இந்த ஸ்காட்ச் போதையை அனுபவிக்கத் தொடங்கினார்கள். அது சாதாரண மது போதையில்லை; அறிவு போதை! கல்வி போதை! ஸ்காட்லாந்து தேசத்திலிருந்து வந்த ஜேம்ஸ்லாரி, மாத்யூ போவி என்ற இரண்டு பாதிரியார்கள் 1835 ஆண்டில் இந்திய மாணவர்களுக்குப் பிரதேச மொழிகள் மூலமும் ஆங்கிலத்தின் மூலமும் கல்வி அறிவைக் கொடுக்க வேண்டும் என்று ஆரம்பித்த சிறு பள்ளியே, இன்று விழுது விட்டுப் படர்ந்து செழித்து வளர்ந்து நிற்கும் தாம்பரம் கிறிஸ்துவக் கல்லூரியாகும்.

இந்தப் பள்ளியின் வளர்ச்சியில் அக்கறை காட்டி வளர்ச்சியுறச் செய்ய, அடுத்த ஆண்டிலேயே இந்தியாவுக்கு வந்து சேர்ந்த கல்விமான் ரெவரெண்ட் ஜான் ஆண்டர்சன் ஆவார். சீக்கிரமே அவருக்கு ஒத்தாசையாக மேலும் இரண்டு ஸ்காட்லாந்து தேசப் பாதிரியார்கள் வந்தார்கள். ரெவரண்ட் ராபர்ட் ஜான்ஸ்டன் ரெவரண்டு ஜான் ப்ரெயிட்வுட் ஆகியோர்தான் அவர்கள்.

இந்த மூன்று மூல கர்த்தாக்களின் கம்பீரமான அன்பு ததும்பும் பெரிய திரு உருவங்கள் இன்றும் இந்தக் கல்லூரி மண்டபத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன.

தொடர்ந்து ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களைச் சமாளித்து, இந்தக் கல்லூரிக்குப் புத்துயிர் அளித்து வளர்த்த டாக்டர் மில்லரின் உருவச் சிலையும் அதே மண்டபத்தின் முகப்பிலிருக்கிறது.

இந்தக் கல்லூரி தாம்பரம் ரயில் நிலையத்துக்கு வெகு அருகில் இருந்த போதிலும், இந்தக் கல்லூரி வட்டத்துக்குள் நுழைந்தவுடனேயே ஏதோ அபாரமான நிம்மதியை அளிக்கும் ஆசிரமப் பிரதேசத்துக்கு வந்து விட்டோமோ என்ற உணர்ச்சி ஏற்படுகிறது. அடர்ந்த மரங்களும், ஆங்காங்கு காணப்படும் புல்வெளிகளும் அழகும் எளிமையும் கலந்த கட்டடங்களும் ஒன்று சேர்ந்து ஒரு ரம்மியமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கின்றன.

இந்தக் கல்லூரியின் புல்வெளிகள், தளதளவென்று கண்களைக் கவர்வதற்கும் நடைபாதைகள் எந்த விதமான சிறிசல் குப்பைக் காகிதங்களாலும் படைபெடுக்கப்படாமல் இருப்பதற்கும், மாணவர்களின் பண்பாடே காரணம் என்று தெரிய வந்தது. அந்தப் பண்பாட்டுக்கு வித்திட்டவர் இந்தக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் டாக்டர் ஜான் பாய்ட். அன்பையே ஆயுதமாகக் கொண்டு மாணவர்களிடையே பண்பாட்டை வளர்த்த மகான்





கல்லூரி

கலை வளர்க்கும் கோயில்கள்

என்று அவருடைய பழைய மாணவர்கள் வெகு பெருமையாகச் சொல்லுகிறார்கள்.

யாராவது மாணவன் கவனப் பிசகாகக் கையில் இருந்த கிழிசல் கடுதாசியை, வழியிலோ, வராந்தாவிலோ போடுவதை, டாக்டர் பாய்டு பார்த்து விட்டால், வேகமாக அந்த மாணவன் போன வழியிலேயே நடந்து, அவன் முதுகில் தட்டிக் கொடுத்து க்ஷேம லாபம் விசாரித்து, அவன் வந்த வழியிலேயே அவனைத் திருப்பி அழைத்து வந்து, அவன் கீழே போட்ட கடுதாசித் துண்டைத் தாமே குனிந்து கையில் எடுத்துக் கொண்டு "தம்பி! இந்தக் கடிதத் துண்டைப் போடுவதற்கு என்றுதான் தொட்டி யிருக்கிறதே! அங்கல்லவா போட வேண்டும்!" என்று சொல்லி விட்டுத் தாமே கொண்டு போய் அதைத் தொட்டியில் போட்டு விட்டுப் போவாராம். அப்புறம் அந்தப் பையன் கனவில்கூட அஜாக்கிரதையாகக் குப்பைக் கடுதாசியை அலட்சியமாகக் கீழே போடுவானா?

அதே மாதிரி புல் தரையில் யாராவது குறுக்கு வழியாக நடந்து வந்து விட்டதைக் கவனித்தால் அந்த மாணவன் கையைப் பிடித்து, நேரான வழியில் அவன் புறப்பட்ட இடத்துக்கே அழைத்துச் சென்று, 'அங்கிருந்து இந்த வழியில் வரக் கூடாதோ ?' என்பாராம் சிரித்துக் கொண்டே! அப்புறம் புல் வெளியைப் பார்க்கும் போதெல்லாம் அந்த மாணவனின் உடம்பு புல்லரிக்குமாம்.

மாணவர்களின் மனோ தத்துவத்தையும் போக்கையும் நன்கு உணர்ந்து அவர்களுக்கு அன்பு என்ற 'மீடியத்'தைக் கொண்டே வாழ்க்கையில் கடமை, கட்டுப்பாடு உணர்ச்சிகளைப் போதித்தவர் டாக்டர் பாய்ட். பல ஆண்டுகள் இந்தக் கல்லூரியில் பணியாற்றிப் பல ஆயிரம் மாணவர்கள் உள்ளத்திலே பண்பைத் தோற்றுவித்தவர்.

இன்றும் இந்தக் கல்லூரி அறிக்கைப் பலகையில் புல் தரையைக் காப்பாற்றுவதற்கான அறிக்கைகள் காணப்படுகின்றன. 'உங்கள் பாதங்கள் படியாத இடங்களில்தான் புல் வெளிகள் பசுமையாக இருக்கின்றன' என்ற அறிக்கை மாணவர்களுக்கும் சரி மற்றவர்களுக்கும் சரி, ஒரு நல்ல வழக்கத்தைக் கடைப்பிடிக்கச் செய்யும் பொன்மொழியாகவே விளங்குகிறது.

இன்று இந்தக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றுபவர் டாக்டர் சந்திரன் தேவநேசன். நீண்ட நாட்களாக இந்தக் கல்லூரியுடனும், தாம்பரம்வாசிகளுடனும் இனிமை நிறைந்த தொடர்பு கொண்டவர். அயல் நாடுகளுக்குச் சென்று தம் ஆசிரியத் திறமைக்கு மெருகு ஏற்றிக் கொண்டு வந்திருக்கிறார். மாணவர்களுக்கான 'கேள்வி நேர'க் கல்லூரி ரேடியோ நிகழ்ச்சிகள் மூலம் நகைச்சுவை ததும்பும் அவருடைய குரல் அநேகருக்குப் பரிச்சயமானதுதான்.

பல வருடங்களுக்கு முன்பே அவர் சரித்திரப் பேராசிரியராக, வகுப்பு நடத்த வரும் போது தம் இருப்பிடத்துக்குப் பக்கத்திலிருக்கும் நாவல் மரங்களிலிருந்து ருசி மிகுந்த








பழங்களைப் பொறுக்கி ஒரு கண்ணாடி ஜாடியில் உப்புப்பொடியுடன் போட்டுக் கலந்து எடுத்து வருவாராம். பாடம் ஆரம்பிக்குமுன் தம் மாணவர்களுக்கு அந்தப் பழங்களை விநியோகித்து விட்டுத்தான் அன்றைய பாடங்களை ஆரம்பிப்பாராம். அவருடைய போதனையில் இனிமையும் சுவையும் அதிகமா? அல்லது அவர் கொடுத்த நாவல் பழங்களில் அவை அதிகமா என்று கண்டுபிடிக்க முடியாமல், மாணவர்கள் சொக்கி நிற்பார்களாம்.

இந்த நிகழ்ச்சியை அவரிடம் இருபது வருடங்களுக்கு முன் படித்த மாணவர் பெருமையுடன் விவரித்தார்.

இந்தக் கல்லூரியில் ஏறக்தாழ ஆயிரத்து இருநூறு மாணவர்கள் படிக்கிறார்கள்.

இந்தக் கல்லூரியின் பெருமை வாய்ந்த பழைய மாணவர்கள் வரிசையைப் பார்க்கும் போது இந்தக் கல்லூரி மாணவர்களின்வெற்றி சத விகிதத்தைப் பற்றி ஆச்சரியப்பட வேண்டிய அவசியமே இல்லை. டாக்டர் லட்சுமணஸ்வாமி முதலியார், டாக்டர் ராமஸ்வாமி



''உங்க பேண்ட் முன் பக்கம் வெள்ளையாகவும் பின்பக்கம் ஸ்ப்ரே டிசைனுகவும் இருக்கே! இந்த நியூ மாடலை எங்கே சார் வாங்கினீர்கள்?''

''மழை பெய்த ரோட்டில் செருப்புக் காலோடு நடந்து வாங்கிய மாடல்!''

முதலியார், எஸ்.கே. செட்டூர், கே. பி. எஸ். மேனன், புல்லா ரெட்டி, பி. வி. ராஜமன்னுர், கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி, டாக்டர் சுப்பராயன், எல்லாருமே இந்தக் கல்லூரியின் தயாரிப்புகள்தான்!

எண்பதுக்கும் மேலான மாணவிகள் இந்தக் கல்லூரியில் படிக்கிறார்கள். அவர்களில் அநேகர் ஆராய்ச்சித் துறை மாணவிகள்தான். வழக்கமாகப் புறக்கணிக்கப்படும் பி. ஏ. பாடத்துக்கான பொருளாதாரம், சரித்திரம் முதலிய பிரிவுகளுக்குக் கூட இந்த ஆண்டு கிராக்கி அதிகமாம். தத்துவ பாடம் இந்த ஆண்டு பல மாணவர்களைத் தன்னிடம் இழுத்திருக்கிறது.

இந்தக் கல்லூரியில் ஹாஸ்டல் வாழ்க்கை ஒரு விசேஷ அம்சமாகும். பழங்கால குருகுல வாசத்தை நினைப்பூட்டுகிறது.

செயின்ட் தாமஸ் ஹால் உணவு ரசனைக்கும், செலேயூர் ஹால் கலாரசனைக்கும், பிஷப் ஹீபர்ஹால், விளையாட்டுப் போட்டிப் பந்தய ஈடுபாட்டுக்கும் சிறந்து விளங்கின. அந்தச் சம்பிரதாயத்தை மாணவர்கள் இன்றும் கடைப் பிடித்து வருகிறார்கள். செயின்ட் தாமஸ் ஹால் நிர்வாகம், ஒரு மந்திரிசபை போல் நடைபெறுகிறது. சபாநாயகர், பிரதம மந்திரி, உணவு மந்திரி என்ற வகையில் மாணவர்களின் பிரதிநிதிகள் நிர்வாகம் நடத்துகிறார்கள். அவ்வப்போது கூடும் சபையில் ''ஏன் சென்ற வாரம் செவ்வாய்க்கிழமை இரவு வெண்டைக்காய் சாம்பாரில் ஒரு உப்பு கூடுதலாக இருந்தது? உணவு மந்திரி பதில் சொல்லுவாரா?'' என்ற அங்கத்தினர் கேள்வியும், ''பதில் சொல்ல அவகாசம் தேவை'' என்ற மந்திரியின் பதிலும் சகஜமாக இருக்கும் என்று எதிர்பார்க்கலாம் அல்லவா!

புது மாணவர்களைப் பழைய மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும் வழக்கம் பண்புடனும், நிஜமாகவே நாகரிகமான பாணியிலும் இந்தக் கல்லூரியில் நடப்பதாக அதன் மாணவர்கள் பெருமிதத்துடன் தெரிவித்தார்கள்.

வருட ஆரம்பத்தில், 'ஹாட் நைட்' — அதாவது 'தொப்பி இரவு' என்ற நிகழ்ச்சியை ஒவ்வொரு ஹாஸ்டல் மண்டபத்திலும் ஒவ்வொரு நாள் வைத்துக் கொண்டு சுவையுள்ளதாக நடத்துகிறார்கள். வேடிக்கையான இரட்டை அர்த்தம் தொனிக்கும் கேள்விகளை ஒவ்வொன்றாகத் துண்டுக் கடுதாசிகளில் எழுதிச் சுருட்டி ஒரு தொப்பியில் போட்டு அரங்கத்தில் உள்ள ஒரு மேஜை மீது வைக்கிறார்கள். ஒவ்வொரு புது மாணவனும் மேடைக்கு வரிசையாக வந்து, தன்னை யார் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு பிறகு தொப்பியிலிருந்து ஒரு கடிதச் சுருளை எடுத்துப் பிரித்துக் கேள்வியை வாசிக்க வேண்டும். அதற்கான பதிலையும் சொல்லி விட்டுக் கீழே இறங்கி வரவேண்டும். பல சமயங்களில், நகைச்சுவை நிறைந்த கேள்விகளும் பதில்களும் சிரிப்பு அலைகளைத் தோற்றுவிக்கின்றன.

இந்த விடுதிகளின் மாணவர்களுக்கு வெள்ளிக் கிழமை இரவுகள் விசேஷ தினங்கள். ஒவ்வொரு வெள்ளிக் கிழமை இரவும் விருந்து நாளாக இருந்தால் ஏன் அவர்கள் குஷியாக இருக்க மாட்டார்கள்?

'ஞாபக மறதியுள்ள பேராசிரியர்' என்ற ஆங்கிலத் திரைப் படம் சமீபத்தில்தான் நகரத்தில் வந்து பலரின் கவனத்தைக் கவர்ந்தது. ஆனால் பல வருடங்களுக்கு முன்பே இந்தக் கல்லூரியில் கீபின் என்ற கணிதப் பேராசிரியர் தம் ஞாபக மறதியினால் மாணவர்களை நிறைய மகிழ்வித்திருக்கிறார்.

வகுப்பில் நுழைந்து கரும் பலகையில் இரண்டு மூன்று வரிகள் எழுதி விட்டு, ஏதோ நினைவில், வகுப்பு முடிந்து விட்டது என்று வெளியே நடந்து விடுவாராம். அவரைப் போய் மீண்டும் இழுத்து வந்து உட்கார வைக்க மாணவர்களுக்குப் பைத்தியமா என்ன?


ஆனால் ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மாணவர்கள் அவரைப் பிடித்து இழுத்து வந்திருக்கிறார்கள். ஆனால் சூழ்நிலை வேறு!

ஒரு நாள் பிற்பகல் சீக்கிரமாகவே பேராசிரியர் பீச்சுக்குப் போக, மின்சார ரயில் வண்டியில், தாம்பரம் ஸ்டேஷனில் ஏறி அமர்ந்து விட்டார். வண்டி புறப்பட்டவுடன், அவர் புறப்பட்ட நோக்கமும் எங்கோ போய் விட்டது. அந்த ரயில் பீச் ஸ்டேஷனை அடைந்தது. பேராசிரியருக்கு எத்தனையோ சிந்தனைகள். இறங்க வில்லை. அதே வண்டி மீண்டும் தாம்பரத்துக்கு வந்தது. அப்போதும் இறங்க வில்லை. இப்படியாக முன்னிரவு வரை வண்டியிலேயே பிரயாணம் செய்து கொண்டிருந்தார். இதைக் கவனித்த சில மாணவர்கள், அவருக்கு இவ்வுலகச் சிந்தனையை வரவழைத்துக் கல்லூரி வட்டத்துக்குள் அழைத்து வந்தார்களாம்.

இந்தக் கல்லூரியில் ஏற்கனவே படித்து வாழ்க்கைப் பாதையில் நடக்கக் காலடி எடுத்து வைத்தவர்கள், தங்கள் கல்லூரிக்குப் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார்கள். இந்தச் சம்பிரதாயத்தை வருங்கால மாணவர்களும் கடைப்பிடிப்பார்கள் என்று கல்லூரியில் நிலவும் அன்பும் பண்பாடும் நிறைந்த சூழ்நிலை சொல்லாமல் சொல்லுகிறது.



கல்யாண
காலங்களுக்கு
• பட்டுச் சேலைகள்
• பாவாடைத் துண்டுகள்
• சோளி பீஸ் ரகங்கள்
தென்னிந்தியாவிலேயே பட்டுச் சேலைகளுக்கு
நற்கியாதி பெற்ற ஸ்தாபனம்...
நல்லி சின்னசாமி செட்டி
பனகல் பார்க்
டெலிபோன்
நெ. 41115
தியாகராயநகர்
சென்னை-17



தீர்ந்தது ஒரு கடன்....
பாக்கி வேறு ஏதாவது இருந்தால் வரும் வருடங்களில்
தீர்த்துவிடுவான். இந்த விவசாயியின் பயிர் அபிவிருத்தியடைந்திருப்பதோடு, விளைச்சல் எப்போதையும்விட அதிகரித்துள்ளது. காரணம் விவசாயத்துக்கு நவீன முறைகளையே நம்புகிறான் இவன். சிறந்த விதைகளைப் பயிரிடுவதோடு, ராலீஸ் தயாரிக்கும் உரங்களையும் உபயோகிக்கிறான் என்பதை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். ஆம் ராலீஸின் 'மரம் மார்க்' உரங்கள் நம்பிக்கைக்குகந்தவை என்பதோடு எளிதில் கிடைக்கின்றன. மேலும் ராலீஸ் நிபுணர் உங்களுக்கு உதவ எப்பொழுதும் காத்திருக்கிறார்.
RALLIS
TREE BRAND
FERTILIZERS
ராலீஸ் (இந்தியா) லிமிடெட்
இந்தியா முழுதும்
RFY-47-TAM

அத்தியாயம் 33








சத்தியமூர்த்தியின் முகத்தையே கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்த குமரப்பன் கூறலானான்: ''நான் தான் இந்தத் தவற்றைச் செய்தேன் என்று சொல்லி விளக்குவதற்கு அவசியமில்லாமலே, இதை என்னால் மறைத்திருக்க முடியுமானாலும் அப்படிச் செய்ய நான் விரும்பவில்லையடா சத்தியம்! நீ கல்லூரிக்குச் சென்ற பிறகு இங்கு எனக்குப் பொழுது போகவில்லை. படிப்பதற்கு ஏதாவது புத்தகம் இருக்கிறதா என்று தேடினேன். வெளியில் நல்ல புத்தகமாக எதுவுமில்லை. நமக்கில்லாத உரிமையா என்ற தைரியத்தில் உன் பெட்டியைத் திறந்து புத்தகங்களைத் தேடியபோது ஒரு மூலையில் இந்தக் கடிதம் மடிக்கப்பட்டுக் கிடந்தது. ஏதோ ஒருவிதமான அசட்டுத் தைரியத்தில் அடக்க முடியாத ஆவலோடு இதைப் பிரித்துப் படித்து விட்டேன். இதைக் கையில் எடுத்தவரை என்னை நீ மன்னிக்கலாம். கையில் எடுத்த பின்பும் பிரித்துப் படிக்க வேண்டும் என்ற விருப்பத்தை என்னளவில் தடுத்துக் கொண்டிருக்க முடியும். அப்படி நான் என்னைத் தடுத்துக் கொள்ள முடியாமற் போனதற்காகத்தான் இப்போது மன்னிப்புக் கேட்க வேண்டியிருக்கிறது.''

மனத் தயக்கத்தோடு இப்படிக் கூறிவிட்டுக் குமரப்பன் சத்தியமூர்த்தியிடம் நீட்டிய கடிதம் அவன் மல்லிகைப் பந்தலுக்கு வந்த பின்பு மோகினி அவனுக்கு எழுதியது. தன்னுடைய பெட்டியின் ஒரு மூலையில் அந்தக் கடிதத்தைப் போட்டு வைத்தபோது, பின்னால் என்றாவது, குமரப்பனோ, இன்னொரு நண்பனோ அதை எடுத்துப் படிக்க நேரிடுமென்று சத்தியமூர்த்தி கனவிலும் நினைத்ததில்லை. குமரப்பன் அதை


மணிவண்ணன்

சிறு வயதிலேயே புகட்டுங்கள்...
சிறந்த முறையில் புகட்டுங்கள்...
காலையில் முதல் வேலையாக ஒரு முறை
இறுதியாக இரவில் ஒரு முறை
வாய்கொப்பளிக்க

லிஸ்டரின்!

—வாழ்நாள் முழுதும்
அவர்களுக்குப் பாதுகாப்பு!



பழக்கம் படிவதற்கு வாகானது இளமைப் பருவம்! லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தைப் புகட்டுவதற்கு இதைவிட வாய்ப்பான சமயமும் உண்டோ! அன்றாடம் அதிகாலை ஒரு தடவை, இரவு ஒரு தடவை லிஸ்டரின் கொண்டு வாய் கொப்பளித்தால் கிருமிகளினின்று நாள் முழுதும் காத்துக்கொள்ளலாம். பட்ட மாத்திரத்திலே கிருமிகளைக் கொன்று மூச்சிலே இனிமை தவழச் செய்வது லிஸ்டரின் ஆன்டிஸெப்டிக் (நச்சுமுறி மருந்து).

திடமுடன் முன்யோசனையைக் கைக்கொள்ளுங்கள்! தினம் இருமுறை லிஸ்டரின் உபயோகிக்கும் ஆரோக்கிய நற் பழக்கத்தை இப்போதே துவக்குங்கள்!

வாய் நிறைந்த சுகாதாரத் தூய்மைக்கு வழி: லிஸ்டரின்; இன்றும் என்றும் உங்கள் துணை!



வார்னர்-லாம்பர்ட் பார்மஸூட்டிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது).

WL.1701B.TM

எடுத்துப் படிக்க நேர்ந்து விட்டதென்று இப்போது தெரிந்து போன பின்பும் அதற்காக மனம் உடைந்து போய்விடவில்லை. சிறிது நேரம் திகைப்பும் சிந்தனையுமாக ஒரு பதிலும் சொல்லாமல் மௌனமாயிருந்த பின் சத்தியமூர்த்தி தன் நண்பனை நோக்கி வெகு நிதானமாகப் பேசினான்:

"இதில் மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது குமரப்பன்? என் வாழ்க்கையின் மிக அந்தரங்கமான பகுதியைத் தெரிந்து கொள்வதற்கு நீ உரிமையற்றவன் என்று சொல்லிவிட முடியுமா?"

"முடியுமோ, முடியாதோ? — உன் அந்தரங்கங்களைத் தெரிந்து கொள்ளும் உரிமை எனக்கு உண்டு அல்லது இல்லை என்று தீர்மானம் செய்ய வேண்டியவன் நீதானே? நானாக அந்த உரிமையை எப்படி எடுத்துக் கொள்ள முடியுமடா சத்தியம்?"

"அப்படிச் சொல்லாதே குமரப்பன்! எந்த உரிமையையும் தாராளமாக உன்னிடம் விட்டுவிடுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். உன்னைப் போல் உண்மை நண்பன் ஒருவனிடம் வாழ்வதா-சாவதா என்று சிந்தித்து முடிவு சொல்லும் பொறுப்பைக் கூடப் பரிபூரணமாக விட்டு விட்டு நீ சிந்தித்து முடிவு சொல்கிறவரை நிம்மதியாய்ச் சிரித்துக் கொண்டிருக்கலாம்."

"நீ வாழ்வதற்குச் சிந்தித்து முடிவு சொல்லுகிற நண்பனாக மட்டுமே நான் கடைசி வரை இருப்பேன்" என்று கூறிவிட்டுக் குமரப்பன் சத்தியமூர்த்தியின் முதுகில் தட்டிக் கொடுத்தான். சத்தியமூர்த்தியின் மனத்திலும் மோகினியைப் பற்றிய அந்த இன்ப நினைவுகள் இந்த விநாடி வரை தானே சுமந்தாக வேண்டிய தனிச் சுமையாகவும் பாரமாகவும் இருந்தன. தன் மனத்தில் மோகினியைப் பற்றி அலைந்து கொண்டிருந்த சிந்தனையலைகளைக் குமரப்பனைப் போன்ற நெருங்கிய நண்பன் ஒருவனிடம் சொல்லியாக வேண்டிய சந்தர்ப்பம் தவிர்க்க முடியாமல் தானாகவே நேர்ந்ததை அவனும் வரவேற்றான். தனிமையான இந்த இங்கித நினைவுகளை நண்பனிடம் விவரிப்பதற்கு முன்னால் தான் அங்கு இல்லாதபோது தன்னுடைய பெட்டியிலிருந்து நண்பன் அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்த வேளையில் என்னென்ன உணர்வுகளை அவன் அடைந்திருக்க முடியும் என்று அனுமானம் செய்கிற ஆவலோடு இப்போது தானே அதை ஒரு முறை படிக்கத் தொடங்கினான் சத்தியமூர்த்தி.

'என்னைக் காப்பாற்றி ஆட்கொண்ட தெய்வத்தின் திருவடிகளில் அடியாள் மோகினி அநேக வணக்கங்கள்......'

என்று தொடங்கிய அந்தக் கடிதம், 'புஷ்ப மரத்தடியில் வீற்றிருக்கும் தெய்வத்துக்கு அர்ப்பணம் ஆகும் பூவைப் போல் நான் தானாகவே உங்களுக்குச் சமர்ப்பணமானவள்' என்ற வாக்கியத்தைப் படிக்கும்போதும், 'உங்களுடைய வாத்தியம் — உங்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட வாத்தியம் — வாசிக்க நீங்கள் இல்லாமல் தூசி படிந்து போய் மூலையில் கிடக்கிறது என்ற இறுதி வாக்கியத்தைப் படிக்கும்போதும் அவனை மெய்சிலிர்க்கச் செய்தது. இதே வாக்கியங்களைப் படிக்கும்போது குமரப்பன் என்ன உணர்ச்சிகளை அடைந்திருப்பான் என்றெண்ணிப் பார்க்க முயன்றான் சத்தியமூர்த்தி. கடிதத்தைப் பிரித்துப் பிடித்துக் கொண்டிருந்த கைவிரலில் பழைய ஞாபகங்களின் சுகத்துக்கு ஒரு சாட்சியாக அந்த நீலக்கல் மோதிரம் மின்னிக் கொண்டிருந்தது. பூக்களும், ஊதுவத்தியும் மணந்து கொண்டிருந்த ஒரு சிறிய வீட்டின் கூடத்தில் மனோரம்மியமான சாயங்கால வேளை ஒன்றில் மெல்லிய

இந்தக் காதல் என்கிற உணர்ச்சி இருக்கிறதே: அதை ஓர் ஆச்சரியமாகத் தான் கருத வேண்டியிருக்கிறது. ஏனென்றால் அது கதையில் வரும்போது உண்மையைப்போல் தோன்றி மயக்குகிறது. உண்மையில் நடக்கும்போதோ கதையைப்போல் தோன்றி மருட்டுகிறது.

பூங்கரம் ஒன்றின் அழகிய விரல்கள் தன்னைக் கைப்பற்றி அந்த மோதிரத்தை அணிவித்த நாள் அவனுக்கு ஞாபகம் வந்தது. மோகினியின் ஞாபகத்தில் அவன் மனம் நெகிழ்ந்தது. அப்போது சத்தியமூர்த்தி இருந்த நிலையைப் பார்த்து அவன் தன்னிடம் நிறையப் பேச விரும்புகிறான் என்று குமரப்பன் குறிப்பாகப் புரிந்து கொண்டு அவனை ஏரிக் கரைக்கு அழைத்துச் சென்றான். கரையில் கல்லூரி மாணவர்கள் கூட்டம் கூட்டமாக அமர்ந்து பேசியவண்ணமிருக்கவே, நண்பனோடு மனம் விட்டு உரையாடுவதற்கேற்ற தனிமைக்காக ஒரு படகுக்கு வாடகை பேசி முன் பணம் கொடுத்து நண்பனையும் அமரச் செய்த பின் தானே துடுப்புக்களை வலித்து ஏரியின் நடுப் பகுதிக்குச் செலுத்திக் கொண்டு போனான் குமரப்பன். வெள்ளையும் சிவப்புமாக நீர்ப் பூக்கள் மலர்ந்த ஏரி நீர்ப் பரப்பினிடையே மோகினியைப் பற்றிய நினைவுகள் பூக்கும் மன நிலையோடு பிரமை பிடித்தாற் போல் படகில் அமர்ந்திருந்தான் சத்தியமூர்த்தி. நண்பன் குமரப்பனிடம் தான் எதைப் பேச வேண்டுமென்று நினைத்தானோ,

அதற்குப் பொருத்தமான ஆரம்பத்தைத் தேடிச் சிந்திப்பதுபோலிருந்தான் அவன். இரண்டு கைகளாலும் துடுப்புக்களை வலித்துக் கொண்டிருந்த குமரப்பனே இருந்தாற் போலிருந்து தன் வலது கையைத் துடுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டு சத்தியமூர்த்தியின் கரத்தைப் பிடித்திழுத்து அந்த நீலக்கல் மோதிரத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் குறும்பு நகை புரிந்தான். பின்பு அதே குறும்புச் சிரிப்போடு சத்தியமூர்த்தியை நோக்கிச் சொன்னான்: ''இதை உன் கரத்தில் அணிவித்தவள் இப்போது உன் கையையும் நினைவையும் ஒன்றாக அழகுபடுத்திக் கொண்டிருக்கிறாள். நான் எண்ணுவது சரிதானே?''

சத்தியமூர்த்தி மறுமொழி கூறாமல் புன்னகை பூத்தான்.

''மனிதனுடைய வாழ்க்கையில் நேரிடும் அழகிய இரகசியங்களெல்லாம் அன்பு காரணமாகவே நேரிடுகின்றன என்று சொல்வார்களடா சத்தியம்! நெருங்கிய நண்பனுக்குக் கூடத் தெரியாமல் உன் வாழ்க்கையில் அத்தகைய இரகசியங்கள் நேர்ந்திருக்கின்றன. முன்பொருநாள் சித்திரைப் பொருட்காட்சியில் மோகினியின் நடனத்தைப் பார்த்துவிட்டுத் திரும்பி வையையாற்று மணலில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த போது நீ அவள் மேல் அதிக அநுதாபத்தோடு பேசியதையும் குத்துவிளக்கின் சார்பில் மோகினியைப் பேட்டி காணச் சென்று திரும்பிய பின் நான் அவள் புகைப்படங்களில் சிலவற்றை இணைத்து உனக்கு எழுதியிருந்த கடிதத்துக்கு நீ அதிக ஆர்வத்தோடு நன்றி தெரிவித்துப் பதில் எழுதியிருந்ததையும் இப்போது நினைத்தால் எனக்கு எல்லாமே புரிகிறதடா சத்தியம்!''

''புரிகிறதல்லவா? புரிந்தபின் நீ என்னைப் பற்றி என்னதான் நினைக்கிறாய் என்பதைச் சொல்லேன்!'' என்று அதுவரை பேசாமலிருந்த சத்தியமூர்த்தி நண்பனைக் கேட்டான்.

''அதெப்படி? நீதான் எனக்குச் சொல்வதற்கு நிறைய மீதம் வைத்திருக்கிறாய் சத்தியம்! இரயிலிலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்றபோது மோகினியைத் தடுத்துக் காப்பாற்றியதைப் பற்றி அன்று வையை ஆற்று மணலில் பேசிக் கொண்டிருந்தபோது தெரிவித்தாய்! அன்று உரையாடிக் கொண்டிருந்தபோது நாம் இருவருமே அவளுக்காக மிகவும் அநுதாபப்பட்டுப் பேசிக் கொண்டிருந்தோம். அதற்குப் பின்னால் உங்களுக்குள் எவ்வளவோ நடந்திருக்கிறாற்போலிருக்கிறதே? அவற்றையெல்லாம் இப்போது எனக்குச் சொல்லப் போகிறாய் என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். நீ என்னடாவென்றால் என்னைச் சுலபமாக ஏமாற்றிவிடப் பார்க்கிறாய்'' என்று குமரப்பன் கேட்கவே சத்தியமூர்த்தி தான் மதுரையிலிருந்து மல்லிகைப் பந்தலுக்குப் புறப்படுவதற்கு முன் முதல் முறையாக மோகினியின் வீட்டுக்குச் சென்றது தொடங்கி நண்பனிடம் எதையும் மறைக்காமல் ஒவ்வொன்றாக விவரித்தான். அந்த நினைவுகளை நண்பனோடு பேச வேண்டும் என்று அவனே ஆவலாயிருந்த நிலையில் நண்பனும் விரும்பிக் கேட்கவே உற்சாகமாகவும் நயமாகவும் அதைச் சொல்ல முடிந்தது. மோகினியைப் பற்றி நண்பனிடம் விவரித்துச் சொல்லிக் கொண்டிருந்த அந்த ஒரு மணி நேரமும் அவன் தனி உலகத்தில் இருந்தான். கடைசியாக அவளிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்ட தினத்தன்று அவள் தன் கையில் அந்த மோதிரத்தை அணிவித்து விட்டுத் தான் பதிலுக்கு அணிவித்த மோதிரத்தையும் பெற்றுக் கொண்டு கண்ணீர் மல்கும் விழிகளோடு குங்குமச் சிமிழை எடுத்து வந்து தனக்குத் திலகமிட்டு விடை கொடுத்த சம்பவத்தைக் குமரப்பனுக்குச் சொல்லியபோது சத்தியமூர்த்தியின் குரல் தழுதழுத்தது.

''அவள் எனக்கு விடை கொடுக்கும்போது சொல்லிய வார்த்தைகள் இன்னும் என் செவிகளில் இனிமையாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன, குமரப்பன்! 'என்னை மறந்துவிடாதீர்கள். உங்களுடைய ஞாபகத்தில் தங்கி வாழ்வதைக் காட்டிலும் பெரிய பாக்கியம் எனக்கு வேறும் ஒன்றும் இல்லை' என்று கூறி விடை கொடுத்தபோது அவள் கண்களில் தெரிந்த தவிப்பை இன்று நான் வார்த்தைகளால் உனக்குச் சொல்லிவிட முடியாது. நீ இன்று படித்தாயே; இந்தக் கடிதம் நான் இங்கு வந்த பிறகு அவளிடமிருந்து எனக்கு வந்தது. மோகினியின் புகைப்படங்களை நீ எனக்கு அனுப்பியிருந்தாயே அப்போது உன் கடிதத்தில் அவளைப் பற்றிப் புகழ்ந்திருந்தாய். மோகினியின் சிரிப்பில் கலைமகளும் திருமகளும் சேர்ந்து வாசம் செய்வதாக நீ புகழ்ந்திருந்த வாக்கியத்தை நான் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டாடினேன்.''

சத்தியமூர்த்தி இவ்வாறு பேசிக் கொண்டிருந்தபோது குமரப்பன் நகை மலரும் முகத்தோடு அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்து விட்டுச் சிறிது நாழிகை மௌனத்துக்குப் பின் நிதானமாக மறுமொழி கூறினான்:

''இந்தக் காதல் இருக்கிறதே; இதை ஓர் ஆச்சரியமாகக் கருதுவதை விட



வேறு விதமாகக் கருத முடியாது போலிருக்கிறது. ஏனென்றால் அது கதையில் வரும்போது உண்மையைப் போல் மயக்குகிறது. உண்மையில் நடக்கும்போதோ கதையைப் போல் மருட்டுகிறது. ஆனாலும் ஒரு விதத்தில் நீ பெரிய பாக்கியசாலியடா சத்தியம்! உடம்பும் மனமும் அழகாயிருக்கிற கலையரசி ஒருத்தி தன்னுடைய சகலத்தையும் உனக்காக ஆத்ம சமர்ப்பணம் செய்யக் காத்திருக்கிறாள். யாருடைய சதங்கை கட்டிய நளின பாதங்கள் பல்லாயிரக் கணக்கான இரசிகர்களுடைய இதயத்தில் சௌந்தரியக் கனவாக ஆடிக்கொண்டிருக்கின்றனவோ அவளுடைய இதயத்தில் உன் பாதங்கள் நிறுத்தி வைத்து வணங்கப்படுகின்றன. உன்னுடைய பெட்டியில் புத்தகங்களைத் தேடும்போது அந்தக் கடிதம் என் கையில் கிடைத்து அதை நான் படித்த சமயத்திலேயே நீ அடைந்திருக்கும் தூய்மையான காதலை நினைத்து நினைத்துப் பெருமைப்பட்டேன். உன்னிடம் சொன்னால் என்ன நினைத்துக் கொள்வாயோ என்று தயக்கமாக இருந்தது. எவ்வளவு தான் நெருங்கிய நண்பனாக இருந்தாலும் அவனுக்கு அந்தரங்கமாக அனுப்பப்பட்டிருக்கிற ஒரு கடிதத்தை எடுத்துப் படிக்கத் துணிவது குற்றம்தானே? நம்மளவுக்கு நாம் கட்டுப்பாட்டோடு வாழ்ந்தாலும் பிறருடைய இரகசியங்களை அறிந்துகொள்ள முயலும் போது நமது நாணயம் தவறி விடுகிறதே?" என்று குமரப்பன் தனக்குத்தானே வருத்தப்பட்டுக் கொள்வது போல் பேசினான்.

"நாணயக் குறைவான எந்தக் காரியத்தையும் நீ செய்து விட்டதாக நான் நினைக்கவில்லை குமரப்பன்! நீ செய்த காரியம் உன் நண்பனிடம் உனக்கு இருக்கும் உரிமையின் நெருக்கத்தை நிரூபிக்கிறது. அவ்வளவுதான்!" என்று சத்தியமூர்த்தி மனம் விட்டுக் கூறிய பின்பும், "அதெல்லாம் இல்லை! நீ மிகவும் பெருந்தன்மையாக என்னை மன்னிக்கிறாய்! அதற்காக நன்றி. இதில் ஒரு மகிழ்ச்சியும் இருக்கிறது; ஒரு துயரமும் இருக்கிறது. உன் பெட்டியைத் திறந்து நானாகவே இதைத் தெரிந்து கொண்டு உன்னை இப்படித் திகைக்கச் செய்வதற்காகத் துயரப் படுகிறேன். நான் எதைத் தெரிந்து கொண்டேனோ அதனால் என் நண்பன் மகா பாக்கியசாலி என்றறிந்ததனால் மகிழ்கிறேன்" என்றான் குமரப்பன். இருட்டிய பின்பும் சிறிது நேரம் ஏரிக்குள் படகிலேயே சுற்றிக் கொண்டிருந்து விட்டு நண்பர்கள் கரையேறினர். அறைக்குப் போய்த் தாவரஇயல் விரிவுரையாளர் சுந்தரேசனையும் அழைத்துக் கொண்டு உணவு விடுதிக்குப் போகலாம் என்று அவர்கள் புறப்பட்டிருந்தனர். ஆனால் எதிர்பாராத விதமாகச் சுந்தரேசனே அறையைப் பூட்டிக் கொண்டு எதிரே வந்து சேர்ந்து விட்டார். மூவரும் சேர்ந்தே போய் உணவு விடுதியில் இரவுஉணவை முடித்துக் கொண்டு திரும்பினார்கள்.

மல்லிகைப் பந்தலுக்குக் குமரப்பன் வந்து சேர்ந்த பின்பு ஒவ்வொரு நாளும் கல்லூரிப் பாட வேளைக்கு அப்பாலும் சத்தியமூர்த்தியின் நேரம் உற்சாகமாகக் கழிந்து கொண்டிருந்தது. ஒரு ஞாயிற்றுக்கிழமை விடுமுறையில் நண்பர்கள் மூவரும் மல்லிகைப் பந்தலுக்குப் பக்கத்தில் இருந்த பயிலாடும் பாறை தேயிலை எஸ்டேட்டையும் அருவியையும் பார்க்கப் போயிருந்தார்கள். இன்னொரு ஞாயிற்றுக் கிழமை ஆரஞ்சுப் பழம், வால்பேரிக்காய், திராட்சைக் கொடி போன்ற கனி வகைகள் விளையும் பெரிய பழத் தோட்டம் ஒன்றிற்கு உல்லாசப் பயணம் போய் வந்தார்கள். மல்லிகைப் பந்தல் மலைப் பகுதியில் அங்கும் இங்குமாக இருந்த அழகிய இடங்களை ஒவ்வொன்றாகப் பார்க்கும் வாய்ப்பு ஞாயிற்றுக்கிழமைகளில் தவறாமல் அவர்களுக்குக் கிடைத்தது. அடுத்த மாதம் முதல் தேதி பிறந்ததும் ஒன்றுமே விளக்கமாகச் சொல்லாமல், "இந்தா, இதை வைத்துக் கொள்" என்று குமரப்பன் பதினாறு ரூபாய்க்கான நோட்டுக்களை எண்ணிச் சத்தியமூர்த்தியிடம் நீட்டினான். சத்தியமூர்த்திக்கு நண்பனின் செய்கை ஒன்றும் புரியவில்லை.

"எதற்காக இந்த ரூபாயை என்னிடம் கொடுக்கிறாய் குமரப்பன்? நீ செய்வது உனக்கே நன்றாக இருக்கிறதா?" என்று நண்பனைக் கோபித்துக் கொண்டான் அவன். நண்பனோ தன் செய்கையில் பிடிவாதமாக இருந்தான்.

"சொன்னால் கேள் சத்தியம்! 'பயிர் ஊடாடா நட்பில் பொருள் ஊடாடக் கெடும்' என்று பழமொழியே இருக்கிறது! இந்தப் பதினாறு ரூபாயை அறை வாடகையின் மொத்தத்தில் என் பங்காக எடுத்துக் கொள். என் கையில் இருக்கிற வரை நானும் செலவழித்துத் தான் ஆக வேண்டும். நட்பு வேறு. பொருட் செலவு வேறு...."

"நீயும் நானும் அப்படி எதிலும் வேறு வேறாகப் பழகவில்லையே குமரப்பன்?"

குமரப்பன் பதிலே சொல்லாமல் தன் கையில் இருந்த ரூபாய் நோட்டுக்களைச் சத்தியமூர்த்தியின் சட்டைப் பையில் திணித்து விட்டுச் சிரித்தான். அதற்கடுத்த வாரம் ஒரு விடுமுறை நாளில் பெற்றோரைப் பார்ப்பதற்காகச் சத்தியமூர்த்தி மதுரைக்குப் போய் விட்

டுத் திரும்பினான். அவன் போயிருந்த ஒரே ஒரு நாளில் எப்படியோ சிறிதுநேரம் மீதப்படுத்திக் கொண்டு மோகினியைச் சந்திக்கும் ஆவலோடு அவள் வீட்டுக்குச் சென்றிருந்தான். மோகினியும் அவள் தாயும் ஏதோ நாட்டியத்துக்காக வெளியூர் போயிருந்ததனால் அவன் ஏமாற்றத்தோடு திரும்ப வேண்டியதாயிற்று.

மல்லிகைப் பந்தல் கல்லூரியில் மாணவர் யூனியன்களின் காரியதரிசிகளுக்கான தேர்தலும் முடிந்து மாணவர்களின் மொழிவாரி மன்றங்களுக்காக இலக்கியத் தொடக்க விழாக்களும் ஒவ்வொன்றாக நிகழலாயின. தமிழ் மன்றத் தொடக்க விழாவுக்கு நவநீத கவியை அழைப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தான் சத்தியமூர்த்தி. மாணவர் மன்றத் தலைவி என்ற முறையில் பாரதியும் நவநீத கவியை அழைப்பதற்கு இணங்கினாள். ''சென்னையிலிருந்து நவநீத கவி — வந்து போவதற்கு — நூற்றைம்பது ரூபாய்க்கு மேல் பயணச் செலவு ஆகுமே? பக்கத்து ஊர்களிலிருந்து யாரையாவது அழைத்துச் சிக்கனமாக நடத்தி விட்டால், என்ன? கல்லூரிகளில் இந்த விழா மிழா எல்லாம் சும்மா ஒரு 'ஃபார்மாலிடி' தான் மிஸ்டர் சத்தியமூர்த்தி! இதுக்காகவே நேரத்தை வீணாக்கக் கூடாது. எல்லாம் போகப் போக நீங்களே தெரிஞ்சுக்குவீங்க....'' என்று முதல்வரும், காசிலிங்கனாரும் நவநீத கவியை அழைப்பது பற்றி அசிரத்தையாகப் பேசினார்கள். இந்த அசிரத்தையைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் நவநீத கவியையே அழைத்துத் தமிழ் மன்றத் தொடக்க விழாவை நிகழ்த்தி மாணவர்களிடம் நல்ல பெயர் வாங்கி விட்டான் சத்தியமூர்த்தி. 'தொடக்க விழாவன்று நவநீத கவி பேசிய சில கருத்துக்கள் அதிக முற்போக்காகவும் — ஏதோ ஓர் அரசியல் கட்சிச் சார்புடையன போலவும் தோன்றின' என்று முதல்வரும் காசிலிங்கனாரும் வீண் புரளியைக் கிளப்பி விட்டு மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். அந்தப் புரளிக்காகச் சத்தியமூர்த்தி ஒரு சிறிதும் அஞ்சவில்லை. நாட்கள் வேகமாக ஓடிக் கொண்டிருந்தன. கல்லூரியில் காலாண்டுத் தேர்வுக்குத் தேதிகளும் குறித்து மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சுற்றறிக்கை வந்து விட்டது. விடுதிகளில் பரீட்சைக்குப் படிப்பதற்காகக் கண்காணிப்பு அதிகமாயிற்று.

சத்தியமூர்த்தியின் அறை இருந்த மாடிக்குக் கீழே ராயல் பேக்கரி ரொட்டிக் கிடங்கின் அருகே சிறு கடை இருந்த இடம் ஒன்று காலியாகி 'டு லெட்' என்ற போர்டு தொங்குவதை ஒரு நாள் காலையில் சத்தியமூர்த்தியும் குமரப்பனும் தற்செயலாகக் காண நேர்ந்தது. அப்போது குமரப்பன் ஒரு நோக்கமும் இல்லாமல் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆவல் ஒன்றை மட்டுமே காரணமாகக் கொண்டு சும்மா விசாரிப்பவன் போல் சத்தியமூர்த்தியிடம் அந்த இடம் யாருக்குச் சொந்தமானது — அதற்கு என்ன வாடகை கேட்பார்கள் என்றெல்லாம் விசாரித்துத் தெரிந்து கொண்டான். நண்பன் எதற்காக அந்த இடத்தைப் பற்றி அவ்வளவு விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டான் என்பதை அன்று மாலை கல்லூரியிலிருந்து திரும்பி வந்தபின்பே சத்தியமூர்த்தியால் விளங்கிக் கொள்ள முடிந்தது.

மாலையில் அவன் கல்லூரியிலிருந்து திரும்பி வந்து அறைக்குப் போவதற்காக மாடிப்படியேறிய போது ரொட்டிக் கடைக்காரர் அவனைக் கூப்பிட்டுச் சொன்னார்: ''சார்! கீழே காலியான கடையை உங்க சிநேகிதருக்கு வாடகை பேசி விட்டிருக்கேன்.''


''சிநேகிதருக்கா? எந்த சிநேகிதர்?'' என்று சத்தியமூர்த்தி திகைத்த போது, ''அதோ பாருங்க! அவரே கடையிலே போர்டு மாட்டிக்கிட்டிருக்காரு'' என்று கடையையே சுட்டிக் காண்பித்தார் ரொட்டிக் கடைக்காரர். அப்போது தான் புதுவர்ணம் பூசப்பட்டு மின்னும், 'குமரப்பன் ஆர்ட்ஸ்' என்ற விளம்பரப் பலகையை அந்தக் கடையின் முகப்பில் மாட்டி ஆணி அடித்துக் கொண்டிருந்தான் குமரப்பன். (தொடரும்)

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்


வேறெந்த டயரையும்விட நீடித்து உழைக்கிறது. இதோ அதன் காரணங்கள்—



பாதுகாப்புக்கெனவே பிரத்தியேகமாகத் தொழில் திறனுடன் டிசைன் செய்யப்பட்ட டிரெடில் ஆயிரக்கணக்கான, வழுக்குவதைத் தடுக்கக் கூடிய கோணங்கள், வண்டியை ஓட்டத் தொடங்கும்போதும், நிறுத்தும்போதும், திருப்பங்களிலும் வழுக்குவதிலிருந்து தாமாகவே பாதுகாப்பளிக்கின்றன. வழுக்குவது குறைதல் என்பதன் பொருள் நீடித்த உழைப்பாகும்.



எளிதில் தேய்வடையாத டிரெட் ரப்பர் கலவை, இந்திய ரஸ்தாக்கள் மற்றும் சீதோஷ்ண நிலைகளுக்கு ஏற்ப அலாதியாகச் சேர்க்கப்பட்டதாகும். மேலும் பாதுகாப்புக்கென வலுவாக்கப்பட்டுள்ள, பசை தோய்க்கப்பட்ட கார்டு பாடி உங்களுக்கு ரஸ்தா அபாயங்களிலிருந்து நிச்சயமான பாதுகாப்பளிக்கிறது.



பயர்ஸ்டோன் – தரத்துக்கும் உழைப்புக்கும் உங்கள் சின்னம்

சுவிட்ஸர்லாந்து போதிக்கும் படிப்பினை

கருமுத்து தியாகராஜ செட்டியார்



[மதுரை மாவட்டத்தின் தொழில் பிரமுகர்கள் வரிசையில் முன்னணியில் நிற்பவர் திரு கருமுத்து தியாகராஜ செட்டியார். பஞ்சாலைத் தொழிலில் ஈடுபாடு அதிகம் என்றாலும் இதர பல தொழில்களில் நெருங்கிய சம்பந்தமுள்ளவர். சமூகப் பணியிலும் ஆழ்ந்த அக்கறையுள்ளவர். கல்வித் துறையில் மக்கள் அறிவை எவ்விதத்திலும் உயர்த்த வேண்டும் என்பதில் நம்பிக்கையுடன் உழைப்பவர். மொழிப் பிரச்னை பற்றி சுவிட்ஸர்லாந்தின் உதாரணத்தைக் காட்டித் தெளிவான கருத்தைக் கூறுகிறார்.]

பாரபட்சம் ஏன்?

மக்கள் சபையிலும் ஹிந்தி மொழி நாட்டின் ஆட்சி மொழியாக உயர்த்தப்பட்டதனால்தான் இப்போது தோன்றியுள்ள மொழிப் பிரச்னை விவாதமே எழுந்துள்ளது. ஒரு பிராந்திய மொழியை — அது மக்களில் 36 சத விகிதத்தினரால் பேசப்படுகிறது என்றாலும் — நாடு முழுவதற்கும் ஆதிக்கம் செலுத்தும் ஆட்சி மொழியாகச் செய்வது பாரபட்சமே ஆகும். இதற்குத் தோன்றியுள்ள எதிர்ப்பு நியாயமானதே. இதை எவரும் மறுக்க முடியாது.

ஹிந்தி மொழியை ஆதரிப்பதற்குக் கூறப்படும் காரணங்கள் முக்கியமாக இரண்டு—பெரும்பான்மையான மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர்; நாட்டின் ஒற்றுமைக்கும் ஐக்கியத்துக்கும் இம் மொழி அவசியம். இது இரண்டுமே ஒப்புக்கொள்ளக்கூடிய காரணங்கள் அல்ல. ஹிந்தி மொழிக் கொள்கை மூலம் ஐக்கியம் ஏற்கனவே சீரழிந்துவிட்டது. நாடு முழுவதிலும் பிளவுகள் தோன்றிவிட்டன.

ஜெர்மனியின் தோல்வி...



ஐரோப்பாவில் செக்கோஸ்லோவேகியா மீது ஜெர்மானிய மொழியைத் திணிக்க வேண்டும் என்று ஜெர்மனி மிகுந்த பிரயாசைப்பட்டுத் தோல்வியே அடைந்தது. இதை நமக்கு ஓர் எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும். ஒரு மருந்து நோயாளிக்கு ஒத்துக்கொள்ளவில்லை; அதனால் வியாதி அதிகமாகிறது என்றால் விவேகமுள்ள வைத்தியர் உடனே தாம் செய்த தவற்றை உணர்ந்து அந்த மருந்தை மாற்றி வேறு சிகிச்சை மேற்கொள்ளுவார். இல்லாவிட்டால் நோயாளி இறந்துபட்டொழிவான். நமது மொழி விவகாரமும் இத்தன்மையதே. நமது அமைச்சர்கள் அதிகாரம் படைத்தவர்கள். தங்கள் மொழியைத் தவிர இதர மொழிகளைப் பற்றிக் கௌரவ புத்தி உள்ளவர்கள். அப்படிப்பட்டவர்கள் ராஜ்யங்களுக்கிடையே சமயப் பற்றுக்குச் சமமான மொழிப் பற்று விஷயத்தில் நியாயமானதும் ராஜ தந்திரம் நிறைந்ததுமான மனப்பான்மையுடன் நடந்து கொண்டு சுமுகமான சூழ்நிலையையும் நட்பையும் வளர்க்கப் பாடுபட வேண்டும்.

சுவிட்ஸர்லாந்து வழிகாட்டுகிறது...

இவ்வகையில் சுவிட்ஸர்லாந்து தேசத்தின் அனுபவத்திலிருந்து நாம் முக்கியமான ஒரு படிப்பினையைக் கற்க வேண்டும். 42 லட்சம் மக்கள் உள்ள அந்த நாட்டில் மூன்று மொழிகள் சம அந்தஸ்து கொண்ட அரசாங்க மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. 73 சத விகிதத்தினர் ஜெர்மன் மொழி பேசுபவர்களாக இருந்தும், இம்மொழி சிறுபான்மையர்களாக உள்ள பிரஞ்சு, இத்தாலிய மொழி பேசுவோர் மீது திணிக்கப்படவில்லை. அல்லது ஜெர்மனி, பிரஞ்சு இவ்விரு மொழிகளையும் பேசுவோரின் எண்ணிக்கை 94 சதவீதமாக இருந்தும் இவ்விரு மொழிகளும் அரசாங்க மொழியாகி மீதமுள்ள 6 சத விகிதத்தினரான இத்தாலி மொழி பேசுவோர்மீது திணிக்கப்படவில்லை. இதுதான் நியாயம், நேர்மை, ராஜதந்திரம் கூட. சிறுபான்மையினரின் உணர்ச்சிகளுக்குக் கௌரவம் அளிப்பதன் மூலம் வெவ்வேறு பகுதியினரும் ஒன்றாக இணைக்கப்பட்டுச் சுக வாழ்வு வாழ்கின்றனர். அமைதிக்கும் சுதந்திரத்துக்கும் சமாதானத்

துக்கும் நிலைக்களமாக அந்நாடு சொலிக்கிறது. இம்மாதிரி பல மொழிகள் பேசப்படும் நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் அரசாங்க மொழிகளாக உள்ள நாடுகள், கனடா, பெல்ஜியம், தென்னாப்பிரிக்கா போன்றவை. சோவியத் ருஷ்யா கூட ஆறு மொழிகளை அங்கீகரித்திருக்கிறது.


பிரச்னை தீர வழி

மொழிப் பிரச்னைக்குத் தீர்வு காண ஒரே வழி ஒவ்வொரு பிராந்திய மொழியையும் அந்தந்த ராஜ்யத்தின் அரசாங்க மொழியாக ஏற்றுக் கொள்வதுதான். 42 லட்சம் மக்கள் உள்ள ஸ்விட்ஸர்லாந்தில் மூன்று மொழிகள் இருக்கும்போது 44 கோடி மக்கள் உள்ள நமது நாட்டுக்கு 14 மொழிகள் அதிகம் என்று சொல்ல முடியாது. சில சமயங்களில் அசௌகரியங்கள் ஏற்படக் கூடும் என்பது உண்மையே. ஆனால் எல்லாருக்கும் சம உரிமை அளிக்கப்பட வேண்டும் என்ற ஜனநாயக நாட்டில் இம்மாதிரி நிலைமையைச் சமாளித்துத்தானே ஆக வேண்டும்? ஒரு மொழியை ஏற்றுக் கொள்வதால் ஏற்படக் கூடிய எல்லா நலன்களும், அதனின்று எழக்கூடிய மனக்கசப்பாலும், ஜனநாயக உரிமைகள் மிதிபட்டு நசுக்கப்படுவதால் ஏற்படும் ஆசாபங்கத்தாலும் அழிந்து போய் மறைந்துவிடும்.



எந்த அன்னிய மொழியும் நாட்டின் பாமர மக்களைக் கவராது. தென்னிந்தியாவில் உள்ள திராவிட மக்களுக்கு ஆங்கிலம் எப்படியோ அப்படித்தான் ஹிந்தியும் அந்நிய மொழி. ஆகவே ஹிந்தி பாரதத்தின் அரசாங்க மொழியாக இருக்க முடியாது. திறமையைக் கவனித்தால்கூட இச்சிறப்புக்கு இம்மொழி தகுதி உடையதல்ல. சொல் வளம், குறைவு. இலக்கண நிச்சயமற்றது; இலக்கிய ரசனைகளும் குறைவானது. இத்தகைய ஒரு மொழியை எதற்காக நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்? வளம் மிகுந்த ஆங்கில மொழியே விஞ்ஞானத்திலும் தத்துவத்திலும், நுட்பக் கலை, பொறி இயல்களிலும் அந்நியச் சொற்களைக் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. இதைக் காட்டிலும் மிகக் குறைவான வளமுள்ள இந்தி மொழி நமது நீதி மன்றங்களிலும், இதர நிர்வாக விவகாரங்களிலும், அகில இந்திய மொழியாக எப்படிப் பணியாற்ற முடியும்? ஒருகாலும் முடியாது.

நம்முடைய பதினான்கு மொழிகளும் முழு வளர்ச்சியைத் தடையின்றி அடைவதற்கு எல்லா வாய்ப்புக்களும் அளிக்க வேண்டும். எந்த மொழி அதிக தகுதியுள்ளதாக இருக்கிறதோ அது அரசாங்கமொழியாக ஆகட்டும். அப்படிச் செய்தால், எந்த ஒரு மொழிக்கும் பாரபட்சம் காட்டினதாக ஆகாது.



இப்போது ஹிந்தி ஆட்சி மொழியாகப் பிரகடனம் செய்யப்பட்டு விட்டதால், அதன் வளர்ச்சிக்கும் விஸ்தரிப்புக்கும் அரசாங்கம் பெருவாரியாகப் பணம் செலவழிக்கும். இதனால் ஒரு மொழி மட்டும் சர்க்காரின் பாதுகாப்புடன் வளரும். மற்ற மொழிகள் எல்லாம் புறக்கணிக்கப்பட்டு நலிந்து போகும். இது நேர்மையற்றது. ஜனநாயக நாட்டில் விரும்பத்தக்கதாகாது.

ஹிந்தி எதற்கு?

நாடு முழுவதற்கும் ஒரு பொது மொழி அவசியம்தான். இதில் சந்தேகமில்லை. இதற்கு நாம் ஆங்கிலத்தை ஏற்கனவே வைத்துக்கொண்டிருக்கிறோம். இது நம்முடைய ஒற்றுமையை வளர்த்ததுடன் சர்வதேசத் தொடர்புகளையும் உண்டாக்கிக் கொடுத்திருக்கிறது. தவிரவும், விஞ்ஞானம், ராஜதந்திரம், பண்பாடு முதலிய துறைகளில் மிகவும் பயன்படும் ஆங்கிலம் உலக மொழிகளுள் முக்கியமான ஒன்று. ஆகவே எல்லா ராஜ்யங்களிலும் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக வைத்துக்கொள்வது பொருத்தமே யாகும். ஒவ்வொரு பிராந்திய மொழியும் முழு வளர்ச்சி பெற்றுப் பொலிந்து, ராஜ்யங்களுக்கிடையே தொடர்புக்கு ஆங்கிலம் செயல் படுமேயானால், ஹிந்தி மொழிக்கு ஹிந்தி பேசாத பிரதேசங்களில் இடமே இருக்க வேண்டியதில்லை.

ஐக்கியம் குலையும்

விவேகமும், ராஜ தந்திரமும் எல்லாப் பிராந்திய மொழிகளுக்கும் சம அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றன. மாறாக, ஹிந்தியைத் திணித்தால், மிகுந்த பிரயாசைப்பட்டு, தியாகங்கள் புரிந்து சம்பாதித்த ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் நாம் நிச்சயமாக இழந்து விடுவோம்.

பொறுப்புணர்ச்சி மிக்க நம் தலைவர்கள் இந்நிலைமையின் அபாயத்தை உணர்ந்து நிலைமை மோசமாவதற்கு முன்னமே தங்கள் நடவடிக்கைகளை வாபஸ் பெற்று மாற்றிக் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்போமாக.


ஐடெக்ஸ்
கண் மை
அரவிந்த் பிந்தி
குங்கும சாந்து
EYETEX
அரவிந்த் லாபரட்டரீஸ்
தபால் பெட்டி 1415 - மதராஸ்-71

G. P.


நீங்கள் வாங்கும்பொழுது நல்லெண்ணை
அது சுத்தமானது என்று உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.
அது கேஎம்பி தான் என்று நிச்சயப் படுத்துங்கள்
கேஎம்பி நல்லெண்ணை நூறுக்கு நூறு சுத்தமானதும் லபாரட்டரியில் பரீட்ஷை செய்ததுமாகும். தேர்ந்தெடுத்த வெளுத்த எள்ளை நவீன இயந்திரங்களில் அநுபவசாலிகளின் மேற்பார்வையில் அரைத்து செய்தது.
முக்கிய ஏஜெண்ட்:
காஞூராம் மஹாதேவ் பிரஸாத்
1, மதன மோஹன் பர்மன் ஸ்ட்ரீட்,
கல்கத்தா-7
KMP
BRAND
Pure and Hygienic
TIL OIL


கலியாண கால விசேஷ விற்பனை!
பெனாரஸ், காஞ்சீபுரம் பட்டுச் சேலை, சோளி, பாவாடைகளுக்கு வருகை தாருங்கள்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
(போன்: 34614)
53, கிடங்குத் தெரு, (கொத்தவால் சாவடி சமீபம்) சென்னை-1.

ஸேப்டி பின்களில்

யூனிடிக்கு பதில்

வேறொன்றுமேயில்லை



- ★ நேர்த்தியான தரம்
- ★ திருத்தமாக அமைக்கப்பட்ட தலைபாகம்
- ★ கூரான முனை
- ★ கனமான நிக்கல் பூச்சு
- ★ உன்னத தயாரிப்பு

'யூனிடி'யே ஜார்ஜ் குட்மேன் லிமிடெட்டின் ரிஜிஸ்டர்டு டிரேடு மார்க்காகும்;

ரிஜிஸ்டர் செய்யப்பட்ட உபயோகிப்பாளர் :

கெஸ்ட், கீன், வில்லியம்ஸ், லிட்.,

கல்கத்தா பம்பாய் மதராஸ் புது டில்லி

GKW 5187A

அநாதை இதயம்

ஆர். குமார்



இயற்கை போர்த்திய இரவுப் போர்வையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தது மேலத் திருப்பதி நகரம்.

....ஒலிபெருக்கி தன் பெரிய குரலில் சுப்ரபாதத்தை ஒலிபரப்ப ஆரம்பித்ததும்...

உறக்கம் கலைந்து இலேசாகச் சிணுங்க ஆரம்பித்தது.

பஸ் ஸ்டாண்டின் படிக்கட்டு ஒன்றில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அந்தச் சிறுவன் ரவி, யாரோ முதுகில் தட்டியதைப் போல், சட்டென்று எழுந்து அமர்ந்தான்.

உருவம் பதினாறு வயதைக் காட்டியபோதிலும், குழந்தைத்தனம் மறையாத நீண்ட பெரிய கண்கள்.... சதைப் பிடிப்பான கன்னங்கள்.... ஆயிரம் தடவை ஒதுக்கி விட்டாலும்கூட நெற்றியோடு கொஞ்சும் அடர்ந்த முடி.... முகத்தில் பட்டுப் போல் படர ஆரம்பித்திருக்கும் இளம் மீசை. சற்றே பூசினாற் போன்ற அங்க அமைப்புக்கள். கோவில் இருக்கும் திசையில் திரும்பி அமர்ந்து கண்களை மூடிக் கும்பிட்டான்.

எழுந்து சென்று.... ஆபீஸ் அறையில் உறங்கிக்கொண்டிருக்கும் இளைஞரை. "சார், சார்!" என்று ஜன்னல் வழியாகக் கைவிட்டு உலுக்கி எழுப்பினான்.

"அட சட்! சனியனே! தூங்க விடாமல் என்னடா இது தொல்லை?" என்று சீறினார் அவர்.

அவரைப் பற்றி அவனுக்குத் தெரியும்; விழித்துப் போட்டு விடுவதைப் போலத்தான் சீறுவார். ஆனால் இளகிய மனசு. அன்புக்குப் பஞ்சமில்லாத நல்லவர்.

முதல் நாள் இரவுதான் அவர் மேலத் திருப்பதிக்கு வந்திருந்தார். கறுப்புப் பாண்டும், டெரிலின் சட்டையும், ஸ்மார்ட்டாக அவர் பஸ்ஸை விட்டு இறங்கியதைப் பார்த்ததுமே அவரை ரவிக்கு மிகவும் பிடித்து விட்டது.

வாடகைக்கு அறை எடுப்பதிலிருந்து, அவரது ஸூட்கேஸைச் சுமந்து சென்று காட்டேஜைக் காட்டுவது வரை அனைத்துக்குமே உதவியாக இருந்தான் அவன்.

அவனும் திருப்பதிக்கு வந்து பல பேரைப் பார்த்திருக்கிறான். ஆனால் இது போன்ற அழகுள்ளவரைக் கண்டதே யில்லை.

"சீக்கிரம் புறப்படுங்கள் சார். ஸுப்ர பாதம் முடிந்து விட்டது" என்றவாறு கட்டிலிலிருந்த அவரது போர்வையை எடுத்து உதறி மடிக்கலானான்.

அவரும் சோம்பல் முறித்தவாறு, பெட்டியைத் திறந்து பற்பசையையும் பிரஷையும், சோப்பையும் எடுத்து வெளியே வைத்தார்.

"நேற்றையிலிருந்தே பார்க்கிறேன் உன்னை மறந்து என்னையே பார்க்கிறாயே, அது ஏன் ரவி?" என்றார் செந்தில்நாதர்.

"நீங்கள்...." கடபடவென்றுச் சொல்லிவிட்டான் ரவி. "ரொம்பவும் அழகாயிருக்கிறீர்கள் சார்!"

"அப்படியா?" குறும்பாகச் சிரித்தார் அவர். "அப்படியானால் என்னையே கலியாணம் செய்து கொண்டு விடேன்."

ரசித்துச் சிரித்தான் ரவி. "நிஜமாகவே சொல்லுகிறேன் ஸார்! நான் மட்டும் ஒரு பெண்ணாகப் பிறந்திருந்தால் உங்களையே கலியாணம் பண்ணிக் கொண்டிருப்பேன்."

"என்னிடம் சொன்னாயே, இப்படியே எந்தப் பெண்ணிடமாவது சொல்லி வைக்காதே. உதை விழும்."

"ஏன் அதில் என்ன ஸார் தப்பு?" அவன் சொன்னான்: "நேற்றுக்கூடச் சினிமா நடிகை யமுனாவைப் பார்த்து என்ன அழகு என்று ஆச்சரியப்பட்டேன்."

அந்த வாலிபர் செந்தில் வியப்புடன் திரும்பிப் பார்த்தார். "அப்புறம்?"

"என்னை அருகில் அழைத்து 'உனக்கு வயதென்ன?' என்று கேட்டாங்க. பதினாறு என்றேன். 'சின்னப் பையன் நீ! துருதுருவென்றிருக்கிறாயே?' என்று பிரியத்துடன் கூறிக் கன்னத்தைத் தட்டிக் கொடுத்தாங்க."

"'உங்களை அக்காவென்று அழைக்க ஆசையாக இருக்கிறது' என்று நான் சொன்னதும் எப்படி மனம் உருகிப் போய் விட்டாங்க, தெரியுமா சார்!"

"பரவாயில்லையே! பெரிய சினிமா நடிகை யமுனாவையே உன் அக்காவாக ஆக்கிக் கொண்டு விட்டாயா? அப்படியானால் என்னை என்னவென்று கூப்பிட ஆசையாம் உனக்கு?"

வெட்கத்துடன் சிரித்தவாறு வாசலை அடைந்தவன்..."என் அருமை அண்ணாவுக்குச் சூடாகக் காப்பி கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டு ஓடியே விட்டான்.

"**வா**ப்பா! என் அருமைத் தம்பி!"

கேலியாகக் கூப்பிட்டாள் நடிகை யமுனா. ஸ்பூல் கட்டிலில், ஒய்யாரமாகச் சாய்ந்து அமர்ந்திருந்தாள் அவள். இரட்டைப் பின்னல்களில் ஒன்று பூச்சரத்துடன் முன்னால் வந்து விழுந்திருந்தது.

"தம்பி! இங்கே நல்ல பாதாம் பருப்பு கிடைக்குமா?" அல்வா கிளறுவதற்காகத் தவிக்கப் பின்னே கேட்டாள்."

"ஓ, கிடைக்குமே! ஸ்டோரில் கிடைக்கும்."

"வாங்கி வருகிறாயா? ஆனால் அல்வா மட்டும் தரமாட்டேன்" என்று குறும்பாகப் பார்த்தவாறு பணம் எடுத்துத் தந்தாள். "சீக்கிரம் வந்து விடு."

"நீங்கள் பத்து எண்ணுங்கள். அதற்குள் ஓடி வந்து விடுகிறேன்" என்று சவால் விட்டு விட்டு வெளியே ஓடினான் ரவி.

முத்துப் பல் தெரியச் சிரித்தவாறு கையிலிருந்த புத்தகத்தைப் பிரித்துப் படிப்பதில் ஆழ்ந்தாள் அந்தச் சினிமா நடிகை யமுனா.

சிறிது நேரத்துக்குப் பின் "யாரது?" என்று வினவிய யமுனாதேவி, "அட! எட்டு எண்ணி முடிப்பதற்குள் வந்து விட்டாயே?" என்று போலியாக ஆச்சரியப்பட்டாள்.

அந்தக் காட்சியை நினைத்தவாறே சென்ற ரவியின் கண்களில் பட்டது அந்தக் குழந்தை.

சின்னத் தலைக்குப் பின்னால் அழகாக ரிப்பன் கட்டிய போனி டெயில். 'உப்'பென்று ஊதியதால் உப்பி நிற்பது போல, சிலும்பி நிற்கும் பிராக் சட்டையுடன் நின்று கொண்டிருந்த அது. போவோர் வருவோரைத் தன் பெரிய விழிகளால் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. யாராவது மொட்டைத் தலையுடன் அந்தப் பக்கம் வந்தால்...... ''மொத்தை...., மொத்தை....'' என்று தன் பிஞ்சு விரல்களால் சுட்டிக் காட்டிச் சிரித்தது.

அந்தக் குழந்தையை அவனுக்குத் தெரியும். அவன்தானே அவர்களை காட்டேஜுக்கு அழைத்துப் போனவன். ''பாப்பா!'' என்று கொஞ்சியவாறு மண்டியிட்டு அமர்ந்தான். ''என்ன பாப்பா! தனியா வந்து நிக்கிறே? அப்பா அம்மா வெல்லாம் எங்கே?''

''அப்பா எங்கேயோ வெளியே போனார். அம்மா தூங்கிறா. நான் மத்தும் கதவைத் தொறந்து ஓடி வந்துட்டேன்.''

''ஏன்?'' என்றான் ஆச்சரியத்துடன்.

''சாமி பார்க்க!'' என்ற குழந்தை ''ஏய்! சாமி எங்கேயிருக்கார்?'' என்று கேட்டது.

''அவர் இருக்கிற இடம் எனக்குத் தெரியும். கூட்டிக்கிட்டுப் போறேன். வர்றியா?''

''ஓ. வரனே!'' என்றவள் ''உப்பு மூட்டை தூக்கணும்'' என்றாள்.

''உப்பு மூட்டையா? அப்படியென்றால் ?''

''ஐய இவ்வளவு பெரியவனாகியும் உப்பு மூட்டைன்னு தெரியல்லியே!'' என்று கை தட்டிச் சிரித்தாள். ''உப்பு மூட்டைன்னு உன் முதுகு இல்லே முதுகு. அது மேலே நான் ஏறி உக்காந்துப்பேன். நீ தூக்கிட்டு ஓடணும்.''

அவனுக்குச் சிரிப்பு வந்தது. ''சரி, வா!'' குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடினான்.

குழந்தையின் குரல் கேட்டுத் துயில் கலைந்து எழுந்து வந்த அந்த அம்மாளிடம் குழந்தையே புகார் பண்ணிற்று. ''பாரும்மா... நான் சாமி பார்க்கப் போகணும்னேன்..... என்னை ஏமாத்தி வீட்டுக்கே கூட்டிக்கிட்டு வந்துட்டான்.'' உதட்டைப் பல்லால் கடித்து அழகு காட்டியது அது. ''முகத்தைப் பாரு! குரங்கு மூஞ்சி.'' முத்தம் கொடுத்த அவனது இரண்டு கன்னங்களிலும் தன் பிஞ்சுக் கைகளால் பட்டென்று அடித்தது.

குழந்தையின் அம்மா பர்ஸைத் திறப்பதைக் கண்டதும்...''குழந்தை பத்திரம்!'' என்று கூறிவிட்டு, அங்கிருந்து ஓடிவிட்டான்.

உச்சி நேர வெய்யலில், அவனது நிழல், அவன் பாதத்தோடு கொஞ்சி விளையாடியது. பசி வயிற்றைக் கிள்ளியது. விடிந்ததிலிருந்து ஏதாவது வேலை வந்து கொண்டேயிருந்ததால் காப்பி டிபன்கூடச் சாப்பிடவில்லை.

சாப்பிட ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தான். நெட்டியுயிர்த்தவாறு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டிருந்தவனின் கண்களில் எதிர்ச்சாரியில் ஒரு கோடியில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கும் உருவம் பட்டது. அதிர்ந்து போய் முகத்தை மூடிக் கொண்டான். மறுபடியும் நிமிர்ந்து பார்க்கும் துணிவில்லாமல் போகவே எழுந்து ஓடினான்.

அவன் உடல் வெடவெடவென்று நடுங்கிக் கொண்டிருந்தது. கண்ணில் நீர் மின்னியது.

யாரோ பேசிக் கொண்டே போனார்கள். ''யாரோ ஒரு சினிமா நடிகை இன்று ஆயிரத்தைந்நூறுக்குச் சேவை செய்து விட்டாளாம். ஆகவே இன்று முழுதும் தரும தரிசனம்தான்.''

அதைக் கேட்டதும்....

நேரே கோவிலுக்குள்ளே ஓடினான். 'க்யூ' வுடன் சேர்ந்து உள்ளே போய்க் கொண்டிருந்தான். சந்நிதானத்தில்...வைர அலங்காரங்களுடன் தெய்வம் சிரித்துக் கொண்டிருந்தது.

''மனிதர்கள் செய்த பாவம்தான் என்ன? ஏன் அவர்களை இப்படி அலங்கோலப்படுத்துகிறாய்! நீ இதயமற்றவன்.....இரக்கமற்றவன். பொறாமைக்காரன்'' என்று முணுமுணுப்பதைக் கண்டு, அவன் தோத்திரம் செய்வதாக எண்ணி, ''இந்த வயதிலேயே எவ்வளவு பக்தி!'' என்று நெக்குருகிப் போனார்கள் கூட்டத்தில் சிலர்.

மேலத் திருப்பதியிலிருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை. பேசாமல் கீழே போய், இரவிலோ, நாளைக் காலையிலோ திரும்பலாம் என்று எண்ணியவாறு நடந்து பஸ் ஸ்டாண்டை அடைந்தான். அவனைப் பார்த்து ''இந்தப் 'பிக்னிக்' கோஷ்டியை அழைத்துக் கொண்டு போய், பாபவிநாசம், கீழத் திருப்பதி யெல்லாம் சுற்றிக்காட்டி விட்டு, அப்படியே டிரான்ஸ்போர்ட் ஆபீஸில் கொண்டு விட்டு வா! உனக்கு ஏதாகிலும் சில்லறை தருவார்கள்...'' என்றார் அதிகாரி ஒருவர்.

பாபவிநாசம், அலர்மேலு மங்காபுரம், கோவிந்த ராஜர் கோயில் போன்றவற்றைச் சுற்றிக் காட்டி விட்டு, டிரான்ஸ்போர்ட்டை அடைந்து சென்னைக்கு டிக்கெட்டுகளை வாங்கித் தந்ததோடு, ஆறு மணி பஸ்ஸில் அவர்களை ஏற்றி வழியனுப்பி விட்டுத்தான் மேலே திரும்பினான். மத்தியானச் சாப்பாடு முதல், மாலை டிபன் வரை அனைத்தையும் அவர்களே வழங்கியதுமின்றி, போகும்போது தலைக்கு இரண்டிரண்டு ரூபாயும் கொடுத்தார்கள்.

மறுபடியும் அவன் மேல் திருப்பதிக்குப் புறப்படும் போது.... மாலைப் பொழுதை இருட்டு கொஞ்சம் கொஞ்சமாக விழுங்கியது.

பஸ்ஸிலே போய்க் கொண்டிருக்கும்போது, ஒரு ஜோடி கண்கள். தன் முதுகையே துளைப்பது போன்ற பிரமை ஏற்படவே மெல்லத் திரும்பிப் பார்த்தான்.

சில்க் ஜிப்பா அணிந்திருந்த கிருதா மீசைக்காரர் ஒருவர் தம் பார்வையைச் சட்டென்று மாற்றிக் கொண்டது போலத் தெரிந்தது.

அவரை எங்கேயோ பார்த்ததாக நினைவு...

ஆனால் எங்கே....? அதுதான் நினைவு வரவில்லை. பஸ்ஸை விட்டு இறங்கிய ரவி நடந்தான்.

''நில்லுடா, ராஸ்கல்....''

ரவி திடுக்கிட்டு நின்றான்.

''டேய்!'' அந்த மீசைக்காரர் சொன்னார். ''அந்தப் பெட்டியைத் திறந்து காட்டுங்கடா, இந்தத் துரைக்கு!''

பெட்டிகளிலிருந்து பூட்டுகள் அகற்றப் பட்டன. அதில் நிறைய மது புட்டிகள். உடைந்து ஒழுகிய புட்டி ஒன்றிலிருந்து வெளிப்பட்ட மணம் அவன் குடலைக் குமட்டிக்கொண்டிருந்தது.

''ஏண்டா, நாயே! போய்ப் போலீஸிலே சொல்லுவாயாநாயே!'' என்று அந்த மீசைக்காரர் சொன்னதும்தான், பளீரென்று அவனுக்குப் புரிந்தது.

அவர்..... அவரை. அவன் ஏற்கனவே பார்த்திருக்கிறான். சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்பு. இதே போன்ற ஒரு பெட்டியுடனும், பார்க்கவே அருவருப்பாக இருக்கும் ஒரு பெண்ணுடனும் ஒருதரம் திருப்பதிக்கு வந்திருந்தார். அவர்களது திருட்டுத்தன நட்பைப் பற்றிப் போலீஸில் அறிவித்த பிறகுதான் அவன் மனம் நிம்மதியடைந்தது.

அடுத்த சில நிமிடங்களில் அந்தக் கிருதாமீசை ஆளும், அந்தப் பெண்ணும், அவமானப்படுத்தப் பட்டு, கீழத் திருப்பதிக்குக் கொண்டு போகப்பட்டார்கள்.

இப்போது அதே ஆசாமியிடம் தனியே மாட்டிக்கொண்டிருக்கிறான் அவன்.



''போலீஸிலா ரிப்போர்ட் பண்ணிறாய்? என்னையா அவமானப் படுத்திறாய்?'' என்று கூச்சலிட்டவாறு, வெள்ளிப் பூண் போட்ட தமது கைத் தடியால் கண் மண் தெரியாமல் ரவியை அடிக்கலானார் அவர்.

நெற்றி யெல்லாம் ரத்தம் வழிந்தும் விடவில்லை அவர். வலி தாங்காமல் ரவி அலறித் துடித்தான்.

துவண்டு போன ரவி, மரண வேகம் என்று சொல்லுவார்களே, அது போல்.... உடல் வலியையும் பொருட்படுத்தாமல் ஓடுறான். அப்படி ஓடி வந்தவனை ஒரு சிறு கல் தடுக்கியது.

''யாரது?'' இரண்டு அனுதாபம் கலந்த குரல்கள் வெகு தொலைவில் கேட்பதுபோலிருந்தது. ''இவனா?'' ஆண் குரல் ஆச்சரியப்பட்டது. ''கோவிலில் பார்த்தோமே! அவனா?''

''அட, பாவமே!'' பெண் குரல் அன்னையின் பாசத்தோடு ஒலித்தது. ''யாரோ அடித்துப் போட்டிருக்கிறார்கள் போலிருக்கிறதே!''

கடச் கட பிளாஸ்திரி, நெற்றிக் காயத்தைத் தொட்டுச் சுரீரென்று உறுத்த, கனத்துப் போன விழிகளை மெல்லத் திறந்தான் ரவி.

அப்போது அவன் அன்னைப் பாசத்தின் அரவணைப்பிலிருந்தான்.

முகத்துக்கு நேரே தெரியும் அந்தச் சாந்தம் தவழும் முகத்தைப் பார்த்ததும், சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சாவூர் மாவட்டத்தில் காவேரியின் சீற்றத்துக்குப் பலியாகிப் போன அவன் அம்மாவின் நினைவு நெஞ்சில் உருவெடுத்துக் கண்ணிலே கரந்து நின்றது. எழுந்திருக்க முயலுபவனைத் தடுத்து, மீண்டும் மடியில் சாய்த்துக்கொண்டாள்.

அடுத்த இதழில்

எல்லைப்புறத்தில்:

நேபா

✿

சிறப்புக் கட்டுரை:

வீட்டைக் கட்டிப்பார்!

✿

கலை வளர்க்கும் கோயில்கள்:

விவசாயக் கல்லூரி

செப்டம்பர் மாதத்திய நெடுங் கதை

ரவீந்திரநாதன் எழுதும்

வீரதிலகம்

நெற்றியில் ஒட்டிய பிளாஸ்திரியுடன் தள்ளாடியவாறு நடந்து வரும் ரவியைக் கண்டு திடுக்கிட்டார் அதிகாரி. பதறினார், ''நாசமாய்ப் போனவனே! யாரோடு போய் மோதினாய்? எவன் மொல்லாப்பைத் தேடிக் கொண்டாய்! உள்ளே வந்து தொலை!'' என்று அவனைத் தரதரவென்று தம் அறைக்கு அழைத்துச் சென்று, அவனைப் படுக்க வைத்தார்.

''ஸார்! இந்த அநாதை மேலேதான் உங்களுக்கு எவ்வளவு அன்பு?''

வழக்கம் போலச் சீறினார் அவர். ''வாசலிலேயே செத்துத் தொலைந்து வைத்தால், கேட்பவனுக்கு யார் பதில் சொல்வது? அது தவிர உன்னிடம் எனக்காவது.... அன்பாவது.... நீ எப்படித் தொலைந்தால் என்ன?''

சீறினாரே ஒழிய, அவரது நெகிழ்ச்சியையும், உண்மைப் பாசத்தையும் அவரது கண்களில் ததும்பிய கண்ணீரும், குரலில் இருந்த கரகரப்புமே காட்டிக் கொடுத்து விட்டன.

போர்வையைச் சரியாகப் போர்த்தி விட்டுப் போய் விட்டார் அவர்.

''யாரோ வந்திருக்கிறார்கள். இதைக் கொடுக்கச் சொன்னார்கள்'' என்று அதிகாரி தந்த பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்தான் அவன். பாதாம் அல்வா!

மெதுவாக எழுந்தான் அவன். ஆவல் உந்த கம்பிகளைப் பற்றிக் கொண்டு வந்து நின்றான்.

''டிரைவர்! வண்டியை நிறுத்து'' என்ற குரலையடுத்து, புறப்பட்ட வண்டிகள் நின்றன. முக்காடு போட்டவாறு இறங்கி வரும் யாரையோ கண்கொட்டாது பார்த்தான் ரவி.

''என்ன நடந்தது?'' நெற்றிப் பிளாஸ்திரியைப் பார்த்ததும் பதறி விட்டாள் அவள்.

''பாவிப் பயலுங்க...'' என்று ஆரம்பித்து, பிரபல நடிகையுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைத்தது என்று மகிழ்ந்த ஒரு கூலி, பாதி உண்மையும், பாதி கற்பனையுமாகக் கூறி முடித்தான்.

நொடிப் பொழுதுக்குக் கண்ணீர் மல்கி விட்டது அந்த மாதுவுக்கு. ஆதரத்துடன் அவன் நெற்றியில் ஒட்டியிருக்கும் பிளாஸ்திரியை வருடித் தந்தவள், தனது டம்பப் பையிலிருந்து அகப்பட்ட பணத்தை அள்ளி எடுத்து அவன் சட்டைப் பையில் செருகினாள். அவன் தடுக்க முயன்றபோது பாசத்துடன் கூறினாள்: ''இருக்கட்டும், ரவி! நல்ல டாக்டராகப் பார்த்து வைத்தியம் செய்து கொள். அடுத்த தரம் நான் வரும் போது.... 'அக்கா' என்று குதித்துக்கொண்டு ஓடி வரவேண்டும். தெரிந்ததா?'' என்று கூறியவாறு நடந்தாள்.

சிட்டி பஸ் புறப்படத் தயாராகக் காத்திருந்தது. டிக்கெட்டுக்களை வாங்கிக்கொண்டு வந்த கிழவரின் கண்களில், வேலிக் கம்பிகளைப் பற்றியவாறு நிற்கும் ரவி படவே, நெருங்கி வந்து விசாரித்தார். ''குழந்தை, இப்ப வலி எப்படியிருக்கிறது?''

'தேவலை' என்று தலையசைத்தான் ரவி.

பிளாஸ்திரி சரியாக ஒட்டியிருக்கிறதா என்று தொட்டுப் பார்த்து விட்டு, தம் பையிலிருந்து ஒரு விலாசச் சீட்டை எடுத்துத் தந்தார். ''நாளைக்குக் கீழ்த் திருப்பதியில் இந்த விலாசத்துக்கு வா! மருந்து தருகிறேன்'' என்றவர், ''அடேடே! என்னப்பா இது?'' என்று தம் பாதங்களைத் தொட்டு வணங்கும் அவனைப் பிரியத்துடன் நிமிர்த்தி நிறுத்தினார்.

டிரைவருக்கு அடுத்தாற் போல் அமர்ந்திருந்த அந்த வாலிபர் செந்தில்நாதன் அப்போதுதான் ரவியைக் கவனித்தார். ரவியும் பார்த்தான். மந்திராலயம் ஹோட்டலில் அவரைக் கண்டபோது ஏற்பட்டது போலவே இப்போதும் அவன் உடல் சிலிர்த்தது. ஏனெனில், கருமை வாய்ந்த அந்த அடர்ந்த கூந்தலிருந்த இடம் இப்போது, அழகு சிதைந்து அலங்கோலமான முறையில் மொட்டையாகிவிட்டிருந்தது.

இறங்கி வரப் போன அந்தச் செந்தில்நாதன்... டிரைவர் தம் இருப்பிடத்தில் வந்து அமர்ந்து விடவே, வேறு வழியின்றி அங்கிருந்தே கையாட்டி விடைபெற்றார்.

ரவியும் பதிலுக்குக் கையசைத்தான்.

அப்பா, அம்மா, அண்ணன், அக்காள், தங்கை ஆகிய குடும்பத்தோடு ஒரு நாள் வாழ்ந்து, ஒரே நாளில் அவர்களைப் பறி கொடுத்தது போன்ற எண்ணம் அவன் உணர்ச்சியை மென்று தின்றது.

வீடும் சுவரும்

குறும்பன்

வாசலில் ஒரு ஸ்கூட்டர் வந்து நின்றது.

''கமலநாதன் வீடு இதுதானே?'' என்று ஸ்கூட்டரில் இருந்தபடியே கேட்டார் வந்த மனிதர்.

''ஆமாம்!'' வாசலில் நின்று கொண்டிருந்த வாண்டு ஒருவன் பதில் சொன்னான்.

''அவர் இருக்கிறாரா?'' என்று கேட்டார் வந்தவர்.

''இருக்கிறாரே!'' என்று கூறி உள்ளே அழைத்துக் கொண்டு போனான் அந்த வாண்டு வந்தவரை.

கமலநாதன் தமது அறைக்குள்ளே அமர்ந்து பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். ஸ்கூட்டர் சத்தம், வாண்டுவின் பேச்சு ஆகியவற்றைக் கேட்டதும் எழுந்து, வந்தவரை வரவேற்க வெளியே வந்தார்.

''வா, மணவாளா! கிருகப் பிரவேசத்துக்கு நான் அழைப்பு அனுப்பியிருந்தும், நீ வராமல் இருந்துவிட்டாயே! நண்பர்கள் அனைவரும் வந்திருந்தார்கள். நீ வராதது தான் எனக்குப் பெருங்குறையாக இருந்தது'' என்று வரவேற்றார் கமலநாதன்.

''என் மருமாள் கல்யாணமும், உன் கிருகப் பிரவேசமும் ஒரே நாளில் வந்து விட்டதால் வரமுடியாமல் போய் விட்டது. இப்பொழுது லீவு கிடைத்தது. என் மருமாளின் புக்ககமும் இந்த ஊரில் இருப்பதால் அவளைக் கொண்டு வந்து விடும் சாக்கில் முக்கியமாக உன் வீட்டைப் பார்த்துப் போகவே வந்தேன்! வீடு எப்படிக் கட்டியிருக்கிறாய்?'' என்று கேட்டு மணவாளன் அறையைச்சுற்றுமுற்றும் பார்த்தான்.



விசாலமான அறை. தரைக்கு 'மொஸைக்' முதற்கொண்டு போடப்பட்டிருந்தது. ''நல்ல செலவாகியிருக்குமே!'' என்றான்.

''இந்த நாளில் செலவாவதற்குக் கேட்பானேன்? சிமிண்டு இலேசில் கிடைத்துவிடுகிறதா? சிமிண்டுப் பர்மிட் வாங்கி வருவதற்காக எத்தனை தடவை கண்ட்ரோலர் காரியாலயத்துக்குப் போகவேண்டியிருக்கிறது? எத்தனை நேரம் தவம் கிடந்து நிற்கவேண்டியிருக்கிறது? கல், மரம் ஒவ்வொன்றையும் கண்டுப் பார்த்து வாங்கி வந்து கட்டியிருக்கிறேன்! இந்த வீட்டுக்கும் இரண்டு மைல்களுக்கு அப்பால் குடியிருந்த வீட்டுக்கும் காலை-மாலை இரண்டு வேளைகளும் எப்படி நடையாய் நடந்திருப்பேன், தெரியுமா? ஏதோ ஆண்டவன் அருளில் ஒருவிதமாக வீடு கட்டி முடித்தாகிவிட்டது!'' என்றார்.

இதற்குள் காப்பி வந்தது. காப்பி அருந்தி முடித்ததும், ''வா, வீட்டைப் பார்ப்போம்!'' என்று நண்பனைக் அழைத்துக் கொண்டு எழுந்தார் கமலநாதன்.

வரவேற்பு அறைக்குள் நுழைந்ததும் வாளும் தோளுமாக ஐந்து குழந்தைகள் வரவேற்றன. ஒவ்வொன்றின் கையிலும் ஒரு சுத்தியல், இரண்டு பிடி ஆணிகள் இருந்தன. கமலநாதன் எத்தனை ரூபாய் செலவு செய்து அந்த அறைக்கு அலங்காரம் செய்திருந்தாரோ, ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். சுவரில் எங்கு பார்த்தாலும் ஆணிகள் அடித்து வைத்துக் குழந்தைகள் அலங்கோலம் செய்து வைத்திருந்தன. அது மட்டுமா? வழவழவென்றிருந்த அழகான 'மொஸைக்' தரையைக்கூடச் சுத்தியால் தட்டி உடைத்துக் கொண்டிருந்தன.

இந்தக் காட்சியைக் கண்ட மணவாளனுக்கு இரத்தக் கண்ணீர் வந்து விட்டது. கமலநாதனோ குழந்தைகளின் இந்தச் செயலைக் கண்டிக்காமல், மகிழ்ச்சியுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டே நகர்ந்தார்.

''என்ன கமலநாதன்! இப்பொழுதுதானே சொன்னாய், எத்தனையோ சிரமப்பட்டு இந்த வீட்டைக் கட்டினேன் என்று! குழந்தைகள் ஆணியையும் பாணியையும் அடித்துப் புது வீட்டைக் குட்டிச் சுவராக்கிக்கொண்டிருக்கின்றன. நீ யானும் கண்டிக்காமல் பேசாமல் இருக்கிறாயே! — டேய், டேய் நண்டு பேசாம இரடா!'' என்று மணவாளனே கண்டிக்கத் தொடங்கினான்.

''குழந்தைகள்தானே? விளையாடிவிட்டுப் போகட்டுமே!'' என்றார் கமலநாதன்.

''குழந்தைகளா? எத்தனை ரூபாய் செலவழித்து நீ புது வீடு கட்டியிருக்கிறாய்? இப்படி ஆணியை அடித்து வீட்டைக் கெடுத்துக் கொண்டிருக்கின்றனவே! கண்டிக்காமல் விடலாமா?'' என்ற மணவாளன், ''இந்த நாட்களில் இந்த ஆணிகளின் விலையே என்ன இருக்கும் தெரியுமா?'' என்றான்.

கமலநாதன் சிறிதும் அலட்டிக்கொள்ளவில்லை. ''இந்த ஆணிகள் வெளியே என்ன விலை விற்றால் என்ன? எனக்குச் சகாய விலையில், சொல்லப் போனால் அடக்க விலையிலேயே கிடைக்கின்றன. வேண்டிய அளவு வாங்கிப் போட்டிருக்கிறேன். குழந்தைகள் நாளைக்குப் பெரியவர்களாகி விட்டால், இது போன்ற குறும்புகளைச் செய்வார்களா? குழந்தைகளின் இத்தகைய குறும்புகளைக் கண்டு களிக்க எத்தனை ரூபாய் செலவானால் என்ன?'' என்றார். புது வீடு வீணாகிறதே என்ற தாபத்தைக் காட்டிலும் குழந்தைகளின் கும்மாளத்திலே அவர் கண்ட மகிழ்ச்சிதான் மிதப்பதாயிருந்தது.

பூர்வ கதை :

மூன்றாம் பாகம்
ஞானக் களம்

பல்லவப் பேரரசின் மாமன்னனாக முதலாம் பரமேசுவரவர்மன் முடிசூட்டிக் கொண்ட சில மாதங்களுக்குள்ளாகவே, சளுக்கிய மன்னனான விக்கிரமாதித்தன் பழைய வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகப் படையெடுத்து வந்து பல்லவ நாட்டைக் கைப்பற்றிக் கொண்டு உறையூரில் போய்த் தங்கி யிருக்கிறான். நாட்டை இழந்த பரமேசுவரவர்மன் பெருவளநல்லூரில் சேதியக் கலைஞர் பரவாதிமல்லர் என்பவரின் இல்லத்தில் தலைமறைவாக இருந்து வருகிறான். அவனைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் சளுக்கியத் தளபதி வில்வேலி வெகு தீவிரமாக முனைகிறான். இதற்கிடையே சளுக்கியரால் சிறைப்படுத்திப் பல்லவபுரம் அரண்மனைக் கோட்டையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பரமேசுவரவர்மனின் ஒன்றுவிட்ட தம்பியான இளவரசன் கோவிந்தவர்மன், தனது காதலியும் பழையாறைச் சோழ இளவரசியுமான இளங்கோப்பிச்சியின் உதவியால் தப்பிச் சென்று விடுகிறான்.

பல்லவ நாட்டைக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் விக்கிரமாதித்தன் தனது ஆட்சியை நிலைநாட்டுவதற்காகச் சமண சமயத்தினரின் உதவியை நாடுகிறான். அதற்காகவே, சமண சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட ஆந்திர இளவரசி உத்தமசீலி என்பவளைப் பல்லவ நாட்டுக்கு வரவழைக்கிறான். அவன் அவளுடைய ஒன்றுவிட்ட தம்பியான ஆந்திர மன்னர் [illegible]ர்த்தனரின் ஒரே மகள். வரும் வழியில் அவளுக்கு ஒரு சிறு இன்னல் ஏற்பட்டுப் பெருவளநல்லூர் சேதியக் கலைஞரின் இல்லத்தில் போய்த் தங்கும்படி நேர்கிறது. அங்கே தலை மறைவாயிருந்து வரும் பரமேசுவரவர்மனை அவள் சந்திக்கிறாள். அவனை ஓர் ஓவியக் கலைஞனென எண்ணி அவனிடம் தன் மனத்தைப் பறி கொடுக்கிறாள்.

பல்லவப் பேரரசின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டுச் சிற்றரசர்களாக இருந்து வரும் பழையாறைச் சோழரும், சந்திரலேகைச் சிற்றரசர் பெரும்பிடுகு முத்தரையரும் சேர்ந்து, சளுக்கியரை விரட்டியடித்துப் பரமேசுவரவர்மனை மீண்டும் பல்லவ அரியணையில் அமர்த்தத் திட்டமிட்டு முயல்கின்றனர். அவர்களுக்குத் துணையாக இளவரசன் கோவிந்தவர்மனும் சேர்கிறான். ஆனால் பரமேசுவரவர்மன் அவர்களது முயற்சிக்கு ஆதரவு தராமல் வாழ்க்கையில் வெறுப்புற்றுத் துறவு மனப்பான்மையுடன் இருந்து வருகிறான். இதனால் மனம் சோர்ந்த பழையாறைச் சோழர் தம் முயற்சிக்கு வேறு வழி வகுத்துக் கொள்கிறார். அதாவது, பல்லவ மன்னனுக்கு எதி





பத்தினிக் கோட்டம்

ஜெகசிற்பியன்

ராகர் சளுக்கியருடன் சேர்ந்து கொண்டது போல் நடிக்க ஆரம்பிக்கிறார். பழையாறைச் சோழர் தூண்டுதலினால் விக்கிரமாதித்தன், சமண சமயப் பிரசாரத்துக்காக வரவழைத்த தன் தம்பி மகள் உத்தமசீலியைப் பல்லவபுரம் அரண்மனையில் வெறுமனே இருக்கச் செய்து விட்டுப் பாண்டியர்மேல் படையெடுக்க ஆயத்தமாகிறான். அத்துடன், ஆந்திர நாட்டின் ஆட்சியதிகாரத்தை விஷ்ணுவர்த்தனிடமிருந்து பறிக்கவும் திட்டமிடுகிறான்.

இந்த விவரங்களை அறிந்துகொள்ளும் ஆந்திர இளவரசி உத்தமசீலி தனது பெரியப்பனை விக்கிரமாதித்தனைப் பழிக்குப் பழி வாங்கத் தீர்மானிக்கிறாள். இதற்கிடையே சேதியக் கிழவரின் இல்லத்தில் தான் பார்த்த ஓவியனே பல்லவ பரமேசுவரவர்மன் என்பதைத் தெரிந்துகொண்டு அவன்மீது தன் காதலை மேலும் வளர்த்துக் கொள்கிறாள்.

இதற்கிடையே பாண்டியருக்கும் சளுக்கியருக்கும் நெல்வேலி என்னும் இடத்தில் போர் மூண்டு விடுகிறது.

காஞ்சிக் கோட்டையைக் காவல் காத்துக் கொண்டிருந்த சளுக்கிய இளவரசனை விநயாதித்தன் என்பவனும், தளபதி வில்வேலியும் சேர்ந்து பல்லவ நாட்டில் பல அக்கிரமங்களைச் செய்ய முனைகின்றனர். தங்களது அநியாய அதர்மச் செயல்களுக்கு ஆந்திர இளவரசி தடையாக இருக்கிறாள் என்று எண்ணிய தளபதி வில்வேலியும், விநயாதித்தனும் அவளை ஒழித்துக் கட்ட முடிவு செய்து, மதங் கொண்ட யானை யொன்றின்மீது தந்திரமாக ஏற்றி அனுப்பி விடுகின்றனர். அந்தப் பேராபத்திலிருந்து அவளைப் பரமேசுவரவர்மன் காப்பாற்றுகிறான். இதனால் அவ்விருவரது காதலும் மேலும் வலுவடைகிறது. நெருக்கடி மிகுவதை உணர்ந்த ஆந்திர இளவரசி தன் தந்தை ஆந்திர மன்னருக்கு ஓர் ஓலை எழுதிப் பரமேசுவரவர்மனிடம் கொடுத்தனுப்புகிறாள்: விக்கிரமாதித்தனை

எதிர்ப்பதற்காகப் பல்லவருக்குப் படையுதவி செய்யுமாறு அதில் எழுதியிருக்கிறான்.

நெல்வேலியில் பாண்டியருடன் சளுக்கிய விக்கிரமாதித்தன் தோல்வியடைந்து பின் வாங்க நேரிடுகிறது. இதையறிந்து வில்வேலி உடனே நெல்வேலிப் போர் முனைக்கு விரைகிறான். பல்லவபுரம் அரண்மனையில் சிறைப்பட்டிருக்கும் பல்லவ மகாராணி காடவன்மா தேவியைச் சோழ இளவரசி மீட்கிறாள். இச் சமயம் அவளுக்குப் பல வகைகளிலும் உதவியாக இருந்து வரும் அநந்தமதி என்பவளைக் கொன்றுவிட்டு ஓடிவிடுகிறான் விநயாதித்தன்.

இந்நிலையில், ஆந்திர மன்னனிடம் படை உதவி பெற்றுப் பல்லவ நாட்டில் வந்து பிரவேசிக்கிறான் பரமேசுவரவர்மன்!...

இனி, மேலே தொடர்ந்து படிக்கலாம்.

அத்தியாயம் ஒன்று

வெற்றிக் கூத்து

தேரொலிக்க, மா ஒலிக்கத் திசை ஒலிக்கும் புகழ் நகராம் காஞ்சி அன்று வெற்றித் திருக் கோலத்துடன் விளங்கியது. எங்கும் புதுப் பொலிவு! எதிலும் புதுத் தெம்பு, புதிய உற்சாகம்!

நீலக் கடலின் நடுவே எழும்பி நிற்கும் வெள்ளிப் பனி மலைபோல் எழிலும் கம்பீரமுமாகத் துலங்கிய பல்லவ அரண்மனையின் கோபுரக் குடுமியில், நான்கு ஆண்டுகளுக்குப் பின் ஏற்றப் பெற்ற நந்திக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. அந்த எழிலார்ந்த அரண்மனையின் எட்டுத் திக்கும்; முகில் முட்ட உயர்ந்து நின்ற தெய்வத் திருக் கோயில்கள் கடற் பரப்பிலே முளைத் தெழுந்த மரகதக் குன்றுகள் போல் காட்சியளித்தன.

வானக் கூரைமீது ஏறி நின்று பார்க்குங்கால் இப்படித் தோற்றம் தந்த காஞ்சிமா நகரின் உள்ளே இறங்கிப் பார்த்தாலோ,—

மகர தோரணங்களாலும், மாவிலைச் சரங்களாலும், மலர் வளையங்களாலும், வண்ணக் கோலங்களாலும் அலங்கரிக்கப்பெற்ற விசாலமான வீதிகளில் நந்திக் கொடிகளை ஏந்தி வெற்றிக் கோஷங்களிட்டவாறு அரண்மனைக் கோட்டைச் சதுக்கத்தை நோக்கி வீர நடை போட்டுச் சாரி சாரியாகச் சென்கொண்டிருந்தனர் பல்லவ — ஆந்திரப் படை வீரர்கள். வீதிகளின் இரு மருங்கிலும் திரண்டிருந்த ஆடவர் கூட்டம், மகிழ்ச்சியாரவாரத்துடன் அவர்களை வரவேற்றுப் பொன்னும் மணியும் புத்தாடைகளும் பரிசளித்து வாழ்த்துக் கூறினர்.

வெற்றி விழா ஊர்வலத்தினிடையே விதவிதமான கேளிக்கைக் களியாட்டங்களும் நடைபெற்றன. வீதிகளில், ஆங்காங்கே நிர்மாணிக்கப் பட்டிருந்த அழகிய மேடைகளில் சிலர் வெற்றிப் பண் இசைத்துக் கொண்டிருந்தனர்; மற்றும் சிலர் நடன விருந்து அளித்தனர்; இன்னும் சிலர் போர்க் களக் காட்சிகளைக் கூத்தாக்கி நடித்துக் காண்பித்தனர்.

உற்சாகத்தின் கரை கடந்து, குதூகலத்தின் எல்லை மீறி, மகிழ்ச்சியாரவாரமிட்டவாறு போய்க் கொண்டிருந்த படை வீரர் ஊர்வலத்தில் திடீரென ஒரு கலகலப்பு. அந்த வெற்றி ஊர்வலத்தில் கலந்துகொண்டு சென்ற மக்கள் கூட்டத்தில் ஒரு பகுதி அவ் விசாலமான இராஜ வீதியின் முச்சந்தியொன்றை நோக்கி அலை மோதிப்பாய்ந்தது.

அந்த முச்சந்தியின் நடுவே ஒரு கூத்து மேடை போடப் பெற்றிருக்க, அதில் அப்போதுதான் நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு அறிகுறியாக தண்ணுமை, தமருகம், கொக்கரி, உடுக்கை முதலான இசைக்கருவிகளின் முழக்க ஒலி கேட்டது.

மேடையைச் சுற்றி மக்கள் கூட்டம் வந்து மொய்த்தது. சற்றைக்கெல்லாம் அந்த மேடைமீது மூன்று பேர் தோன்றினர். இசை முழக்கம் ஓய்ந்து, அமைதி நிலவியது. ஆவலால் விரிந்த ஆயிரமாயிரம் கண்கள் மேடையில் தோன்றிய அம்மூன்று நடிகர்களையும் இமைக்காமல் நோக்கின.

ஒருவன் பல்லவ வீரனைப் போல் வேடம் புனைந்திருந்தான். இன்னொருவன் பட்டயப் புலவனைப் போல் காட்சியளித்தான். இவ்விருவருக்கும் நடுவில் நின்ற மூன்றுமவன், கிழிந்து கந்தலான ஆடையைப் போர்த்திக் கொண்டு, செம்புள்ளி கரும்புள்ளி குத்தப் பெற்ற மண் பானை ஒன்றை முகம் தெரியாதவாறு தலையில் கவிழ்த்துக் கொண்டு கூனிக் குறுகி நின்றிருந்தான். அவன் கையில் கொடிக் கம்பு ஒன்று இருந்தது. அதிலே அழுக்கேறி நைந்த சளுக்கிய வராகக் கொடி தலைகீழாகக் கட்டப்பட்டுப் புழுதியில் புரண்டு கொண்டிருந்தது.

தண்ணுமையும் தமருகமும் சேர்ந்த ஓர் இசைக் கலவை ஒலி!

"அகோ வாரும், வீரரே! ஆதி பகவனின் அருளால் உமக்குச் சகல மங்களமும் உண்டாகட்டும்!" — தொண்டையைக் கனைத்துக்கொண்டு பட்டயப் புலவன் புன்முறுவலோடு இவ்வாறு பேச்சை ஆரம்பித்தான்.



தென் இந்திய ஆபீஸ்:

5/149, பிராட்வே, சென்னை-1

மூக்கு அடைத்திருக்கிறதா?

மிஸ்டால் உபயோகியுங்கள்.

அந்த அடைப்பை மிஸ்டால் கொண்டு அகற்றுங்கள். மூக்கின் இரண்டு துவாரங்களிலும் ஒரு துளி சொட்டவும். பிறகு நன்றாக மூச்சுவிட்டு, மூக்கைச் சிந்தவும். அவ்வளவுதான்!


மிஸ்டால் துளிகள் – மூக்கு அடைப்பு, ஜலதோஷம், இருமல், மூக்கில் புண், கரகரப்பு முதலியவைகளிலிருந்து துரித நிவாரணம் அளிக்கிறது.

இவையும்கூட இப்போது கிடைக்கின்றன.
மிஸ்டால் எபிடிரின் கலந்தது.
மிஸ்டால் அக்வியஸ்
மிஸ்டால் மிஸ்ட்



ஏகபோக விநியோகஸ்தர்கள்:
எம். ஜி. ஸஹானி & கம்பெனி பிரைவேட் லிட்.
1, பந்தர் தெரு, மதராஸ்-1

...தன் குஞ்சு பொன் குஞ்சு



நம் குழந்தைகளை எப்போதும் அண்டை வீட்டுக் குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நம் குழந்தைகளுக்குத்தான் தீங்கிழைக்கும். அதேபோல், இப்போது அமுலிலிருக்கும் மெட்ரிக் முறையை உள்ளபடியே உபயோகிக்காமல் பழைய பலம், வீசை எடைகளுடன் ஈடு கட்டிக்கொண்டேயிருந்தோமானால், நமக்குத்தான் நஷ்டம்.

எளிதான மெட்ரிக் முறையின் அனுகூலத்தைப் பெறவேண்டுமானால் 100, 200, 500, கிராம், 1 கிலோகிராம் என்று மெட்ரிக் எடைகளை அதனதன் எடைப்படியே உபயோகிக்கவேண்டும்.

ஒரு வீசைக்குச் சரிசமமான மெட்ரிக் எடை எவ்வளவு என்று கணக்குப் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள்.

இதனால் நேரம் வீணாவதோடு, நஷ்டமும் ஏற்படலாம்.

நியாய விலைக்கும், நேர்மையான நிறுவைக்கும்

முழு மெட்ரிக் எடைகளிலேயே

பொருள்களை வாங்குங்கள்

DA 63/71

"புலவரின் வாழ்த்துக்களை நன்றியுடன் ஏற்கிறேன்." — பல்லவ வீரன் தலை குனிந்து வணங்கினான்.

"உம்மைப் பார்த்தால் ஏதோ போர் முனையிலிருந்து நேரே இங்கு வந்திருப்பது போலல்லவா தோன்றுகிறது?" —புருவங்களை மேலுயர்த்திக் கொண்டு வினவினான் பட்டயப் புலவன்.

"விந்தையான கேள்வி! அடுத்தபடியாகப் போர் எங்கே நிகழ்ந்தது என்று கூடக் கேட்பீர் போலும்!" — கூறும்பாக நகைத்தான் பல்லவ வீரனைப் போல் வேடமணிந்தவன்.

"ஆம், வீரனே! அதுவும் நான் அடுத்துக் கேட்கவிருக்கும் கேள்வியே."

"அப்படியானால் பட்டயப் புலவர் கடந்த ஆறு மாதங்களாகச் சோமபான மொந்தையிலேயே மூழ்கி இவ்வுலகப் பிரக்ஞையை இழந்திருந்தாரோ?"

ஜனக் கூட்டத்திலிருந்து பெருத்த சிரிப்பொலி எழுந்தது.

"என்ன? என்ன?" — கோபத்துடன் திரும்பினான் புலவன்.

"ஆமாம், ஐயா! புவனமே கண்டறியாத போர் ஒன்று நம் நாட்டில் நடந்து முடிந்திருப்பதுகூட உமக்குத் தெரியாமல் இருக்கிறதே! இவ்வளவு பெரிய நிகழ்ச்சியைத் தெரிந்து கொள்ளாமல் இத்தனை காலமும் எங்கே தூங்கிக் கொண்டிருந்தீர்? மதுக் கடையில் நுழைந்து அங்கேயே யோக நிஷ்டையில் ஆழ்ந்து கிடந்தீரா? அல்லது கவிதா வரம் வேண்டி ககனத்தை அண்ணாந்து பார்த்துக் காலத்தை ஓட்டினீரா?"

ஜனங்கள் கைதட்டி ஆரவாரிக்கின்றனர். பட்டயப் புலவனும் கடகடவெனச் சிரிக்கிறான். "ஓ.....புரிந்து கொண்டேன், பல்லவ வீரர் பெருவளநல்லூர்ப் போர்க் களத்திலிருந்து நேரே இங்கு வந்திருக்கிறார்! இத்தனை மிடுக்கும் செருக்குமாகப் பேசுகிறார்!"

"புலவருக்கு இப்போதுதான் போதை தெளிந்திருக்கிறதோ?"—குத்தலாகக் கேட்கிறான் பல்லவ வீரன்.

"இல்லை, இல்லை. என் ஐயம் ஒன்றைத் தீர்த்துக் கொள்ளவே அப்படி ஒரு கேள்வியை உம்மிடம் கடாவினேன்."

"புலவருக்கு என்மீது என்ன சந்தேகமோ?"

"பெருவளநல்லூர்ப் போர்க்களத்தில் நான் ஒரு வேடிக்கையான காட்சியைப் பார்த்தேன். அதாவது, பல்லவ வீரர்களின் ஆவேசத் தாக்குதலைச் சமாளிக்க முடியாத சளுக்கிய வீரர்களில் சிலர் மரண பயம் கொண்டவர்களாய்க் குப்புற விழுந்து படுத்து, நமது சகாக்களின் பிணங்களை வாரித் தம்மேல் போட்டுக்கொண்டு செத்தவர்கள் போல நடித்தார்கள். அந்த மாதிரி உபாயத்தால் நீவிரும் உயிர் பிழைத்து வந்து இங்கே வாய் வீரம் பேசுகிறீரோ என்று சந்தேகித்தேன்."

ஜனக் கூட்டம் இதைக் கேட்டு இடியிடியென்று சிரித்து ஆரவாரம் செய்தது.

"அவ்வாறானால் பட்டயப் புலவரும் போர்க்களத்துக்குப் போயிருந்தாரோ?" முகத்தைச் சுளித்துக்கொண்டு வினவினான் பல்லவ வீரன்.

"வேடிக்கை பார்க்க நான் போகவில்லை, வீரரே! நமது மாவீர மாமன்னர் பரமேசுவரவர்மரின் தலைமையிலே பல்லவ — ஆந்திரப் படைகள் நிகழ்த்திய வீரமாப் போரை நேரில் கண்டு அதை எதிர்காலத்தின் முதுகிலே எழுதி வைக்கத்தான் போனேன்! இதோ, பட்டய சாசனத்துக்காக நான் எழுதிக் கொணர்ந்திருக்கும் அந்தப் போர்க் களக் காட்சியின் ஒரு வர்ணனையைக் கேளும்!" — ஜனங்கள் பக்கமாகத் திரும்பி நின்ற புலவன் தன் இடுப்பிலிருந்து ஓர் ஓலை நறுக்கை எடுத்து உரத்த குரலில் படிக்கிறான்: "அத்தியந்தகாமர், குணபாசனர், ஸ்ரீநிதி, ஸ்ரீபரர், தருணாங்குரர், காமராகர், சித்திரமாயர் என்றெல்லாம் விருதுப் பெயர் கொண்ட பல்லவ மாமன்னர் பரமேசுவரவர்மர் தமது 'அதிசயம்' என்ற புரவியின் மீதும், 'அரிவாரணம்' என்ற யானையின் மீதும் மாறி மாறி அமர்ந்து, பெருவளநல்லூர்ப் போர்க் களத்தில் புயலைப்போல் புகுந்து, சளுக்கிய விக்கிரமாதித்தனுடன் பொருது கொள்ளத் தொடங்கிய போது, அவரது கரி, பரி, காலாட் படைகள் அவரைப் பின் தொடர்ந்து வந்து போர் முனையில் குவிந்ததால் கிளம்பிய புழுதிப் படலம் கதிரவனையே மறைத்து, அதன் ஒளி சந்திர கோட்டைபோல் மங்கியது..."

"ஆகா! அற்புதமான வர்ணனை! மேலே படியுங்கள் புலவரே, மேலே படியுங்கள்!" என்று உற்சாகமாகக் கூவினார்கள் சுற்றி நின்ற ஜனங்கள்.

பட்டயப் புலவன் குரலை உயர்த்திப் படித்தான்: "பல்லவப் படைகள் எழுப்பிய முரசொலியைச் செவிமடுத்த சளுக்கிய வீரர்கள் இடியோசை கேட்ட நாகம்போல் நடுநடுங்கினர். பல்லவ வீரர்களின் உறையிலிருந்து வெளிப்பட்ட வாட்கள் மின்னல்போல் பளிரிட்டுச் சளுக்கிய வீரர்களின் பார்வையைப் பறித்தன. நமது யானைகள் கார் மேகங்கள்போல் அசைந்து போர் முனையில் முன்னேறியபோது மழைக் காலம் வந்துவிட்டதோ என்னும் பிரமையே உண்டாகியது. நமது போர்ப் பரிகள் அணி வகுத்துச் சென்ற காட்சி கடல்

அலைகள் திரண்டு செல்வதுபோல் தோன்றியது. அவற்றினிடையே யானைகள் புகுந்து குழப்பம் விளைவித்த காட்சி கடலின் பிரளய சூழலை நினைவூட்டியது. அந்தக் கடலிலிருந்து சங்குகள் புறப்பட்டாற்போல் நமது சேனை வீரர்கள் சங்கொலி எழுப்பினர்...''

''பிரமாதம், பிரமாதம்! படியுங்கள், படியுங்கள்!'' என்று ஜனக் கூட்டம் சந்தோஷ ஆரவாரம் செய்தது.

பட்டயப் புலவன் உற்சாகமாகப் படிக்கலானான்: ''சளுக்கியப் பகைவர்கள் போரிட்டு வீழ்ந்து கிடந்த நிலைமை, காண்டா மிருகத்தால் முறிக்கப்பட்ட மரங்களும் செடிகளும் சாய்ந்து கிடப்பதை ஒத்திருந்தது. நம் வீரர்கள் வில்லை வளைத்து அம்புகளை விடுத்தபோது உண்டான ஓசை, காட்டிலே காற்றுத் தடைபடுங்கால் உண்டாகும் பேரோசைபோல் கேட்டது. கரிகள் ஒன்றோடொன்று முட்டி மோதிப் பொருதபொழுது அவற்றின் தந்தங்கள் ஒன்றின்மேல் ஒன்று குத்திக்கொண்டு எடுபடாமல் நின்றன.''

''ஓகோகோ!'' என்று குதூகலக் கும்மாளி யிட்டது ஜனக் கூட்டம்.

பட்டயப் புலவன் மேலும் படித்தான்: ''வீரர்களின் செந்நீரும், யானைகளின் மதநீரும் நிலத்தில் தோய்ந்து பாய்ந்த காட்சி அந்தப் போர்க் களமெங்கும் மஞ்சள் பூசினாற் போல் தோற்றமளித்தது. சளுக்கிய வீரர்களுடையவும், அவர்களது கரி, பரிகளுடையவும், தலைகள், கால்கள், கைகள், தொடைகள் முதலானவை வெட்டுண்டு சிதறலாயின. அவற்றிலிருந்து ஆறாகப் பெருக்கெடுத்த இரத்தத்தின்மேல் பாலம் கட்டினாற்போல் இறந்த யானை உடல்களை அடுக்கி அவற்றின்மீது நம் வீரர்கள் ஏறி நின்று போரிட்டனர். அப்போதே நம் பக்கம் விஜய லட்சுமி வெற்றி ஊஞ்சல் கட்டி ஆடத் தொடங்கினாள்...''

''ஆகாகா! அருமையான வர்ணனை!'' என்று ஆர்ப்பரித்தது ஜனக் கூட்டம்.

''இன்னும் கேளுங்கள், சபையோரே! வீர சொர்க்கம் புகுந்த நம் வீரர்களின் கரங்களில் வாட்கள் அப்படியப்படியே இறுகி யிருந்தன. அவர்கள் போரிட்ட நிலையிலேயே இறந்து கிடந்தார்கள். அவர்களது விரைந்த கண்கள் சிவந்திருந்தன. ஆனால் அவர்கள் அணிந்திருந்த கவச அணிகள் நொறுங்கிப் போய் இருந்தன. வெட்டுண்ட தலைகளும் முண்டங்களும் நம் வீரர்கள் எழுப்பிய முரசொலிக்கு ஏற்பக் கூத்தாடின. இறுதியில் வெற்றி வீரராக நிமிர்ந்து பல்லவ நந்திக் கொடியை விண்ணிலேற்றிப் பறக்க விட்டார், இரண ரசிகனான விக்கிரமாதித்தனை வென்ற நமது இரண ஜய பரமேசுவர வர்மர்....''

''இரண ஜய பரமேசுவரவர்மர், வாழ்க! பல்லவ நாடு வாழ்க, வாழ்க!'' என்று விண்ணதிரக் கோஷமிட்டது ஜனக் கூட்டம்.

''ஓ!....அதை விடுவேனா? பல நூறாயிரம் போர் வீரர்களுடனும், பல லட்சக் கரி பரிகளுடனும் வந்த சளுக்கிய விக்கிரமாதித்தன், போர் முடிவிலே தனியனாய் — தாங்கிப் பிடிக்க ஆளற்றவனாய்—நின்று, இதோ இங்கு நிற்கும் இவனைப்போல் கந்தையைப் போர்த்திக்கொண்டு உயிருக்கு அஞ்சித் தன் நாட்டை நோக்கி ஓடிப்போனான்!''* என்றவாறு அருகில் கந்தலாடையோடிருந்தவனைச் சுட்டிக் காட்டினான் பட்டயப் புலவன்.

உடனே, தலையில் பானையைக் கவிழ்த்துக்கொண்டு கந்தலாடையோடு கூனிக் குறுகி நின்றவன் பயந்து நடுங்கி, ஓடி ஒளிபவன் போல் மேடையில் அங்கு மிங்குமாக ஓடி நடிக்கலானான்.

இதைக் கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்த ஜனக் கூட்டம், ''ஒழிந்தான் விக்கிரமாதித்தன்! அழிந்தது சளுக்கியர் ஆதிக்கம்!'' என்று முழக்கமிட்டுக் கொண்டே அந்தக் கூத்து மேடையை விட்டுக் கலைந்து சென்றது.

* பெருவள நல்லூரில் பல்லவ பரமேசுவரவர்மனுக்கும், சளுக்கிய விக்கிரமாதித்தனுக்கும் நடந்த போரைப் பற்றிக் கூரம் பட்டயம் கூறும் செய்திகளைக் கொண்டே மேலேயுள்ள உரையாடல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

அத்தியாயம் இரண்டு

இன்பமே துன்பம்!

''தூங்கக் கரிமுகத்துத் தூமணியே, மாமணியே! அன்றொரு நாள் உமது சந்நிதானத்தில் வந்து நின்று வெற்றி வரம் வேண்டி நின்றேன். அப்படி நான் வேண்டிய வரத்தை அருள் கூர்ந்து எனக்கு அளித்து விட்டீர். அதற்கு நன்றி செலுத்தவே இதோ, உமது பாதார விந்தத்தின்முன் தெண்டனிட்டு நிற்கிறேன். என் நெஞ்சத்து நன்றி உணர்ச்சியை ஏற்றுக்கொண்டு, இப்போது நான் வேண்டும் இன்னொரு வரத்தையும் எனக்கு அளித்

பிராஸோவினால்
அதிகப் பிரகாசம்



பிரகாசமுள்ள பித்தளைச்
சாமான் உங்கள்
அறையின் அலங்காரத்தை
அதிகரிக்கச் செய்கிறது—
அறைக்கு ஒளி மிகுந்த
தோற்றத்தை அளிக்கிறது.
உங்கள் பித்தளைச்
சாமான் பளபளக்கும்
ஒளியுடனிருப்பதற்கு,
அதனைத் தவறாமல் பிராஸோ
கொண்டு மெருகிடுவதே
சந்தேகமற்ற வழியாகும்.
உபயோகிக்க சுலபமான
பிராஸோ சிக்கனமானதும் கூட.

உங்கள் பித்தளைச் சாமான்களை

பிராஸோவினால்

வாரத்திற்கு ஒரு முறை
ஒவ்வொரு வாரமும் மெருகிடுங்கள்



அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWT/BR 5708

BR-4

தருணும் கணநாதா! என்னுடைய உரிமைக்காகப் போர் நடத்தி அதில் வெற்றி பெற்றவனுகத்தான் இங்கு வந்திருக்கிறேன். ஆனல் அந்த வெற்றி என் மனத்திலே எள்ளளவு மகிழ்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. மாருக, மலையளவு துன்பத்தையே அது வளர்த்து விட்டிருக்கிறது. ஆம், ஐயனே! போர் மிகக் கொடுமையானது. ஆயிரமாயிரம் மனித உயிர்களை அது அநியாயமாகப் பலிவாங்கிக் கொள்கிறது. மண்ணுசை கொண்ட ஒரு சிலருக்காக, வாழப் பிறந்த பல்லாயிரம் மக்கள் வீணே போரிட்டு மாய்கிருர்கள். இந்த அதர்மச் செயல் உலகிலிருந்து அடியோடு ஒழிய வேண்டும். என்னுடைய ஆட்சிக் காலத்திலாவது—என்னல் என் நாட்டின் மண்ணிலே — இந்த அதர்மம் இனி நிகழாதபடி அருள் செய்யும் அத்தனே! இத்துடன், இன்று என்னிடம் தோற்றேடிவிட்ட சளுக்கிய விக்கிரமாதித்தனுக்கும் இதே வரத்தை அளித்து, அவன் மனத்திலும் நல்லொளியை ஏற்றியாகளும் உமைபாலா! அவனுக்காகப் போரிட வந்து என்னல் அழிக்கப்பட்ட பலநூறு சளுக்கிய வீரர்களின் ஆத்மாக்களும் உமது ஐயனின் திருவடி நிழலில் சாந்தி பெறக் கருணை புரியும் கணநாதா!''

சென்னி வாய்க்கால் கரையோரமிருந்த அந்தப் பழமையான சிவன் கோயிலில் எழுந்தருளியிருந்த வாதாபி கணபதியின் சந்நிதியிலே நின்று மனமுருகிக் கண்ணீர் சோர இவ்வாறு வேண்டிய பரமேசுவரவர்மன், நெடுநேர தியானத்துக்குப் பின் அங்கிருந்து வெளியே வந்தான்.

நான்கு ஆண்டுக் காலமாய்ச் சளுக்கியரின் ஆதிக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடந்த பல்லவ நாட்டை மீட்கும் போரில் மகத்தான வெற்றியடைந்திருக்கும் அவனிடம், அந்த வெற்றிக்கான மகிழ்ச்சி சிறிதளவும் இப்போது தென்படவில்லை. இன்னமும் ஏதோ ஒரு மாபெரும் பொருளை இழந்து விட்ட துயரமே அவன் முகத்தில் நிழலாடிக் கொண்டிருந்தது.

ஆமாம்; ஆந்திர இளவரசி உத்தம சீலியைப் பற்றிய எண்ணமே அவனை அத்தகைய துயரத்தில் ஆழ்த்தி வைத்திருந்தது. அந்தத் துயரமே அவன் அடைந்த வெற்றியின் மகிழ்ச்சியையெல்லாம் எரித்துச் சாம்பலாக்கிக் கொண்டிருந்தது. அன்றொரு நாள் இதே இடத்தில் அவனை, மதங் கொண்ட அரிவாரணத்திடமிருந்து காப்பாற்றிய நினைவும் இப்போது அவன் மனத்தில் வந்து மோதவே, அவனது துயரம் பன்மடங்காகப் பெருகியது.

'அவள் கதி என்ன ஆகியிருக்குமோ! சேதியக் கலைஞரின் இல்லத்தில் சிக்கிக் கொண்ட அவளுக்குச் சளுக்கியக் கொடுங்கோலர்கள் எத்தகைய தண்டனை அளித்தார்களோ! படைகளை நடத்திக் கொண்டு நான் பெருவளநல்லூருக்கு வரும்போதே அந்த இல்லம் இடிந்து தகர்ந்து தரை மட்டமாகக் கிடந்ததே! அப்படியாளுல் அவளை அந்த இல்லத்தில் பூட்டி வைத்தே இடித்துத் தகர்த்து விட்டார்களா?.... ஐயோ! சேதியக் கலைஞரும் என்ன ஆனர் என்று தெரியவில்லையே? அவர் எங்கு போனர் என்ற தகவலும் கிடைக்கவில்லையே!'


தலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்ற பரமேசுவரவர்மன், சற்றுத் தொலைவில் நிறுத்தி வைத்திருந்த தனது 'அதிசயம்' என்னும் குதிரை மீது சோர்வுடன் ஏறி அமர்ந்து, பெருவள நல்லூரை நோக்கி அதைச் செலுத்தலானுன்.

மாலைச் சூரியன் மேலை வான் சரிவில் இறங்கி, மஞ்சள் ஒளி பரவத் தொடங்கிய நேரத்தில் பெருவளநல்லூர் சேதியக் கலைஞரின் இல்லம் இருந்த இடத்தை அடைந்த அவன், அங்கே கிடந்த ஓர் உடைந்த தூணின்மேல் போய் உட்கார்ந்து சுற்றிலும் தன் பார்வையை ஓட்டினுன்.

நேற்றுவரை பயங்கர யுத்த களமாக விளங்கிய அந்த இடம் இப்போது ஒரு மாபெரும் மயானம்போல் வெறிச்சோடிக் காணப்பட்டது. யுத்த அரக்கனின் கோர தாண்டவச் சின்னங்கள் அங்கிருந்து சிறிதும் மறையாமலே இருந்தன. ஆனல் அந்தச் சிற்ருறு மட்டும் இப்போது வெகு அமைதியாக ஓடிக் கொண்டிருந்தது.

அப்படி ஓடிய சிற்ருற்றையும், அதன் கரையில் மொட்டையாக நின்ற அந்தச் சவுக்கை மரத்தையுமே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த பரமேசுவரவர்மனின் கண்கள் நீர்ப் பொழிவையிட்டு மங்கின.

''என் அன்புக் கோமகளே! எனது ஆத்மாவின் பொற்கடரே! இனி உன்னை நான் இந்த ஜன்மத்தில் பார்க்கவே மாட்டேனு? இந்தப் பாவிக்கு அந்தப் பாக்கியம் இனிமேல் கிடைக்கவே கிடைக்காதா?'' என்று கம்மிக் கரைந்த குரலில் புலம்பிக்கொண்டே அங்கிருந்து தட்டுத் தடுமாறி எழுந்த அவன், எங்கோ யாரோ கலகலவெனச் சிரிக்கும் ஒலி கேட்டு அதிர்ச்சியுற்றவனய்த் திரும்பினுன். (தொடரும்)



தலைவலியா?



பல்வலியா?



உடல்வலியா?



அசௌகரியமான நாட்களா?

ஸாரிடான்

'ரோஷ்' சாப்பிடுங்கள்

நிவாரணம் அளிக்கிறது, ஆசுவாசப் படுத்துகிறது, புத்துணர்ச்சி யூட்டுகிறது




வலிகளிலிருந்தும் நோவுகளிலிருந்தும் விரைவில் நிவாரணம் பெற ஸாரிடான் சாப்பிடுங்கள். தலைவலி, பல்வலி, உடல்வலி, சாதாரண உடற்கோளாறுகள், இவற்றிலிருந்து நிவாரணம் பெற ஸாரிடான் இணையற்றது. ஸாரிடான் விரைவாக, அபாயமின்றி, நிச்சயமாக வேலை செய்கிறது. உங்களுக்கு ஒரு வில்லை ஸாரிடான் போதுமானது! குழந்தைகளுக்கு ¼ லிருந்து ½ வில்லை வரை கொடுக்கலாம்.



ஒரு வில்லை ஸாரிடான் போதும்

ஒரு வில்லை 13 நயா பைசா



'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்ட்ரிபியூட்டர்கள்: **வால்டாஸ் லிமிடெட்**

JWT-VT 4793

நினைக்க நேரமில்லை

சா.கி.சுப்பிரமணியன்







''ஓய், குமாரசாமி!'' என்று கரைந்த தலைமைக் குமாஸ்தா ராமநாதன், தந்திச் சேவகனைக் குமாரசாமி முன்னால் கொண்டு வந்து நிறுத்தினார்.

''தந்தியா?''

''வாழைக்காய்! பிரித்துப் பார்த்துத் தந்திச் சேவகனை அனுப்பும்'' என்று ராமநாதன் கத்தினார். அவருக்கு எந்தப் பேப்பர் வந்தாலும் உடனடியாகப் படித்துப் பார்த்து அடுத்தவனிடம் சேர்ப்பித்துவிட வேண்டும். அவர் தலைமைக் குமாஸ்தா ஆயிற்றே!

தந்திச் சேவகனின் தலை மறைந்தது. குமாரசாமி 'குய்யோ முறையோ' என்று அலறினார்.

''அட, என்னய்யா, யார் மண்டையைப் போட்டு விட்டார்கள்?'' என்றார்.

''என் தாயார் இறந்து விட்டாள்!''

''தாயில்லாப் பிள்ளை ஆகி விட்டீர்! என்றாவது ஆக வேண்டியது தானே? அழாதேயும் குமாரசாமி. உமது தாயார் வயதானவர் தானே.....?''

குமாரசாமி விக்கலையும் விம்மலையும் அடக்கிக் கொண்டு, ''சார், ராமநாதன் நீங்கள்.....'' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்தார். தொண்டைக் குழியில் பனித் துண்டு போன்று கவலை அடைத்துக் கொண்டது.

''நான் என்ன செய்ய வேண்டும்? டேய், கோபால்....'' எனக் கத்தினார்.

சேவகன் கோபால், கதவைத் திறந்து பரட்டைத் தலையுடன் கழுத்தை நீட்டினான். அவன் கண்கள் ராமநாதன் முகத்தோடு சேதியென்னவெனப் பேசின.

''டைப்பிஸ்டு சாந்தா இருக்கிறாளே, அவளிடம் குமாரசாமிக்கு நான்கு நாள் விடுமுறை - தாயார் இறந்து போனாள் - என்று டைப் அடிக்கச் சொல்லிச் சடுதியில் வாங்கி வா...''

''நாலு நாள் போதுமா?'' என்று முனகினார் குமாரசாமி.

''எல்லாம் போதும். மானேஜர் கழுகு. அதற்கு மேல் கேட்டால் வள்ளென விழும். அப்புறம் ஊசி விருந்தபடியே விடுமுறையை நீடித்து விடுமே. சாவுக்கான விடுமுறை. தப்புத் தகராறு வராது.''

''சரி. நீங்கள் சொல்லுகிறபடியே செய்கிறேன். எனக்குப் பணம்?''

''பணமா? ஆமாம், ஐயா! அது முக்கியமானதுதான்'' என்று கூறிக் கொண்டே தொலைபேசியைக் கழற்றினார்.

''ஹலோ... யார்? ஆமாம். ராமநாதன். ஓய் ராஜ்ஜி..... எங்கள் ஆபீசில் உமக்குக் குமாரசாமியைத் தெரியுமல்லவா? இட்லர் மீசை குமாரசாமிதான். அவருக்கு...'' என்றதும் தொலை பேசி வாயை மூடி, ''ஏனய்யா, உமக்கு ஐம்பது ரூபாய் போதுமா?'' என்று கேட்டார் தலைமைக் குமாஸ்தா.

குமாரசாமி, ''அது எப்படிப் போதும். இருநூறு ரூபாயாவது கடன் கேளுங்கள். நான் லீவு முடிந்து வரும் போது பணத்தைப் புரட்டிக் கொடுத்து விடுகிறேன்'' என்றார்.

''ஹலோ, ராஜ்ஜி. இருநூறு ரூபாய் வேணும். ஊஹூம். இருநூறுதான். நல்ல மனுசன்; நம்பிக்கையானவர். பணத்தைத் தந்து விடுவார். ஒரு மாசத்துக்குள் தருவார். ... னே கருமாதிக்காக வேணும். நீர் அது புரியுமா...? எந்த ஊரில் சாவு என்று கேட்கிறீர்கள்? இரும்... இரும்....''

என்றவர், 'எந்த ஊருக்குப் போகவேண்டும்?' எனக் குமாரசாமியைக் கேட்டார்.

''மதுரைக்கு சார்!'' என்றார் குமாரசாமி.

மீண்டும் தொலைபேசியில், ''மதுரைக்குப் போகிறார் இட்லர் மீசை. உங்கள் பணம் வந்து, அவர் டிக்கெட் எடுத்துப் போக வேண்டும். உடன் அனுப்புவீரா, ஆள் அனுப்பட்டுமா? சே... சே.... ஐம்பது ரூபாய் போதாது.... ரயில் டிக்கெட் வாங்க வேண்டாமா? ஸ்டேஷனுக்குப் பணம் வந்து பயன் இல்லை. இங்கே அலுவலகத்துக்கு அனுப்பி விடும் உமது ஆள் மூலமாக. சரி, குமாரசாமி வீட்டுக்குப் போகப் போகிறார். இப்போதுதான் லீவு போட்டார்'' என்றபடியே தொலைபேசியில் பேச்சை முடித்த சமயம், சேவகன் கோபால் ஆங்கிலத்தில் டைப் அடித்த விடுமுறைக் கடிதத்தைக் கொண்டு வந்து ராமநாதனிடம் கொடுத்தான்.

''இந்தா குமய்யா. போடும் கையெழுத்தை. அப்படியே அந்தக் கழுகு முன்னால் போய் ஒரு கும்பிடு போடும். உடனே வீட்டுக்குக் கிளம்பும். பணத்தை ராவ்ஜி உமது வீட்டுக்கே அனுப்புகிறாராம். உமது பையன் நீர்—உமது மனைவி—பெண் ஆக, நாலுபேர், மூன்றரை டிக்கெட்தானே....''

''போகிறேன். நிச்சயமாகப் பணம் வந்து விடுமா?''

''வரும். முதலில் விடுமுறையை வாங்கும்.''

மானேஜர் அறைக்குள் குமாஸ்தா குமாரசாமி தயங்கிக் கொண்டே நுழைந்தார். முகத்துள் வேதனை மூலாம் படர்ந்திருந்தது.

''என்னய்யா அழுகை? எப்போ பார். உமது முகத்தில் அழுகைதான்.''

''இல்லே சார்! இப்பதான் தந்தி வந்தது. என் தாயார் இறந்து போனாள்.''

''அப்படியா? விடுமுறை வாங்க ஏதாவது சாக்கு வேண்டும்.''

''நிஜமாக. தந்தியைக் காட்டுகிறேன்.''

''தலைமைக் குமாஸ்தாவைப் பார்த்தீரா?''

''பார்த்தேன். உங்களைப் பார்க்கச் சொன்னார்.''

''குமாரி அது, இது என்று ஊரில் இருந்து விடாதேயும். நாலு நாள்தானே லீவு? சரி, போம்.''

மானேஜர் முகத்திலோ, அகத்திலோ துளியும் சலனம் இல்லை.

''நான் வருகிறேன்.''

''எந்த வண்டியில் போகிறீர்? மதுரைக்குத்தானே?''

''ஆமாம். தூத்துக்குடி வண்டி.''

''சரி.''

மானேஜர் அறைக்குள்ளிருந்து செத்துப் பிழைத்து வெளியே வந்தார் குமாரசாமி.

குமாரசாமி நகர்ந்த சமயம் காஷியர் கள்ளபிரான் வந்தார். ''என்ன சார், உங்கள் தாயார் போயிட்டாங்களாமே!''

''ஆமாம். போய் விட்டாள்'' எனக் கலங்கி நின்றார் குமாரசாமி.

''இப்படித்தான் பாருங்கள், ஒரு சமயம் மந்திரி ஒருத்தர் மேஜை மேலே சாவுத் தந்தி வந்து கிடந்ததாம். தந்தியிலே — 'தாயார் கவலைக்கிடம் — உடனே புறப்படவும்' என்ற வரியைப் பார்த்ததுதான் தாமதம், மந்திரி புறப்பட்டு விட்டார். விமானம் பறந்தது. விமான நிலையத்திலிருந்து ரயில் ஏறினார். ரயில் முடிந்து வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார்; பாதி வழி போகும் போதுதான், 'அடே! நம்முடைய தாயார் காலமாகிப் பத்து வருஷம் ஆகி விட்டதே' என்ற நினைவு வந்தது மந்திரிக்கு. உடனே தமது காரியாலயத்துக்குப் போன் பேசினார்.''

ராமநாதன் வாய் விட்டுச் சிரித்தார்; துக்கம் கேட்க வந்த குமாஸ்தாக் கும்பல் கதை கேட்கும் சுவாரசியத்தில் இருந்தது.

''என்ன பேசினார் மந்திரி?''

''சொல்லுகிறேன். 'என் தாயார் பத்தாண்டுக்கு முன் இறந்து விட்டாளே. அப்படி இருக்க, என் மேஜைக்குத் தாயார் இறந்து விட்டதாகத் தந்தி வரக் காரணம் என்ன?' என்று மந்திரி கோபமாகக் கேட்டார்.



''அவரது பிரதம காரியதரிசி, 'தந்தி உங்களுக்கு இல்லை — இங்குள்ள துணைக் காரியதரிசிக்கு வந்தது. தமது லீவுக்காகத் தந்தியை அத்தாட்சியாக ஆபீஸ் பையனுக்கு அனுப்பினார். நீங்கள் தந்தி வாசகத்தைப் படித்ததும் உடனடியாக விமானத்தில் புறப்பட்டு விட்டீர்கள்; நானே துணைக் காரியதரிசிக்கு லீவு கொடுத்து அனுப்பிவிட்டேன்' என்றாராம். இது நிஜமாகவே ஏதோ ஒரு ராஜ்யத்தில் நடந்தது'' என்றார் கள்ளபிரான். கள்ளபிரான் சொல்லிய கதையை ரசிக்க முடியாத குமாரசாமி தமக்கு வந்த தந்தியைக் கிழித்துக் கொண்டே குப்பைக் கூடையில் போட்டு விட்டு நடந்தார்.

விடுமுறைக் குமாஸ்தா தயாநிதி ஓடிக் குமாரசாமியைத் தெருவில் மடக்கினார்.

''என்ன வேணும் தயாநிதி?''

''நீர் ஊரிலிருந்து விடுமுறை அதிகம் தேவை என்று நீடித்தால் உமது சம்பளத்தை யார் வாங்குகிறார்களோ?''

''விடுமுறையை நீடித்தாலும் நீடிப்பேன்....''

''அப்படியானால் சம்பளப் பணத்தை நான் வாங்கலாம் என்று சாட்டுக்கடிதம் எழுதும்.''

''ஏன்?''

''எனக்கு நீர் பத்து ரூபாய் கடன் தர வேண்டுமே. போன வருடம் போன மாதம் வாங்கிய கைமாற்றுக் கடன்.''

''இப்போதுதானா அவசரம்? செத்தது நான் இல்லை. என் அம்மாதான்'' என்று கூறி விட்டு நடந்தார் குமாரசாமி.

> பெருமை பெறுவாய்! எப்படி? தியாகமின்றிப் பெருமை எதையும் ஆக்க முடியாது. உன் சுக சாதனங்களையும், போகங்களையும், பெயரையும், புகழையும் — வாழ்வையுமே தியாகம் செய்வாய். தியாகிகளான மக்களை இணைத்து ஒரு பாலத்தை அமைத்திடு. அதனை மிதித்துச் சென்று லட்சோப லட்சம் மக்கள் பிறவிக் கடலைத் தாண்டுவாராக.
>
> —ஸ்வாமி விவேகானந்தர்

''எனது கடனை இந்த மாதச் சம்பளத்தில் தரா விட்டால் நான் மிக மிகப் பொல்லாதவனாக இருப்பேன்.''

குமாரசாமி தமது சைக்கிளை எடுக்க மறந்து விட்டார். தெருவுக்குப் போனவர் மீண்டும் திரும்பி வந்து, சைக்கிளை எடுக்கப் போனார். அட். செக்ஷன் ஐயப்பன் மறித்துக் கொண்டு, ''எந்தா சாரு, நீங்கள் மதுரைக் காணப் போகுன்னுது'' என்றார்.

''ஆமாம், போகிறேன்.''

''அவட யாரங்கிலும் மரிக்கப் போயோ?''

''ஆமாம், தாயார்.''

''நிங்களு மதுரைக்குச் சென்று மடங்கி வருன்னது வரை நிங்களுடை சைக்கோளே ஞான் எடுத்து இருந்தோட்டே, பின்னே ஞான் மடக்கித் தரான்.''

சைக்கிள் பூட்டைத் திறக்கும் வேலை மிச்சம். சாவியை ஐயப்பனிடம் கொடுத்து விட்டுப் பஸ் ஸ்டாண்டுக்கு நடந்தார்.

அரை மணி நேரத்துக்குப் பின், அந்த அலுவலகத்தில் கூச்சல், கும்மாளம் — யாவும் தொடர்ந்து நடைபெற்றன. குமாரசாமியை அவர்கள் மறந்து விட்டார்கள். ஆனால் குமாஸ்தா கனகசபாபதி மட்டும் இரைந்து பேசிக் கொண்டிருந்தார்.

''எவன் அம்மா செத்தா எனக்கென்ன? நான் எதுக்காக அவர் வேலையையும் சேர்த்துப் பார்க்கணுமாம்? இந்த ஆபீஸிலே ஒவ்வொருத்தன் வேலையில்லாமல் இருக்கான். வேலை செய்கிறவன் தலையில்தான் அதிக வேலையா?'' என்று அலுத்துக் கொண்டார். இதயம் இருப்பவர்களும் இல்லாதவர்களும், ஒரு ஜீவன் உலகைவிட்டுப் பிரிந்ததைப் பற்றிக் கவலிக்கவே இல்லை.

குமாரசாமி மூன்றரை டிக்கெட்டுக்கு உரிய நாலு நபர்களுடன் எழும்பூர் நிலையத்தின் கவலையே உருவமாய் நின்று கொண்டிருந்தார். அவருக்கு ரூபாய் இருநூறு கடன் தருவதாக வாக்குக் கொடுத்த ராஸ்ஜியின் ஆள், வீட்டுக்கு வரவில்லை. ரயிலடிக்கு வருவான் என்று எதிர்பார்த்தார். பின்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் மோட்டாரில் வந்து இறங்கினான் ராஸ்ஜி அனுப்பிய அந்த ஆள்.

''நேரம் ஆகிப்போச்சு. இந்தாங்க பணம்.''

குமாரசாமி டிக்கெட் எடுக்க ஓடினார். அவரது குடும்பத்தை அழைத்துக் கொண்டு பணம் கொடுக்க வந்தவன் ரயில் பெட்டியை நாடிப் பிளாட்பாரத்துள் போனான்.

குமாரசாமி டிக்கெட் பெற்றுப் பெட்டிக்குள் வந்தபோது, ராஸ்ஜி அனுப்பிய நாலு கூடை மாம்பழம், சிறிய பெட் ரிக்கார்டர் ஒன்று, நிலைக் கண்ணாடி, இன்னும் சில பொருள்களை மதுரைக்கு எடுத்துப் போக வேண்டுமென்று ஆக்ஞை விதிக்கப்பட்டது.

குமாரசாமிக்குத் தலை சுற்றியது.

''சரியப்பா, கொடுத்து விடுகிறேன். நான் மாமனைக் கரைக்குப் போவேனா? ராஸ்ஜி வீட்டுக்குச் சாமானை அனுப்புவேனா?''

''ராஸ்ஜி மதுரைக்குத் தந்தி அடித்து விட்டார். இந்தச் சாமான்களை மதுரை ஸ்டேஷனில் வாங்க ஓர் ஆள் வரும்.''

குமாரசாமிக்குத் தாயின் நினைவு அறவே இல்லை. இருநூறு ரூபாய் கடன் பெற்றதற்காக இரண்டாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை ஆடாமல் அசங்காமல் பாதுகாத்துக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

''சரி, நாங்கள் சாமானைப் பார்த்துக் கொள்கிறோம்'' என்றாள் ஸ்ரீமதி குமாரசாமி.

அவரது பெண், ''அப்பா....ராமநாதன் மாமாவைப் பார்'' என்றாள்.

தம்மை ரயிலடி வரை வந்து வழியனுப்பும் அவரது பண்பாட்டை நினைத்துப் பெருமிதத்துடன், ''வாங்க, சார்! உங்க உதவிதான் வீடு. உங்க உதவிதான் பணம்....'' என்று பாராட்டிய குமாரசாமியின் பேச்சைக் காதில் வாங்காமல், ராமநாதன் தமக்குப் பின்னால் வந்த பெண்ணை, ''ஓடி வா.... ம், ஓடி வா....'' எனத் துரிதப்படுத்தினார். அந்தப் பெண் மயிலோ மணமேடைக்குப் போகிறவள் போல் ஒய்யார நடை போட்டு வந்தாள்.

''இவள் என் மைத்துனி. இவளுக்கு மதுரை வரை துணை இல்லை. நீங்க நல்ல துணை கிடைத்ததால் இன்றே அவளை அனுப்பலாம் என்று அழைத்து வந்தேன்.''

குமாரசாமிக்குப் பேசத் தோன்றவில்லை.

'' குமாரசாமி! திண்டுக்கல் நிலையத்தில் கமலா ஆயிரம் மலைவாழைப் பழம் வாங்கிக் கொடுக்க வேணும். பணம் அவள் தருவாள்'' என்றபோது ரயில் ஊதியது.

''சௌக்கியமாகப் போய் வாருங்கள்'' என்றபடியே தலைமைக் குமாஸ்தா தம் கையை ஆட்டினார். வண்டி நகர்ந்தது.

''ஆண்டவனே! இதுவா உலகம்?'' என்றார் குமாரசாமி.

ரயில் தாம்பரத்தில் நின்ற போது, ''குமாரசாமி'' என்று குரல் கேட்டது. எவன் தன்னைக் கூப்பிட்டு எதைக் கொடுப்பானோ என்று பயந்தார். அவரது கம்பெனி மானேஜர் எமன்தான் நின்று கொண்டிருந்தார்.

''என்ன சார்?'' என்றார் பணிவாக.

''முதல் வகுப்பிலே என் மாமியார் போகிறாள்....''

''சரி, போகட்டும்.''

''அவளை நீங்கள் திருச்சியில் வண்டி மாற்றி ராமநாதபுரத்துக்கு ஏற்றி விட வேண்டும்.''

''ஆகட்டும், சார்.''

அவரது தாயை நினைக்க அவருக்கு நேரம் ஏது? ராஸ்ஜி தந்த சாமான்கள் — ஆயிரம் மலை வாழைப் பழங்கள் வாங்க வேண்டிய பொறுப்பு — ராமநாதபுரத்துக்கு வண்டி மாற்ற வேண்டிய திருச்சி சந்திப்பில் உள்ள நேர வாய்ப்பு — இவ்வாறு நெஞ்சம் நினைவுமாகப் போய்க் கொண்டிருந்தார் தாயை இழந்த குமாஸ்தா குமாரசாமி.

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.




ஊ ஊ ஹூ... ஊ ஊ ஹூ

ஒரு டீஸ்பூன் அளவு உட்வார்ட்ஸ் 'கிரைப் வாட்டர்', உங்கள் குழந்தை அலறுவதை நிறுத்திவிட்டு ஆனந்தக் கனவு காண ஆரம்பித்து விடுகிறது. குழந்தையின் சிறு கோளாறுகள்— வயிற்றில் வாயுக் கோளாறு, பல்வலி போன்றவைகளிலிருந்து சுகம்பெற உட்வர்ட்ஸினால் மட்டும்தான் முடியும். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக, தாய்மார்கள் உட்வர்ட்ஸ் உபயோகித்திருக்கிறார்கள். நல்ல ஆரோக்கியமான குழந்தைகளை வளர்த்திருக்கிறார்கள்.

உட்வர்ட்ஸ் 'கிரைப் வாட்டர்'

100 வருஷங்களுக்கு மேலாக உலகெங்கிலும் உபயோகிக்கப்படுகிறது.



அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டுகள்: ஹெர்பர்ட்ஸன்ஸ் லிட். பம்பாய், கல்கத்தா & லக்னோ • டி. டி. கிருஷ்ணமாச்சாரி & கோ. மதராஸ் • எம். ஜி. ஷஹானி & கோ. (டில்லி) பிரைவேட் லிட்., டில்லி.

Alvarg AT 341-TM.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

